# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1982/34 - 2016 සැප්තැම්බර් මස 01 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.09.01

*1982/34 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 01 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1995 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க இலங்கைக் கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம்**

பிரிவு 4 (2) இன் படியான பிரசுரித்தல்

இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு (இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக, 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்காக இத்துடன் பிரசுரிக்கப்பட்டுள்ள "SLFRS -16 குத்தகை நியமத்தினை" 2019, சனவரி 01 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வழங்கியுள்ளது. இந்த நியமமானது இரண்டாயிரத்துப் பத்தொன்பதாம் ஆண்டு சனவரி மாதம் முதலாவது நாளில் அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் காலப்பகுதிகளை உள்ளடக்கும் நிதிக்கூற்றுக்களுக்கு நடைமுறைக்கு வரும்.

பேரவையின் கட்டளைப்படி,

**அருண அல்விஸ்,**
செயலாளர்.

இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம்
இல. 30 A,
மலலசேகர மாவத்தை,
கொழும்பு 07,
2016, செப்தெம்பர் 01 ஆந் திகதி.


இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கை கணக்கீட்டு நியமம் - SLFRS 16

## குத்தகைகள்

**உள்ளடக்கம்**

**அறிமுகம்**


| | |
|---|---|
| **நோக்கம்** | 1 |
| **நோக்கெல்லை** | 3 |
| **விலக்களிப்புகளை ஏற்பிசைவு செய்தல்** | 5 |
| **ஒரு குத்தகையை அடையாளம் காணுதல்** | 9 |
| **ஒரு ஒப்பந்தத்தின் பகுதிகளை வேறுபடுத்தல்** | 12 |
| குத்தகை பெறுனர் | 13 |
| குத்தகை தருனர் | 17 |
| **குத்தகைக் காலம்** | 18 |
| **குத்தகை பெறுனர்** | 22 |
| **ஏற்பிசைவு செய்தல்** | 22 |
| **அளவிடுதல்** | 22 |
| ஆரம்ப அளவீடு | 23 |
| பின்னரான அளவீடு | 29 |
| **முன்னிலைப்படுத்தல்** | 47 |
| **வெளிப்படுத்தல்** | 51 |
| **குத்தகை தருனர்** | 61 |
| **குத்தகைகளை வகைப்படுத்தல்** | 61 |
| **நிதிக்குத்தகைகள்** | 67 |
| ஏற்பிசைவு செய்தலும் அளவிடுதலும் | 67 |
| **செயற்பாட்டுக் குத்தகை** | 81 |
| ஏற்பிசைவு செய்தலும் அளவிடுதலும் | 81 |
| முன்னிலைப்படுத்தல் | 88 |
| **வெளிப்படுத்தல்** | 89 |
| நிதிக்குத்தகைகள் | 93 |
| தொழிற்பாட்டுக்குத்தகைகள் | 95 |
| **விற்பனை செய்து மீள்குத்தகையில் ஈடுபடும் ஊடுசெயல்கள்** | 98 |
| **மாற்றப்படும் சொத்துக்கள் ஒரு விற்பனையா என்பதை மதிப்பீடு செய்தல்** | 99 |
| மாற்றப்படும் சொத்துக்கள் ஒரு விற்பனை | 100 |
| மாற்றப்படும் சொத்துக்கள் ஒரு விற்பனை அல்ல | 103 |

**பின்னிணைப்புக்கள்**

**அ பதங்களின் சொற்பொருள் விளக்கம்**
**ஆ பிரயோகத்திற்கான வழிகாட்டல்**
**இ செயற்படுத்த கூடிய திகதியும் மாற்றமும்**
**ஈ ஏனைய நியமங்களுக்கான திருத்தங்கள்**

# இலங்கை கணக்கீட்டு நியமம் - SLFRS 16

## குத்தகை

இலங்கை கணக்கீட்டு நியமம் (இ.க.நி) – 16 (SLFRS 16) *குத்தகைகள்* நியமம் பந்தி 1 – 103 மற்றும் பின்னிணைப்பு அ – ஈ இல் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. சகல பந்திகளும் சமமான அதிகாரத்தைக் கொண்டுள்ளன. தடித்த எழுத்தில் உள்ள பந்திகள் பிரதான கொள்கைகளை கூறுகின்றன. முதன்முறையாக கணக்கீட்டு நியமங்களில் தோன்றும் பதங்கள் பின்னிணைப்பு "ஈ" இல் சரிவு எழுத்துக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஏனைய பதங்களின் சொற்பொருள் விளக்கங்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கான கலைச்சொல் அகராதியில் தரப்பட்டுள்ளன. SLFRS 16, அதன் நோக்கம், இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கான முகவுரை மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான கோட்பாடு வேலை சட்டகம் ஆகியவற்றின் அடிப்படையில் வாசிக்கப்பட வேண்டும். தெளிவான அல்லது வெளிப்படையான வழிகாட்டிகள் இல்லாதவிடத்து LKAS 8 (கணக்கீட்டு கொள்கைகள், மதிப்பீட்டு மாற்றங்கள் மற்றும் வழுக்கள்), கணக்கீட்டு கொள்ளைகளை தெரிவு செய்து பிரயோகிப்பதற்கான அடிப்படையை வழங்குகிறது.

### நோக்கம்

1 இந்த நியமனமானது குத்தகைகளை ஏற்பிசைவு செய்வதற்கும் அவற்றை, முன்னிலைப்படுத்துவதற்கும் அளவீடு செய்வதற்கும், குத்தகை பற்றிய தகவல்களை வழங்குவதற்கும் மற்றும் அவற்றை வெளிப்படுத்துவதற்கும் தேவையான கோட்பாடுகளை வழங்குகிறது. இந்நியமனத்தின் நோக்கமானது குத்தகை தருனரும் குத்தகை பெறுனரும் பொருத்தமான முறையில் குறித்த பரிவர்த்தனைகளை பிரதிபலிக்கும் விதத்தில் பொருத்தமான தகவல்களை வழங்குகின்றனர் என்பதை உறுதி செய்வதாகும். இந்தத் தகவல் நிதி அறிக்கையினை பயன்படுத்துபவர்களுக்கு, ஒரு நிதி உரிமத்தின் நிதி நிலைமை, நிதி பெறுபேறு மற்றும் காசுப்பாய்ச்சல் ஆகியவற்றில் குத்தகையின் விளைவை மதிப்பிடுவதற்கு அடிப்படையினை வழங்குகிறது.

2 இந்த நியமத்தை பிரயோகிக்கும் போது, ஒரு உரிமம் ஒப்பந்தத்தின் விதிகள், நிபந்தனைகளை மற்றும் அனைத்து தொடர்புபட்ட தகவல்கள் சூழ்நிலைகள் என்பவற்றை கருத்தில்கொள்ளும். ஒரு உரிமம் ஒத்த பண்புகள் மற்றும் ஒத்த சூழ்நிலைகளையுடைய ஒப்பந்தங்களுக்கு இந்த நியமத்தை தொடர்ந்து ஒரே சீராகப் பயன்படுத்தும்.

### நோக்கெல்லை

3 ஒரு உரிமம் பின்வருவன தவிர்த்து, உபகுத்தகையில் உள்ள "சொத்துக்களை பயன்படுத்துவதற்கான" உரிமம் உட்பட ஏனைய அனைத்து குத்தகைகளுக்கும் பிரயோகிக்கும்.

(அ) தாதுக்கள், எண்ணைய், இயற்கை எரிவாயு மற்றும் ஏனைய மீளுருவாக்கம் தன்மையற்ற வளங்களை பயன்படுத்துவதற்கு அல்லது அவற்றைப் பரிசோதிப்பதற்கான குத்தகை.

(ஆ) LKAS 41 – விவசாயம் நோக்கெல்லையில் உள்ள குத்தகை பெறுனரின் கட்டுப்பாட்டில் உள்ள உயிரியல் சொத்துக்களுக்கான குத்தகை.

(இ) IFRIC 12 – சேவை சலுகை ஏற்பாடுகள் நோக்கெல்லையில் குறிப்பிட்டுள்ள சேவை சலுகை ஏற்பாடுகள்

(ஈ) SLFRS 15 – வாடிக்கையாளருடன் மூலமான ஒப்பந்தம், வருமானம் நோக்கெல்லையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒரு குத்தகை தருனரால் வழங்கப்படும் புலமைச் சொத்தின் உரிமங்கள்.

(உ) LKAS 38 – அருவச்சொத்துக்கள் நோக்கெல்லையில் குறிப்பிப்பட்டுள்ளவாறு திரைப்படம், வீடியோ பதிவுகள், நாடகங்கள், எழுத்துப்பிரதிகள், காப்புரிமைகள் மற்றும் பதிப்புரிமைகள் போன்ற சொத்துக்கள் தொடர்பாக உரிம ஒப்பந்தத்தின் பிரகாரம் குத்தகை பெறுனருடைய (உரிமைகள்.)

4 ஒரு குத்தகை பெறுனர் பந்தி 3(உ)ல் உள்ளடங்காத அருவச்சொத்துக்களின் குத்தகைக்கு இந்த நியமத்தை விண்ணப்பிக்க முடியும் ஆனால் அது கோரப்படவில்லை.

## விதிவிலக்குகளை ஏற்பிசைவு செய்தல் (பந்தி ஆ3-ஆ8)

5 ஒரு குத்தகை பெறுனர் பந்திகள் 22-49 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை பின்வருவனவற்றிற்கு பிரயோகிப்பதில்லை என்ற தெரிவை மேற்கொள்ள முடியும்.

(அ) குறுகிய கால குத்தகைகள் மற்றும்

(ஆ) பந்தி ஆ3-ஆ8 ல் விவரித்துள்ளவாறு குறைந்த மதிப்புடைய சொத்துக்களுக்கான குத்தகை.

6 குத்தகை பெறுனர் ஒருவர் பந்தி 22-49 இல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை குறுகிய கால குத்தகைகள் அல்லது குறைந்த மதிப்புடைய குத்தகைகளுக்கு பிரயோகிப்பதில்லை என்ற தெரிவை மேற்கொள்வாராயின், அக்குத்தகையுடன் தொடர்புடைய கொடுப்பனவுகளை ஒரு செலவினமாக கணக்கிட வேண்டும். இதன்போது அச்செலவுகள், குத்தகை காலப்பகுதிக்குள் நேர்கோட்டு முறையிலோ அல்லது வேறு திட்டமிட்ட முறையின் அடிப்படையிலோ இணங்காணப்படும். வேறொரு திட்டமிட்ட முறையிலான அடிப்படையானது குத்தகை பெறுனரின் நிதியியல் அனுகூலங்களை, சிறப்பாக பிரதிபலிக்குமாயின் குத்தகை பெறுனர் அம்முறையை பிரயோகிப்பர்.

7 குத்தகை பெறுனர் குறுகிய கால குத்தகைக்கு பந்தி – 6 பிரயோகித்து பதிவுகளை மேற்கொள்வாராயின் இந்நியமனத்திற்கான பின்வரும் சந்தர்ப்பங்களில் அக்குத்தகையை புதிய குத்தகையாகக் கருதுவர்.

(அ) குத்தகையில் திருத்தங்கள் ஏற்படும் போது

(ஆ) குத்தகை விதிமுறைகளில் மாற்றங்கள் ஏற்படும் போது
(உதாரணம்:- குத்தகை பெறுனர் குத்தகை விதிமுறைகளில் முன்னர் உள்ளடங்கப்படாத ஒரு தேர்வு உரிமையை நிறைவேற்றுதல்)

8 குறுங்காலக் குத்தகைளின் தெரிவானது ‘‘பயன்படுத்துவதற்கான உரிமை’’ தொடர்புபட்ட அடிப்படை சொத்தின் வர்க்கத்தினால் மேற்கொள்ளப்படும். அடிப்படை சொத்துக்களின் வர்க்கம் என்பது ஒத்த தன்மையுடையதும் ஒரு உரிமத்தின் ஊடுசெயல்களில் பயன்படுத்துவதற்குமான அடிப்படையான சொத்துக்களை வகைப்படுத்தல். குறைந்த மதிப்புடைய அடிப்படை சொத்துக்களுக்கான குத்தகைந் தேர்வானது ‘‘குத்தகை மூலமான குத்தகை’’ அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

## ஒரு குத்தகையை அடையாளம் காணுதல் (பந்திகள் ஆ9 - ஆ33)

9 ஒரு உரிமம் ஒரு ஒப்பந்தத்தின் தொடக்கத்தில், அந்த ஒப்பந்தம் குத்தகையா அல்லது ஒரு குத்தகையை கொண்டிருக்கிறதா என்பதை மதிப்பிடும். ஒரு ஒப்பந்தமானது அடையாளம் காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டினை கட்டுப்படுத்தும் உரிமையை குறிப்பிட்ட காலப்பகுதிக்கு குறிப்பிட்ட பெறுமதியில் மாற்றுவதாக தெரிவிக்குமாயின் அது குத்தகை ஒப்பந்தம் அல்லது குத்தகை உள்ளடக்கப்பட்ட ஒப்பந்தமாகும். ஒரு ஒப்பந்தமானது ஒரு குத்தகையா அல்லது குத்தகை உள்ளடக்கப்பட்ட ஒப்பந்தமா என்பதை மதிப்பிடுவதற்கான வழிகாட்டல்கள் பந்தி ஆ9 – ஆ31 இல் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

10 ஒரு காலப்பகுதியானது அடையாளம் காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டு பெறுமதியினால் விபரிக்கப்படக்கூடும் (எடுத்துக்காட்டாக பொருளை தயாரிக்க பயன்படுத்தப்படும் உபகரணங்களின் உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கை).

11 ஒப்பந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மாற்றப்பட்டால் மட்டும், ஒரு உரிமம் அந்த ஒப்பந்தம் ஒரு குத்தகையா அல்லது குத்தகை உள்ளடக்கப்பட்ட ஒப்பந்தமா என்பதை மறுமதிப்பீடு செய்யும்.

## ஒரு ஒப்பந்தத்தின் ஆக்கக் கூறுகளை வேறுபடுத்தல்

12 பந்தி 15இல் உள்ளவாறு நடைமுறைக்கு உகந்த நிபந்தனையை பிரயோகிக்காதவிடத்து, ஒரு உரிமம் குத்தகை அல்லது குத்தகை உள்ளடக்கப்பட்ட ஒப்பந்தமொன்றின் குத்தகையை குத்தகை அல்லாத கூறுகளில் இருந்து வேறுபடுத்தி ஒவ்வொரு குத்தகை ஆக்கக் கூறுகளிற்கும் கணக்கு பதிவினை மேற்கொள்ளும். பந்திகள் ஆ32 – ஆ33 ஒப்பந்தத்தின் ஆக்கக் கூறுகளை வேறுபடுத்துவதற்கான வழிகாட்டுதலை பரிந்துரைக்கிறது.

## குத்தகை பெறுனர்

13 ஒரு குத்தகை ஆக்கக்கூறு மற்றும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குத்தகை அல்லது அல்லாத குத்தகை ஆக்கக் கூறுகளை கொண்ட ஒப்பந்தம் ஒன்றிற்காக, ஒரு குத்தகை பெறுனர் ஒப்பந்தத்தில் உள்ள ஒவ்வொரு கூறுகளிற்குமான பெறுமதியை ஒதுக்கீடு செய்வார்.

இவ்வொதுக்கீடானது குத்தகை ஆக்கக்கூறுக்கான சம்மந்தப்பட்ட தனிவிலை அடிப்படையிலும் குத்தகை அல்லாத கூறுகளுக்கு அதன் தனித்த விலைகளின் கூட்டுத்தொகை அடிப்படையிலும் மேற்கொள்ளப்படும்.

14 குத்தகை மற்றும் குத்தகை அல்லாத ஆக்கக்கூறுகளுக்கான சம்மந்தப்பட்ட விலையானது குத்தகை வழங்குனர் அல்லது அதை ஒத்த வழங்குனரால் உரிமமொன்றிடம் அவ் ஆக்கக்கூறுகளுக்கு அல்லது அதை ஒத்த ஆக்கக் கூறுகளுக்காக அறவிடப்படும் விலையின் அடிப்படையில் வெவ்வேறாக தீர்மானிக்கப்படும்.

மேற்குறிப்பிட்டவாறு ஒரு தனிவிலையானது உடனடியாக கிடைக்கவில்லை என்றால் குத்தகை பெறுனர் உள்வாங்க கூடிய தகவல்களை அதியுட்சமாக பயன்படுத்தி தனிவிலையை மதிப்பிடுவார்.

15 ஒரு நடைமுறைக்கு உகந்த கொள்கை என்ற வகையில் ஒரு குத்தகை பெறுனர் ஒத்த வர்க்க சொத்துக்களை அதன் குத்தகை அல்லாத ஆக்கக்கூறுகளிலிருந்து வேறுப்படுத்துவதில்லை என்ற தெரிவை மேற்கொள்ள முடியும். மேலும் அதற்கீடாக ஒவ்வொரு குத்தகை ஆக்கக்கூறு மற்றும் அது தொடர்புடைய குத்தகை அல்லாத ஆக்கக்கூறுகளை ஒரு தனி குத்தகை ஆக்கக்கூறாக கணக்கு பதிவை மேற்கொள்வார். ஒரு குத்தகை பெறுனர் மேற்குறிப்பிட்ட நடைமுறைக்கு உகந்த கொள்கையை SLFRS 9 "நிதியியல் சாதனம்" பந்தி 4.3.3 இல் உள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் ஒன்றிணைந்த தபதி நிதிச் சாதனங்கள் மீது பிரயோகிக்க மாட்டார்.

16 பந்தி 15 இல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைக்கு உகந்த கொள்கை பிரயோகிக்கப்படவில்லை எனின், குத்தகை பெறுனர் ஒருவர் குத்தகை அல்லாத கூறுகளுக்கு ஏனைய பொருத்தமான நியமங்களை பிரயோகித்து கணக்கீட்டை மேற்கொள்வர்.

## குத்தகை தருனர்

17 ஒரு குத்தகை ஆக்கக்கூறு மற்றும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குத்தகை அல்லது குத்தகை அல்லாத கூறுகளை கொண்ட ஒரு ஒப்பந்தத்திற்காக ஒரு குத்தகை தருனர் LKAS 15 இல் உள்ளவாறு பந்திகள் 73-90 பிரயோகித்து ஒப்பந்தத்தின் பெறுமதிகான ஒதுக்கீட்டை மேற்கொள்வார்.

## குத்தகை காலம் (ஆ34 – ஆ41)

18 ஒரு உரிமம் பின்வருவனற்றுடன் சேர்ந்து ஒரு குத்தகை காலப்பகுதியை ரத்து செய்ய முடியாத காலப்பகுதியாக தீர்மானிக்கும்.

(அ) குத்தகை பெறுனர் ஒருவர் குத்தகையை நீடிப்பதற்கான தெரிவை நிறைவேற்றுவதற்கான சீர்மதிப்புமான நிச்சயத்தன்மை கொண்டிருப்பின், அத்தெரிவை காலப்பகுதி உள்ளடக்கி இருக்கும்.

(ஆ) குத்தகை பெறுனர் ஒருவர் குத்தகையை முறிப்பதில்லை என்ற தெரிவை நிறைவேற்றுவதற்கான சீர்மதிப்புமான நிச்சயத்தன்மையை கொண்டிருப்பின், அத்தெரிவை காலப்பகுதி உள்ளடக்கி இருக்கும்

19 ஒரு குத்தகை பெறுனர் குத்தகையை நீடிப்பதற்கான தெரிவை அல்லது குத்தகையை முறிப்பதில்லை என்ற தெரிவை நிறைவேற்றுவதற்கான சீர்மதிப்புமான நிச்சயத்தன்மையை கொண்டிருக்கிறாரா என்பதை மதிப்பிடும்போது, ஒரு உரிமம் பந்திகள் (ஆ37 – ஆ40 ) இல் விவரித்துள்ளவாறு குத்தகை பெறுனர் ஒருவர் குத்தகையை நீடிப்பதற்கான தெரிவை அல்லது குத்தகையை முறிப்பதில்லை என்ற தெரிவை நிறைவேற்றுவதற்கான பொருளாதார துாண்டலை உருவாக்கும் சூழ்நிலைகள் மற்றும் அது தொடர்புடைய அனைத்து தரவுகளையும் கருத்தில் கொள்ளும்.

20 ஒரு குத்தகை பெறுனர் பின்வரும் குறிப்பிடத்தக்க நிகழ்வு அல்லது சுழ்நிலையில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்படும் போது, ஒரு குத்தகையை நீடிப்பதற்கான தெரிவை அல்லது குத்தகையை முறிப்பதில்லை என்ற தெரிவை நிறைவேற்றுவதற்கான சீர்மதிப்புமான நிச்சயத்தன்மையை மறுமதிப்பீடு செய்வார்.

(அ) குத்தகை பெறுனரின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டது, மற்றும்

(ஆ) குத்தகை காலப்பகுதியை நிர்ணயிக்கும் போது, முன்னர் உள்ளடக்கப்பட்டிருக்காத ஒரு தெரிவை நிறைவேற்றுவதற்கு அல்லது குத்தகை காலப்பகுதியை நிர்ணயிக்கும் போது, முன்னர் உள்ளடக்கப்பட்டிருக்காத ஒரு தெரிவை நிறைவேற்றாது விடுவது தொடர்பாக குத்தகை பெறுனர் சீர்மதிப்புாமான அளவில் உறுதியாகவுள்ளாரா என்பதை பாதிக்கும். (பந்தி ஆ 41 இல் உள்ளவாறு)

21 இரத்துச்செய்ய முடியாத குத்தகை காலப்பகுதில் ஏதாவது மாற்றம் ஏற்படின் ஒரு உரிமம் குத்தகை காலப்பகுதியை மீளமைப்பு செய்யும். உதாரணமாக, இரத்துச்செய்ய முடியாத குத்தகை காலப்பகுதில் பன்வறும் மாற்றங்கள் ஏற்படலாம்..

(அ) குத்தகை பெறுனர் ஒருவர் உரிமத்தின் குத்தகை கால எல்லை நிர்ணயத்தில் உள்ளடக்கப் படாத தெரிவை நிறைவேற்றினால்,

(ஆ) குத்தகை பெறுனர் ஒருவர் உரிமத்தின் குத்தகை கால எல்லை நிர்ணயத்தில் உள்ளடக்கப் படாத தெரிவை நிறைவேற்றாது விடின்,

(இ) குத்தகை பெறுனர் ஒருவர் உரிமத்தின் குத்தகை கால எல்லை நிர்ணயத்தில் உள்ளடக்கப் படாத தெரிவை நிறைவேற்றும் வகையில் ஒருநிகழ்வு அவரை கடமைப்படுத்துமாயின்,

(ஈ)) குத்தகை பெறுனர் ஒருவர் உரிமத்தின் குத்தகை கால எல்லை நிர்ணயத்தில் உள்ளடக்கப் படாத தெரிவை நிறைவேற்ற முடியாதவாறு அவரை தடைசெய்யுமாயின்.

## குத்தகை பெறுனர்

## ஏற்பிசைவு செய்தல்

22 ஆரம்பமாகும் திகதியில், ஒரு குத்தகை பெறுனர் சொத்தினை பயன்படுத்துவதற்கான உரிமம் ஒன்றினையும் குத்தகை பரிப்பு ஒன்றினையும் ஏற்பிசைவு செய்வர்.

## அளவீடு செய்தல்

## ஆரம்ப அளவீடு

*''சொத்தினைப் பயன்படுத்தும்'' உரிமத்துக்கான ஆரம்ப அளவீடு*

23 ஆரம்ப திகதியில், ஒரு குத்தகை பெறுனர் சொத்தினை பயன்படுத்துவதற்கான உரிமையை அதன் கிரய பெறுமதியில் அளவீடு செய்வார்.

24 சொத்தினை பயன்படுத்துவதற்கான உரிமையின் கிரயம் பின்வருவனவற்றை உள்ளடக்கி இருக்கும்.

(அ) பந்தி 26 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குத்தகை பரிப்பின் ஆரம்ப அளவீட்டு பெறுமதி.

(ஆ) ஆரம்ப திகதியிலோ அல்லது அதற்கு முன்னரோ மேற்கொள்ளப்பட்ட குத்தகை சலுகை நீங்கலான குத்தகைக் கொடுப்பனவுகள்

(இ) குத்தகை பெறுனரால் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப நேர்ச் செலவுகள், மற்றும்

(ஈ) குத்தகை நிபந்தனை மற்றும் விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிலைக்கு கொண்டுவரும் வகையில் சொத்துக்களை மீளமைக்கவோ அல்லது சொத்து அமைந்திருக்கும் தளத்தை மீளமைக்கும் வகையில் அச்சொத்தை அகற்றவோ அல்லது சொத்தை உதிரிகளாக கழற்றவோ குத்தகை பெறுனரால் மேற்கொள்ளப்படவிருக்கும் மதிப்பீடு செய்யப்பட்ட செலவுகள்.

25 குத்தகை பெறுனர் தமக்கு மேற்குறிப்பிட்ட செலவுகளுக்கான பரிப்பு ஏற்படும் போது பந்தி 24(ஈ) இல் விபரிக்கப்பட்டுள்ள அச்செலவுகளை, சொத்துக்களை பயன்படுத்துவதற்கான உரிமத்தின் கிரயத்தினுடைய ஒரு பகுதியாக ஏற்பிசைவு செய்வார். ''சொத்துக்களை பயன்படுத்துவதற்கான'' உரிமையின் மூலம் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் இருப்புக்களை உற்பத்தி செய்திருப்பின் அதன் விளைவாக ஏற்பட்ட செலவுகளுக்கு LKAS 2 *இருப்புக்கள்* நியமத்தை பிரயோகிப்பர். LKAS 2 இற்கு அமைவாக ஏற்பிசைவு செய்யப்பட்ட மேற்குறிப்பிட்ட கிரயங்களுக்கான பரிப்பானது LKAS 37 *ஏற்பாடுகள் நிகழத்தக்க பரிப்புகள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள்* நியமத்தைப் பிரயோகித்து ஏற்பிசைவு மற்றும் மதிப்பீடு செய்யப்படும்.

*குத்தகைப் பரிப்பின் ஆரம்ப அளவீடு*

26 குத்தகை பெறுனர் ஒருவர் குத்தகை பரிப்புக்களை, குறித்த திகதியில் செலுத்தப்படாத குத்தகைக் கொடுப்பனவுகளின் இற்றைப் பெறுமதியில் ஆரம்ப திகதியில் மதிப்பீடு செய்வார். குத்தகைக் கொடுப்பனவுகளானது குத்தகையில் குறிப்பிடப்பட்டுள்ள உடனடியாக பெறக்கூடிய வட்டிவீதத்தை கொண்டு கழிவிடப்படும்.

அவ்வாறு வட்டி வீதத்தை தீர்மானிக்க முடியாதுவிடின் குத்தகை பெறுனர் அவரின் அதிகரிக்கும் முறையிலான கடன் வட்டி வீதத்தை பயன்படுத்துவார்.

27 ஆரம்ப திகதியில் குத்தகை பரிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள குத்தகைக் கொடுப்பனவுகளானது ''சொத்துக்களை பயன்படுத்துவதற்கான'' உரிமை தொடங்கப்பட்ட திகதியில் செலுத்தப்படாத பின்வரும் கொடுப்பனவுகளை உள்ளடக்கியிருக்கும்.

(அ) பெறவிருக்கும் குத்தகை சலுகை நீங்கலான நிலையான கொடுப்பனவுகள் (பந்தி ஆ42 விவரித்துள்ள நிலையான கொடுப்பனவுகள் உள்ளடங்களாக)

(ஆ) சுட்டி அல்லது வீதத்தில் சார்ந்திருக்கும் நிலைமாறும் குத்தகைக் கொடுப்பனவுகளானது (பந்தி 28 இல் விபரிக்கப்பட்டுள்ளது)ஆரம்ப திகதியில் உள்ள சுட்டி அல்லது வீதத்தை பயன்படுத்தி ஆரம்பந்தில் அளவீடு செய்யப்படும்.

(இ) உத்தரவாத எஞ்சிய பெறுமதியின் கீழ் குத்தகை பெறுனர் மூலம் செலுத்தப்படவிருக்கும் கொடுப்பனவுகளென எதிர்பார்க்கப்படும் தொகை

(ஈ) குத்தகை பெறுனர் கொள்முதல் செய்வதற்கான தெரிவை நிறைவேற்றுவதற்கான சீர்மதிப்புமான நிச்சயத்தன்மையை கொண்டிருப்பின் அத்தெரிவிற்கான நிறைவேற்றுவதற்கான விலை. (பந்திகள் ஆ37 - ஆ40 இல் விவரித்துள்ள காரணிகளை கருத்தில் கொள்ளல்) மற்றும்

(உ) குத்தகை காலமானது குத்தகை பெறுனரால் குத்தகையை முறிப்பதற்கான தெரிவை நிறைவேற்றுதலை பிரதிபலிக்குமாயின் அக்குத்தகை முறித்தலுக்கான அபராத தொகை.

28 பந்தி 27(ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒரு சுட்டியில் அண்ணளவான ஒரு விகிதத்தில் சார்ந்துள்ள நிலைமாறும் குத்தகைக் கொடுப்பனவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கி இருக்கும். எடுத்துக்காட்டாக ஒரு நுகர்வோர் விலை சுட்டியுடன் இணைக்கப்பட்ட கொடுப்பனவுகள் மட்டக்குறி வட்டி வீதத்துடன் (உதாரணமாக LIBOR) அளவை தொடர்பான கொடுப்பனவுகள் வாடகை விகித மாற்றத்தை பிரதிபலிக்கம் வகையிலான மாறும் சந்தை பெறுமதியிலான வாடகை விகிதங்கள்.

## பின்னரான அளவீடுகள்

*சொத்தை பயன்படுத்துவதற்கான உரிமையை பின்னரான காலங்களில் அளவிடுதல்*

29 தொடங்கப்பட்ட திகதிக்கு பிறகு ஒரு குத்தகை பெறுனர் பந்திகள் 34 மற்றும் 35 விபரிக்கப்பட்டுள்ள அளவீட்டு முறைகளை பிரயோகிக்காதவிடத்து கிரய மாதிரியில் சொத்தை பயன்படுத்துவதற்கான உரிமையை அளவீடு செய்வார்.

## கிரய மாதிரி

30 ஒரு குத்தகை பெறுனர் கிரய மாதிரியில் சொத்தை பயன்படுத்துவதற்கான உரிமையை பின்வருவருவன நீங்கலாக கிரயத்தில் அளவீடு செய்வார்.

(அ) திரண்ட பெறுமான தேய்வும் சொத்தின் திரண்ட சேத இழப்புகளும்,

(ஆ) பந்தி 36(இ)ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குத்தகை பரிப்பினை மீள் மதிப்பீடு செய்வதற்கான சீராக்கங்கள்.

31 ஒரு குத்தகை பெறுனர் சொத்தை பயன்படுத்துவதற்கான உரிமையை பெறுமான தேய்வை மேற்கொள்ளும் போது பந்தி 32 இல் உள்ள நிபந்தனைகளுடன் SLFRS 16 ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் இல் உள்ள தேய்வு தேவைப்பாடுகளை பிரயோகிப்பார்.

32 குத்தகையானது சொத்தின் உரிமையை குத்தகைகால முடிவில் மாற்றம் செய்யுமாயின் அல்லது சொத்தினை பயன்படுத்துவதற்கான உரிமையின் கிரயமானது குத்தகை பெறுனர் கொள்வனவு தெரிவை நிறைவேற்றுவார் என்பதை பிரதிபலிக்குமாயின் அக் குத்தகை பெறுனர் சொத்தினை பயன்படுத்துவதற்கான உரிமையை தொடக்கத் திகதியில் இருந்து அச்சொத்துக்களின் பயன்தரு ஆயட்கால முடிவுவரை பெறுமான தேய்வை மேற்கொள்வார். இல்லாவிடின் அக்குத்தகை பெறுனர் சொத்தினை பயன்படுத்துவதற்கான உரிமையை தொடக்கத் திகதியில் இருந்து அச்சொத்துக்களின் பயன்தரு ஆயுட்கால முடிவுவரை பெறுமான தேய்வை மேற்கொள்வார் இல்லாவிடின் அக் குத்தகை பெறுனர் சொத்தினை பயன்படுத்துவதற்கான உரிமையை தொடக்கத்திகதியில் இருந்து அச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட் காலம் அல்லது குத்தகை காலம் ஆகியவற்றில் எது குறுகியதோ அதுவரை பெறுமான தேய்வை மேற்கொள்வார்.

33 குத்தகை பெறுனர் ஒருவர் சொத்தினை பயன்படுத்துவதற்கான உரிமை பெறுமதி இழக்கப்பட்டுள்ளதா மற்றும் அவ்வாறு இனங்கானப்பட்ட இழக்கப்பட்ட பெறுமதிக்கு கணக்கீட்டை மேற்கொள்ள வேண்டுமா எனத் தீர்மானிக்க அவர் LKAS 36 ஐ பிரயோகிப்பார்.

34 ஒரு குத்தகை பெறுனர் LKAS 40- முதலீட்டு சொத்துக்கள் இன் பிரகாரம் அதன் முதலீட்டு சொத்துக்களுக்கு சீர்மதிப்பு முறையை பிரயோகிப்பார். அவ்வாறே LKAS 40 இல் உள்ள முதலீட்டு சொத்துக்களின் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யும் சொத்தினை பயன்படுத்துவதற்கான உரிமைக்கு அவர் சீர்மதிப்பு முறையை பிரயோகிப்பார்.

35 குத்தகை பெறுனர் ஒருவர் SLFRS 16 இன் பிரகாரம் மறுமதிப்பீட்டு மாதிரியை குறிப்பிட்ட வர்க்கத்தை சேர்ந்த ஆதனம் பொறிதொகுதி மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றை பயன்படுத்துவதற்கான உரிமைக்கு பிரயோகிப்பாரின் குறிப்பிட்ட வர்க்கத்தை சேர்ந்த ஆதனம் பொறி தொகுதி மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றை பயண்படுத்துவதற்கான அனைத்து உரிமைக்கும் மறுமதிப்பீடு முறையை பிரயோகித்தல் என்னும் தெரிவை மேற்கொள்ள முடியும்.

*குத்தகை பரிப்புக்களுக்கான பின்னரான அளவீடுகள்*

36 ஆரம்ப திகதிக்குப் பிறகு ஒரு குத்தகை பெறுனர் குத்தகை பரிப்பினை பின்வருவனவற்றின் மூலம் அளவிட வேண்டும்.

(அ) குத்தகை பரிப்புக்கான வட்டியை பிரதிபலிக்கும் வகையில் முன்கொண்டுசெல்லப்படும் பெறுமதியை அதிகரித்தல்

(ஆ) மேற்கொள்ளப்பட்ட குத்தகைக் கொடுப்பனவுகளை பிரதிபலிக்கும் வகையிலான குறைவடைந்து செல்லும் கணக்கில் முன்கொண்டுசெல்லும் பெறுமதி மற்றும்

(இ) ஏதாவது ஒரு மீள்மதிப்பீட்டையோ அல்லது பந்திகள் 39 – 46 இல் குறிப்பிடப்பட்ட குத்தகை மாற்றங்களையோ பிரதிபலிக்கும் அல்லது திருத்தப்பட்ட நிலையான குத்தகைக் கொடுப்பனவுகளை (பந்தி 46(ஆ) பார்க்கவும்) பிரதிபலிக்கும் வகையிலான மீள்மதிப்பீட்டு முன்கொண்டு செல்லும் பெறுமதி.

37 குத்தகை காலத்தில் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் உள்ள குத்தகை பரிப்பு மீதான வட்டி தொகையானது எஞ்சிய குத்தகை பரிப்பு தொகை மீதான ஒரு நிலையான காலப்பகுதிக்கான வட்டி வீதத்தை உருவாக்கும். காலப்பகுதிக்கான வட்டி வீதமானது பந்தி 26இல் விபரிக்கப்பட்டுள்ளவாறு கழிவீடு செய்யப்பட்ட வீதம் அல்லது பொருத்தமாயின் பந்தி 41, பந்தி 43 அல்லது பந்தி 45(இ) விபரிக்கப்பட்டுள்ளவாறு திருத்தப்பட்ட கழிவீடு செய்யப்பட்ட வீதம்.

38 தொடங்கப்பட்ட திகதிக்குப் பிறகு, ஏனைய பொருத்தமான நியமங்களை பிரயோகித்து வேறொரு சொத்தின் முன் கொண்டு செல்லப்படும் பெறுமதியானது பின்வரும் இரு செலவுகளை உள்ளடக்கப்படவில்லையாயின் ஒரு குத்தகை பெறுனர் அவற்றை இலாப நட்டத்தில் ஏற்பிசைவு செய்வார்.

(அ) குத்தகை பரிப்பு மீதான வட்டி மற்றும்

(ஆ) குறிப்பட்ட காலப்பகுதியில் ஒரு நிகழ்வோ அல்லது நிபந்தனையோ மாறும் குத்தகைக் கொடுப்பனவை தூண்டுமாயின், அக்கொடுப்பனவுகள் குத்தகை பரிப்புக்கான அளவீட்டில் சேர்க்கப்படமாட்டாது.

## குத்தகை பரிப்பினை மீள் மதிப்பீடு செய்தல்

39 ஆரம்ப திகதிக்கு பிறகு ஒரு குத்தகை பெறுனர் குத்தகைக் கொடுப்பனவு மாற்றத்தை பிரதிபலிக்கும் வகையில், குத்தகை பரிப்பனை மீள் மதிப்பீடு செய்வதற்காக பந்தி 40 – 43ஐ பிரயோகிப்பார்.

ஒரு குத்தகை பெறுனர் குறித்த குத்தகை பரிப்பினது மீள்மதிப்பீட்டு தொகையை சொத்தினை பயன்படுத்துவற்கான உரிமைக்கான ஒரு சீராக்கமாக ஏற்பிசைவு செய்வார்.

எவ்வாறாயினும் சொத்தினை பயன்படுத்துவதற்கான உரிமையின் முன் கொண்டு செல்லப்படும் பெறுமதியானது பூஜ்ஜியத்திற்கு குறைக்கப்படும். குத்தகை பரிப்பின் அளவீட்டில் மேலும் குறைப்பு

ஏற்பட்டால். ஒரு குத்தகை பெறுனர் எஞ்சியிருக்கும் மீள் மதிப்பீட்டு தொகையை இலாபம் அல்லது நட்டத்தில் கணக்கிட வேண்டும்.

40 பின்வரும் ஏதாவது ஒரு நிகழ்விற்கு, ஒரு குத்தகை பெறுனர், ஒரு திருத்தப்பட்ட கழிவீடு செய்த வீதத்தை பயன்படுத்தி திருத்தப்பட்ட குத்தகைக் கொடுப்பனவை கழிவீடு செய்வதன் மூலம் குத்தகை பரிப்பினை மீள்மதிப்பீடு செய்வார்.

(அ) பந்திகள் 20 – 21இல் விபரிக்கப்பட்டுள்ளவாறு, குத்தகை காலத்தில் மாற்றம் ஏற்படின், ஒரு குத்தகை பெறுனர் திருத்தப்பட்ட குத்தகை காலத்தின் அடிப்படையில் திருத்தப்பட்ட குத்தகைக் கொடுப்பனவை தீர்மானிப்பார். அல்லது

(ஆ) அடிப்படை சொத்தை கொள்வனவு செய்யும் தெரிவை மதிப்பிடுவதில் மாற்றம் ஏற்படின், பந்திகள் 20 – 21இல் விபரிக்கப்பட்டுள்ளவாறு, நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு மதிப்பீடு செய்யப்படும். அடிப்படை சொத்தை கொள்வனவு செய்யும் தெரிவின் கீழ் ஒரு குத்தகை பெறுனர் செலுத்தப்பட உள்ள தொகையில் ஏற்படும் மாற்றத்தை பிரதிபலிக்கும் திருத்தப்பட்ட குத்தகைக் கொடுப்பனவை தீர்மானிப்பார்.

41 ஒரு குத்தகை பெறுனர் பந்தி 40ஐ பின்பற்றும் போது ஒரு திருத்தப்பட்ட கழிவீடு செய்த வீதத்தை எஞ்சிய குத்தகை காலத்திற்கு குத்தகையில் உள்ளடக்கப்பட்டுள்ள வட்டி விகிதமாக தீர்மானிப்பார். குறிப்பிட்ட அவ்வட்டி விகிதமானது உடனடியாக தீர்மானிக்கக்கூடிய வீதம் அல்லது குத்தகையில் உள்ளடக்கப்பட்டுள்ள வட்டி வீதத்தை உடனடியாக தீர்மானிக்க முடியாதுவிடின், மறுமதிப்பீட்டுத் திகதியில் குத்தகை பெறுனரின் அதிகரிக்கும் கடன் வீதமாகும்.

42 பின்வரும் சந்தர்ப்பங்களில் ஒரு குத்தகை பெறுனர், திருத்தப்பட்ட குத்தகைக் கொடுப்பனவை கழிவீடு செய்வதன் மூலம் குத்தகை பரிப்பினை மீளமதிப்பீடு செய்வார்.

(அ) உத்தரவாதமுள்ள எஞ்சிய தொகையின் கீழ் செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படும் தொகையில் ஏற்படும் மாற்றம். உத்தரவாதமுள்ள எஞ்சிய தொகையின் கீழ் செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படும் தொகையில் ஏற்படும் மாற்றத்தை பிரதிபலிக்கும் வகையில் ஒரு குத்தகை பெறுனர் திருத்தப்பட்ட குத்தகைக் கொடுப்பனவைத் தீர்மானிப்பார்.

(ஆ) குத்தகைக் கொடுப்பனவை தீர்மானிக்க பயன்படுத்திய சுட்டி அல்லது வீதத்தில் ஏற்படும் மாற்றத்தின் காரணமாக எதிர்கால குத்தகைக் கொடுப்பனவுகளில் மாற்றம் ஏற்படும். உதாரணமாக, சந்தை வாடகை வீதத்தின் மதிப்பாய்வினை தொடர்ந்து அச்சந்தை வாடகை தொகையின் மாற்றங்களை பிரதிபலிக்கும் வகையிலான ஒரு மாற்றம். காசுப்பாய்ச்சலில் மாற்றம் ஏற்படும்போது மட்டுமே (அதாவது, குத்தகைக் கொடுப்பனவு திருத்தங்கள் அமுலுக்கு வரும்போது) திருத்தப்பட்ட குத்தகைக் கொடுப்பனவை பிரதிபலிக்கும் வகையில் குத்தகை பரிப்பினை மீள்மதிப்பீடு செய்வார். ஒரு குத்தகை பெறுனர், எஞ்சிய குத்தகை காலத்திற்கான திருத்தப்பட்ட குத்தகைக் கொடுப்பவை திருத்தப்பட்ட ஒப்பந்த கொடுப்பனவின் அடிப்படையில் தீர்மானிப்பார்.

43 பந்தி 42ஐ பின்பற்றும்போது ஒரு மாறும் வட்டி வீதத்தில் ஏற்பட்ட மாற்றத்தினால் குத்தகைக் கொடுப்பனவில் ஏற்படும் மாற்றங்கள் தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில், ஒரு குத்தகை பெறுனர் மாறாத வட்டி வீதத்தை பயன்படுத்துவார் இதன்போது வட்டி வீதத்தில் ஏற்படும் மாற்றத்தை பிரதிபலிக்கும் வகையில் ஒரு குத்தகை பெறுனர் திருத்தப்பட்ட கழிவீடு செய்த வீதத்தை பயன்படுத்துவார்.

## குத்தகை திருத்தங்கள்

44 பின்வரும் இரு நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால், ஒரு குத்தகையில் ஏற்படும் திருத்தத்தை ஒரு குத்தகை பெறுனர்,தனி குத்தகையாக கணக்கீடு செய்வார்.

(அ) திருத்தமானது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ''சொத்துக்களை பயன்படுத்துவதற்கான'' உரிமையை இணைப்பதன் மூலம் குத்தகையின் நோக்கெல்லையை விஸ்தரித்தல்.

(ஆ) விஸ்தரிக்கப்பட்ட நோக்கெல்லைக்கான தனிவிலையுடன் ஈடான தொகை மற்றும் குறித்த ஒப்பந்தத்தின் சந்தர்ப்பங்களை பிரதிபலிக்கும் வகையில் தனிவிலையில் மேற்கொள்ளப்படும் பொருத்தமான சீர்திருத்தங்கள் என்பன மூலம் குத்தகை பெறுமதி அதிகரித்தல்.

45 ஒரு குத்தகை திருத்தம் அமுலுக்கு வரும் திகதியில் அத்திருத்தம் ஒரு தனி குத்தகையாக கணக்கு வைக்கப்படவில்லையாயின், ஒரு குத்தகை பெறுனர்

(அ) பந்திகள் 13 – 16ஐ பிரயோகித்து திருத்தப்பட்ட ஒப்பந்தத்தின் பெறுமதிக்கு ஒதுக்கீடு செய்வார்.

(ஆ) பந்திகள் 18 – 19ஐ பிரயோகித்து திருத்தப்பட்ட குத்தகைக்கான குத்தகை காலத்தை தீர்மானிப்பார். மற்றும்

(இ) திருத்தப்பட்ட கழிவீடு செய்த வீதத்தை பயன்படுத்தி திருத்தப்பட்ட குத்தகைக் கொடுப்பவை கழிவீடு செய்வதன் மூலம் குத்தகை பரிப்பினை மீள்மதிப்பீடு செய்வார். ஒரு திருத்தபட்ட கழிவீடு செய்த வீதத்தை எஞ்சிய குத்தகை காலத்திற்கு குத்தகையில் உள்ளடக்கப்பட்டுள்ள வட்டி விகிதமாக தீர்மானிப்பார். குறிப்பிட்ட அவ்வட்டி விகிதமானது உடனடியாக தீர்மானிக்கக்கூடிய வீதம் அல்லது குத்தகையில் உள்ளடக்கப்பட்டுள்ள வட்டி வீதத்தை உடனடியாக தீர்மானிக்க முடியாதுவிடின், திருத்தத்தை விளைவுக்கு வரும் செய்யும் திகதியில் குத்தகை பெறுனரின் அதிகரிக்கும் கடன் வீதமாகும்.

46 ஒரு குத்தகை திருத்தத்திற்கு தனியாக கணக்கீட்டை மேற்கொள்ளாதபோது, குத்தகை பெறுனர் பின்வருவன மூலம் மீள்மதிப்பீட்டு குத்தகை பெறுமதிக்கு கணக்கீட்டை மேற்கொள்வார்.

(அ) குத்தகை நோக்கெல்லையை குறைக்கும் வகையிலான குத்தகை திருத்தத்தினாலான பகுதியளவான அல்லது முழுமையான முறிவை பிரதிபலிக்கும் வகையில் ‘‘சொத்துக்களை பயன்படுத்துவதற்கான’’ உரிமையின் கொண்டு செல்லப்படும் பெறுமதியைக் குறைத்தல்.

(ஆ) ஏனைய அனைத்து குத்தகை திருத்தங்களுக்காக சொத்தினை பயன்படுத்துவதற்கான உரிமைக்கு பிற்கால சீர்திருத்தங்களை மேற்கொள்ளல்.

## முன்னிலைப்படுத்தல்

47 குத்தகை பெறுனர் ஒருவர் பின்வருவனவற்றை நிதி நிலைமை கூற்றில் முன்னிலைப்படுத்துவார். அல்லது குறிப்புகளாகவும் வெளிப்படுத்துவார்.

(அ) குத்தகை பெறுனர் சொத்தினை பயன்படுத்துவதற்கான உரிமையை மற்ற சொத்துக்களில் இருந்து வேறாக பிரித்து வெளிப்படுத்தல். அவ்வாறு இல்லை எனின்,

I. ‘‘சொத்துக்களை பயன்படுத்துவதற்கான’’ உரிமையை, அதே வரிசை உருப்படிக்குள் உள்ளடக்குதல். இவ்வரிசைக்குள் தொடர்புடைய அடிப்படை சொத்துக்கள் முன்னிலைப்படுத்தப்படும் (உரிமைத்துவம் கொள்ளப்பட்ட சொத்துக்களாயின்).

II. நிதி நிலைமை கூற்றில், மேற்கூறியவாறு ‘‘சொத்துக்களை பயன்படுத்துவதற்கான’’ உரிமத்தை உள்ளடக்கிய வரிசை உருப்படிகளை வெளிப்படுத்தல்.

(ஆ) குத்தகை பெறுனர் குத்தகை பரிப்புக்களை மற்ற பரிப்புக்களில் இருந்து வேறாக பிரித்து வேறாக முன்னிலைப்படுத்துவார். குத்தகை பெறுனர் நிதிநிலைமைகூற்றில் குத்தகை பரிப்புக்களை மற்ற பரிப்புக்களில் இருந்து வேறாக பிரித்து முன்னிலைப்படுத்தவில்லை எனின், நிதிநிலைமை கூற்றில் அக்குத்தகை பரிப்புக்களை எந்த வரிசை உருப்படிகளை உள்ளடக்கி உள்ளது என்பதை வெளிப்படுத்துவார்.

48 சொத்துக்களை பயன்படுத்துவற்கான உரிமையானது முதலீட்டு சொத்துக்களுக்கான சொற்பொருள் விளக்கத்தைப் பூர்த்தி செய்யுமாயின், அவற்றிற்கு பந்தி 47(அ) இல் உள்ள கோட்பாடுகளை பிரயோகிக்க தேவையில்லை. அவை நிதிநிலைமை கூற்றில் முதலீட்டு சொத்தாக முன்னிலைப்படுத்தப்படும்.

49 குத்தகை பெறுனர் இலாப நட்டக் கூற்று மற்றும் ஏனைய முற்றடக்க வருமானக் கூற்று ஆகியவற்றில் குத்தகை பரிப்புகளுக்கான வட்டி செலவினத்தை "சொத்துக்களை பயன்படுத்துவதற்கான" உரிமத்திற்குறிய பெறுமான தேய்வில் இருந்து பிரித்து வேறாக முன்னிலைப்படுத்துவர். குத்தகை பரிப்புக்குளுக்கான வட்டியானது நிதிசெலவின் ஒரு பகுதியாகும். இந்நிதி செலவானது "LKAS 1 – நிதி அறிக்கைகளை முன்னிலைப்படுத்தல்" இன் பந்தி 82(ஆ)இன் கோட்பாட்டுக்கமைய இலாபநட்டக்கூற்று மற்றும் ஏனைய முற்றடக்க வருமானக் கூற்று ஆகியவற்றில் தனியாக வேறுபடுத்தி முன்னிலைப்படுத்தப்படும்.

50 குத்தகை பெறுனர் காசுப்பாய்ச்சல் கூற்றில் பின்வருவனவற்றை வகைப்படுத்துவார்.

(அ) நிதிச்செயற்பாட்டிற்கு உட்பட்ட குத்தகை பரிப்பின் முதலுக்கான காசு கொடுப்பனவு:

(ஆ) வட்டி செலுத்துதல் தொடர்பான LKAS 7இன் - காசுப்பாய்ச்சல் கூற்றின் கோட்பாடுகளை பிரயோகித்து குத்தகை பரிப்பின் மீதான வட்டிக்கான காசு கொடுப்பனவு மற்றும்:

(இ) குறுங்காலக் குத்தகைக் கொடுப்பனவுகள், குறைந்த பெறுமதியுடைய சொத்துக்களின் குத்தகைக் கொடுப்பனவுகள் மற்றும் நடைமுறை செயற்பாட்டிற்கு உட்பட்ட குத்தகை பரிப்புக்கான அளவீட்டில் உள்ளடக்கப்படாத மாறும் குத்தகைக் கொடுப்பனவுகள்.

## வெளிப்படுத்தல்

51 **வெளிப்படுத்துகையின் நோக்கமானது, நிதிநிலைமைக் கூற்று, இலாபநட்டக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றில் வழங்கப்பட்ட தகவல்களுடன் ஒருங்கிணைந்த வகையில், நிதிக் கூற்றுக்களின் பயனாளர்களுக்கு குத்தகையானது நிதிநிலைமை, நிதிப் பெறுபேறு மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றின் மீது கொண்டுள்ள தாக்கங்களை மதிப்பிடுவதற்கான தகவல்களை வெளிப்படுத்துவதேயாகும். புந்திகள் 52-60 இந்த நோக்கத்தினை அடையும் முறையினை விபரிக்கின்றன.**

52 குத்தகை பெறுனர் ஒருவர் தனி குறிப்பாகவோ அல்லது நிதி அறிக்கையில் வேறொரு பகுதியாகவோ அவரின் குத்தகை பற்றிய தகவல்களை வெளிப்படுத்துவார். எனினும் குத்தகை பெறுனர் ஒருவர் நிதி அறிக்கையில் எங்கேனும் ஏற்கனவே வழங்கப்பட்ட தகவல்கள் ஒரு தனியான குறிப்பாகவோ அல்லது குத்தகை பற்றிய பகுதியிலோ இடைக்குறிப்பீடு செய்யப்பட்டிருந்தால் அவற்றை மீண்டும் வெளிப்படுத்த வேண்டிய அவசியமில்லை.

53 குத்தகை பெறுனர் ஒருவர் அறிக்கை காலப்பகுதியில் பின்வரும் பெறுமதிகளை வெளிப்படுத்த வேண்டும்.

(அ) அடிப்படை சொத்துக்களின் வகைக்கமைய "சொத்துக்களை பயன்படுத்துவதற்கான" உரிமைக்கான பெறுமான தேய்வு:

(ஆ) குத்தகை பரிப்புகளுக்கான வட்டி செலவினம்:

(இ) பந்தி 6க்கு அமைய கணக்கீடு செய்யப்பட்ட குறுங்காலக் குத்தகை தொடர்பான செலவினங்கள். இச்செலவினங்கள் ஒரு மாத காலம் அல்லது அதற்கு குறைந்த குத்தகை காலப்பகுதிக்கு உடைய குத்தகை தொடர்பான செலவினங்களை உள்ளடக்காது:

(ஈ) பந்தி 6க்கு அமைய கணக்கீடு செய்யப்பட்ட குறைந்த பெறுமதியுடைய சொத்துக்களுக்கான குத்தகை தொடர்பான செலவினங்கள். இச்செலவினங்கள் பந்தி 53(இ)ல் உள்ளடக்கப்பட்ட குறைந்த பெறுமதியுடைய குறுங்காலக் குத்தகைகள் தொடர்பான செலவினங்களை உள்ளடக்காது:

(உ) குத்தகை பரிப்புக்கான அளவீட்டில் உள்ளடக்கப்படாத மாறும் குத்தகை தொடர்பான செலவினங்கள்.

(ஊ) ''சொத்துக்களை பயன்படுத்துவதற்கான'' உரிமையின் உபகுத்தகை மூலமான வருமானம்:

(எ) குத்தகைக்காக மொத்த காசுப்பாய்ச்சல்:

(ஏ) புதிதாக கொள்வனவு செய்யப்படும் ''சொத்துக்களை பயன்படுத்துவதற்கான'' உரிமை:

(ஐ) விற்பனை செய்து மீள்குத்தகையில் ஈடுபடும் ஊடுசெயல்யின் மூலம் தோன்றும் இலாபம் அல்லது நட்டம் மற்றும்:

(ஒ) அடிப்படை சொத்துக்களின் வகைக்கமைய, நிதி அறிக்கை காலப்பகுதியின் முடிவில் எஞ்சும் ''சொத்துக்களை பயன்படுத்துவதற்கான'' உரிமையின் முன் கொண்டு செல்லப்படும் பெறுமதி.

54 மற்றொரு சிறந்த வடிவமைப்பு இல்லாதவிடத்து, பந்தி 53 இல் குறிப்பிடப்பட்டுள்ள வெளிப்படுத்தல்களை ஒரு அட்டவணை வடிவத்தில் வழங்குவார் வெளிப்படுத்தப்பட்ட தொகையானது, அறிக்கை காலப்பகுதியில் குத்தகை பெறுனர் ஒருவர் இன்னொரு சொத்தின் முன்கொண்டு செல்லப்படும் தொகையில் உள்ளடக்கிய செலவுகளையும் உள்ளடக்கி இருக்கும்.

55 பந்தி 53 (இ)ன் பிரகாரம் குறுங்காலக் குத்தகை செலவினத்தை வெளிப்படுத்திய குறுங்காலக் குத்தகை தொகுப்புடன் வேறுபடுகின்ற, அறிக்கை கால முடிவில் ஈடுபடும் குறுங்காலக் குத்தகை தொகுப்பாயின், குத்தகை பெறுனர் ஒருவர் பந்தி 6ன் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட்ட குறுங்காலக் குத்தகைக்கான குத்தகை ஈடுபாட்டின் பெறுமதியை வெளிப்படுத்துவார்.

56 சொத்துக்களை பயன்படுத்துவதற்கான உரிமமானது முதலீட்டு சொத்துக்களுக்கான சொற்பத விளக்கத்தினை பூர்த்தி செய்யுமாயின், குத்தகை பெறுனர் ஒருவர் LKAS 40 இல் உள்ள வெளிப்படுத்துதல் தேவைப்பாடுகளை பிரயோகிப்பார். இதன் போது குத்தகை பெறுனர் ஒருவர் அத்தகைய சொத்துக்களை பயன்படுத்துவதற்கான உரிமைக்கு பந்தி 53 (அ), (ஊ), (ஏ), அல்லது (ஒ) இல் உள்ள வெளிபடுத்தல்களை மேற்கொள்ள தேவையில்லை.

57 குத்தகை பெறுனர் ஒருவர் SLFRS 16 ஐ பிரயோகித்து மறுமதிப்பீட்டு தொகையில் சொத்துக்களை பயன்படுத்துவதற்கான உரிமையை அளவீடு செய்வாராயின், குத்தகை பெறுனர் ஒருவர் SLFRS 16 இல் உள்ள பந்தி 77 இன் பிரகாரம் சொத்துக்களை பயன்படுத்துவதற்கான உரிமத்துக்கான தகவல்களை வெளிப்படுத்துவார்.

58 குத்தகை பெறுனர் ஒருவர் LKAS 7 – நிதியியல் சாதனங்கள், பந்தி 39 மற்றும் (ஆ) 11 ஆகியவற்றை பிரயோகித்து குத்தகை பரிப்பின் முதிர்ச்சி பகுப்பாய்வை வெளிப்படுத்துவார்.

59 பந்திகள் 53 – 58 இல் வேண்டப்படுகின்ற வெளிப்பாடுபளுக்கு மேலதிகமாக குத்தகை பெறுனர் பந்தி 51 இன் (பந்தி ஆ 48 இல் விபரிக்கப்பட்டுள்ளவாறு) வெளிப்படுத்தலுக்கான நோக்கத்தை பூர்த்தி செய்ய தேவையான குத்தகை ஊடுசெயல்கள் தொடர்பான அளவுசார் மற்றும் அளவுசாரா தகவல்களை வெளிப்படுத்துவார். இந்த மேலதிக தகவல்கள் நிதிக் கூற்றுக்களைப் பயன்படுத்துவோருக்கு அதனை மதிப்பீடு செய்ய உதவி புரியும், ஆனால் வரையறுக்கப்படவில்லை. அத்தகைய மேலதிக தகவல்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கி இருக்கலாம்.

(அ) குத்தகை பெறுனரின் குத்தகை ஊடுசெயல்யின் பண்புகள்.

(ஆ) குத்தகைதாரர் எதிர்நோக்கும் எதிர்கால காசு வெளிப்பாய்ச்சல்கள். இவை குத்தகை பரிப்புக்கான மதிப்பீட்டில் தாக்கத்தை ஏற்படுத்தாதவை. மற்றும் இந்த காசுப்பாய்ச்சல் பின்வருவனவற்றின் மூலம் தோன்றுகின்றன.

(i) மாறுபடுகின்ற குத்தகைக் கொடுப்பனவுகள் (பந்தி ஆ49 இல் வரையறுக்கப்பட்டுள்ளவாறு)

(ii) நீடிப்பதற்கான தெரிவு அல்லது முறிப்பதற்கான தெரிவு (பந்தி ஆ-50 இல் வரையறுக்கப்பட்டுள்ளவாறு)

(iii) எஞ்சிய உத்தரவாதமளிக்கப்பட்ட பெறுமதிகள் (பந்தி ஆ-51 இல் வரையறுக்கப்பட்டுள்ளவாறு)

(iv) குத்தகை பெறுனர் ஈடுபட்டுள்ள ஆனால் இன்னும் தொடங்கப்படாத குத்தகைகள்.

(இ) குத்தகைகள் விதிக்கும் கட்டுப்பாடுகள் அல்லது ஒப்பந்தங்கள் மற்றும்

(ஈ) விற்று பின் மீள்குத்தகை மேற்கொள்ளப்படும் ஊடுசெயல்கள் (பந்தி ஆ-52 இல் வரையறுக்கப்பட்டுள்ளவாறு)

60 பந்தி 6ஐ பிரயோகித்து குறுங்காலக் குத்தகை அல்லது குறைந்த பெறுமதியுடைய சொத்துக்களுக்கு கணக்கீட்டை மேற்கொள்ளும் குத்தகை பெறுனர் ஒருவர் அத்தகவல்களை வெளிப்படுத்துவார்.

## குத்தகை தருனர்

## குத்தகையினை வகைப்படுத்தல் (பந்திகள் ஆ53 – ஆ58)

61 **குத்தகை தருனர் ஒருவர் ஒவ்வொரு குத்தகையையும் நிதியியல் குத்தகை மற்றும் தொழிற்பாட்டுக் குத்தகை என வகைப்படுத்துவார்.**

62 **ஒரு குத்தகையானது அடிப்படை சொத்தின் உரித்துக்குரிய ஆபத்துகளையும் வெகுமதிகளையும் கணிசமான அளவு மாற்றுமாயின் அதுநிதியியல் குத்தகையாக வகைப்படுத்தப்படும். அதேபோல், ஒரு குத்தகையானது அடிப்படை சொத்தின் உரித்துக்குரிய ஆபத்துகளையும் வெகுமதிகளையும் கணிசமான அளவு மாற்றாவிடின் அது நிதியியல் குத்தகையாக வகைப்படுத்தப்படும்.**

63 ஒரு குத்தகையானது நிதியியல் குத்தகை அல்லது தொழிற்பாட்டுக் குத்தகை என்பது ஒப்பந்தத்தை விட, அதன் ஊடுசெயல் விடயப்பரப்பிலேயே தங்கியுள்ளது. பின்வரும் உதாரண சூழ்நிலைகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ ஒரு குத்தகையை நிதி குத்தகையாக வகைப்படுத்த பொதுவாக வழியமைக்கின்றன.

(அ) ஒரு குத்தகையானது குத்தகை கால முடிவில், அடிப்படை சொத்தின் உரித்தை குத்தகை பெறுனருக்கு மாற்றுதல்.

(ஆ) தொடக்க திதியில் தெரிவு நிறைவேற்றப்படுவதற்கான போதிய நிச்சயதன்மை கொண்டிருக்கும் அத்தெரிவை நிறைவேற்றுவதற்கான திகதியில் உள்ள சீர்மதிப்பு விலையை விட போதியளவு குறைவாக எதிர்பார்க்கப்படும் விலையில், குத்தகை பெறுனர் அடிப்படை சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கான தெரிவை கொண்டிருத்தல்.

(இ) உரிமை மாற்றப்படாத நிலையிலும் ஒரு அடிப்படை சொத்தின் பொருளாதார ஆயுட்காலத்தின் பெரும் பகுதி குத்தகை காலப்பகுதியாய் இருத்தல்.

64 சந்தர்ப்ப குறிகாட்டிகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ ஒரு குத்தகையை நிதிக் குத்தகையாக வகைப்படுத்த வழியமைக்கும்.

(அ) குத்தகை பெறுனர் ஒருவர் குத்தகையை நிராகரிக்க முடியுமாயின், அந்த நிராகரிப்பு தொடர்பான குத்தகை வழங்குனரின் நட்டம் குத்தகை பெறுனரால் பரிப்பேற்கப்படும்.

(ஆ) குத்தகை பெறுனருக்கு சென்றடையும் எஞ்சிய சீர்மதிப்பு பெறுமதியில் ஏற்படும் மாற்றங்களினால் தோன்றும் இலாபம் அல்லது நட்டம் (உதாரணமாக, வாடகை தள்ளுபடி வடிவில் குத்தகை முடிவிலான பெரும்பாலான விற்பனைகள் சமப்படுத்தப்படுகின்றன).

(இ) குத்தகை பெறுனருக்கு சந்தை வாடகைப்பெறுமதியை விட பாரியளவு குறைந்த வாடகை பெறுமதியில் இரண்டாம் காலப்பகுதிக்கான குத்தகையை தொடர்வதற்கான வல்லமையை கொண்டிருத்தல்.

65 பந்தி 63 – 64 ஆகியவற்றில் உள்ள உதாரணங்களும் குறிகாட்டிகளும் எல்லா சந்தர்ப்பங்களும் தீர்மானமானவை அல்ல. குத்தகையானது அடிப்படை சொத்தின் உரித்துக்குரிய ஆபத்துகளையும் வெகுமதிகளையும் கணிசமாக மாற்றவில்லை என ஏனைய பண்புகள் தெளிவுபடுத்துமாயின் அக்குத்தகை தொழிற்பாட்டுக் குத்தகையாக வகைப்படுத்தப்படும். உதாரணமாக அடிப்படை சொத்தின் உரித்து குத்தகை கால முடிவில் அதன் சீர்மதிப்பு விலைக்கு ஈடான மாறுபடும் கொடுப்பனவிற்கு மாற்றமாயின் அல்லது மாறுபடுகின்ற குத்தகைக் கொடுப்பனவுகளின் விளைவாக குத்தகை தருனர் அனைத்து ஆபத்துகளையும் வெகுமதிகளையும் மாற்றாமை.

66 ஆரம்ப திகதியில் குத்தகை வகைப்படுத்தல் மேற்கொள்ளப்படும். மேலும் குத்தகை மாற்றங்களின் போது மட்டும் மீள் மதிப்பீடு செய்யப்படும். மதிப்பீடுகளில் ஏற்படும் மாற்றங்கள் (உதாரணமாக, அடிப்படை சொத்தின் பொருளாதார ஆயுட்காலத்தில் அல்லது எஞ்சிய பெறுமதியில் ஏற்படும் மாற்றங்கள்) அல்லது சந்தர்ப்பங்களில் ஏற்படும் மாற்றங்கள் (உதாரணமாக, குத்தகைதாரரின் இயலாமை) என்பன கணக்கீட்டு தேவைப்பாட்டுக்காக குத்தகையை புதிதாக வகைப்படுத்துவதற்கு காரணமாய் அமையாது.

## நிதிக் குத்தகை

## ஏற்பிசைவு செய்தலும் அளவிடுதலும்

67 **தொடக்கத் திகதியில் குத்தகை தருனர், நிதி நிலைமை கூற்றில் நிதி குத்தகையின் கீழ் காணப்படும் சொத்துக்களை இனம் காண்பார் மற்றும் அவற்றை குத்தகையின் தேறிய முதலீடுகளுக்கு சமமான தொகையில் பெறத்தக்கவையாக முன்னிலைப்படுத்துவார்.**

### அளவீடு

68 குத்தகை தருனர், குத்தகையின் தேறிய முதலீடுகளை அளவீடு செய்வதற்கு குத்தகையில் உள்ளடக்கப்பட்டுள்ள வட்டிவீதத்தை பயன்படுத்துவார். உபகுத்தகையின் போது உபகுத்தகையின் உள்ளடக்கப்பட்டுள்ள வட்டிவீதத்தை உடனடியாக தீர்மானிக்க முடியாவிடின், ஒரு இடைநிலை குத்தகை தருனர் பிரதான குத்தகைக்காக பயன்படுத்தும் கழிவு வீதத்தை பயன்படுத்துவார்.

69 உற்பத்தியாளர்களால் அல்லது குத்தகை தரகர்களால் ஏற்பட்டவை தவிர்ந்த ஏனைய ஆரம்ப நேர்க் கிரயங்களானவை குத்தகையின் மீதான தேறிய முதலீடாக ஆரம்ப அளவீட்டில் உள்ளடக்கப்பட்டு, குத்தகைக் காலமீறாக ஏற்பிசைவு செய்யப்படும் வருமானமானது கழிக்கப்படும். ஆரம்ப நேர் செலவினங்கள் குத்தகையின் தேறிய முதலீடுகளில் தானாகவே உள்ளடங்கவும், அவை தனியாக சேர்க்கப்பட வேண்டிய தேவைப்பாடு இல்லாத வகையிலும் குத்தகையில் உள்ளடக்கப்படும் வட்டிவீதமானது வரையறுக்கப்பட்டுள்ளது.

### குத்தகையின் தேறிய முதலீடுகளில் உள்ளடக்கப்படும் குத்தகைக் கொடுப்பனவுகளின் ஆரம்ப அளவீடு

70 குத்தகை காலப்பகுதியில் தொடக்கத் திகதியில் பெற்றுகொள்ளப்படாத அடிப்படை சொத்துக்களை பயன்படுத்துவதற்கான உரிமைக்காக தொடக்கத் திகதியில், குத்தகையின் தேறிய முதலீடுகளில் உள்ளடக்கப்படும் குத்தகைக் கொடுப்பனவுகளானது பின்வரும் குத்தகைக் கொடுப்பனவுகளை கொண்டிருக்கும்.

(அ) எந்தவொரு குத்தகை ஊக்கத்தொகை நீங்கலான நிலையான கொடுப்பனவுகள் (பந்தி ஆ42 இல் வரையறுக்கப்பட்டுள்ள நிலையான கொடுப்பனவுகளை உள்ளடக்கியதாக).

(ஆ) வீதத்தில் அல்லது குறியீட்டில் தங்கியுள்ள வேறுபடும் குத்தகைக் கொடுப்பனவுகளானது தொடக்கத் திகதியில் வீதம் அல்லது குறியீட்டை பயன்படுத்தி முதன்முதலில் அளவிடப்படும்.

(இ) குத்தகை பெறுனரால் குத்தகை வழங்குனருக்கு அளிக்கப்பட்ட ஏதேனும் சிறிய பெறுமதி உத்தரவாதங்கள். இந்த உத்தரவாதத்தின் பரிப்புக்களை நிறைவேற்றும் எஞ்சிய நிதியியல் வல்லமையை குத்தகை பெறுனரின் உறவு தரப்பினர் அல்லது குத்தகை வழங்குனருடன் தொடர்பற்ற மூன்றாம் தரப்பினர் கொண்டிருப்பார்.

(ஈ) குத்தகை பெறுனர் ஒருவர் கொள்வனவு தெரிவை நிறைவேற்றுவதற்கான சீர்மதிப்புமான நிச்சயதன்மையை கொண்டிருப்பின், அத்தெரிவிற்கான நிறைவேற்று விலை.

(உ) குத்தகை பெறுனர் குத்தகை முறிவை நிறைவேற்றுவார் என்பதை குத்தகை காலம் பிரதிபலிக்குமாயின், அந்த முறிவிற்கான கொடுப்பனவும் அபராதமும்.

## உற்பத்தி அல்லது தரகு குத்தகை தருனர்

71 தொடக்கத் திகதியில், உற்பத்தி அல்லது தரகு குத்தகை தருனர் நிதி குத்தகையின் பின்வரும் ஒவ்வொன்றையும் இனம் காண்பார்.

(அ) அடிப்படை சொத்தின் சீர்மதிப்பில் வருமானம், அல்லது, குத்தகை வழங்குனருக்கு உரித்தான குத்தகைக் கொடுப்பனவுகளின் சந்தை வட்டி வீதத்தினை பிரயோகித்தலின் மூலமான கழிவழிக்கப்பட்ட நிகழ்கால பெறுமதி.

(ஆ) உத்தரவாதம் அளிக்கப்படாத எஞ்சிய பெறுமதியின் நிகழ்கால பெறுமதி நீங்கலான அடிப்படை சொத்தின், விற்பனை கிரயம், அல்லது முன்கொண்டு செல்லப்படும் மீதி வித்தியாசமாயின்,

(இ) LKAS 15 பிரயோகிக்கக் கூடிய பூரண விற்பனைக்காக அதன் கொள்கையின் பிரகாரம், விற்பனை இலாபம் அல்லது நட்டம் (வருமானத்திற்கும் விற்பனை கிரயத்திற்கும் இடையிலான வித்தியாசம்). ஒரு உற்பத்தியாளர் அல்லது முகவர் குத்தகை தருனர் நிதிக் குத்தகையின் மீதான விற்பனை இலாபம் அல்லது நட்டத்தினை, குத்தகை தருனர் SLFRS 15 நியமத்தில் குறிப்பிடப்பட்டவாறு தொடர்புபட்ட சொத்தினை மாற்றுகிறாரோ இல்லையோ என்பதைக் கருத்தில் கொள்ளாது, ஆரம்பத் திகதியில் ஏற்பிசைவு செய்ய முடியும்.

72 உற்பத்தியாளர் அல்லது தரகர் அநேகமாக வாடிக்கையாளர்களுக்கு ஒரு சொத்துக்கான கொள்வனவு தெரிவு அல்லது குத்தகை தெரிவை வழங்குவர். உற்பத்தி அல்லது தரகு குத்தகை வழங்குனரால் மேற்கொள்ளபடும் ஒரு சொத்தினுடைய ஒரு நிதிக்குத்தகையானது இலாபம் அல்லது நட்டத்தை ஏற்படுத்தும். இது பொருத்தமான தொகுதி கழிவு அல்லது வியாபார கழிவுகளை பிரதிபலிக்கும் சாதாரண விற்பனை விலையில் அடிப்படை சொத்தொன்றை பூரணமாக விற்பதன் மூலமான இலாபம் அல்லது நட்டத்திற்கு சமமாகும்.

73 உற்பத்தியாளர் அல்லது தரகு குத்தகை தருனர் வாடிக்கையாளர்களை கவரும் பொருட்டு சில சந்தர்ப்பங்களில் செயற்கையாக குறைந்த வட்டி வீதத்தில் விலை கூறலை மேற்கொள்வர். அத்தகைய வீதத்தை பயன்படுத்துவதானது குத்தகை வழங்குனரால் ஏற்பிசைவு செய்யப்படுகின்ற வருவாயிலும் கூடிய பகுதியில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

74 உற்பத்தியாளர் அல்லது தரகு குத்தகை தருனர் ஒருவர் தொடக்கத் திகதியில் நிதி குத்தகை தொடர்பாக ஏற்பட்ட செலவுகளை ஒரு செலவின கிரயமாக இனம் காண்பார், ஏனெனில், இது பிரதானமாக உற்பத்தி அல்லது தரகு குத்தகை வழங்குனரின் விற்பனை இலாபத்தை ஈட்டுதலுடன் தொடர்புடையது. உற்பத்தி அல்லது தரகு குத்தகை வழங்குனரால் நிதி குத்தகையை தொடர்பாக மேற்கொண்ட செலவுகள் ஆரம்ப நேர் செலவுகளின் சொற்பொருள் விளக்கத்தில் இருந்து நீக்கப்படுவதால், இது குத்தகையின் தேறிய முதலீட்டில் இருந்தும் நீக்கப்படுகிறது.

*பின்னரான அளவீடு*

75 **குத்தகை தருனர் ஒருவர், அவருடைய குத்தகையின் தேறிய முதலீட்டிற்கான மாறாத கால விகிதத்தை பிரதிபலிக்கும் போக்கின் அடிப்படையில், நிதி வருமானத்தை குத்தகை காலப்பகுதி முழுவதும் ஏற்பிசைவு செய்வார்.**

76 குத்தகை தருனர் ஒருவர், நிதி வருமானத்தை குத்தகை காலப்பகுதி முழுவதும் ஒரு முறைமை மற்றும் பகுத்தறிவின் அடிப்படை நோக்கமாக ஒதுக்கீடு செய்வார். குத்தகை தருனர் ஒருவர், முதலும்

ஈட்டப்படாத நிதி வருமானத்தையும் குறைக்கும் வகையில் குத்தகையின் மொத்த முதலீட்டிற்கு எதிராக குத்தகைக் கொடுப்பனவை, தொடர்புப்பட்ட காலப்பகுதிக்கு பிரயோகிப்பார்.

77 குத்தகை தருனர் ஒருவர், குத்தகையின் தேறிய முதலீட்டிற்கு SLFRS 9 இன் சேத இழப்பு மற்றும் ஏற்பிசைவு செய்யாமை ஆகியவற்றிற்கான தேவைப்பாடுகளை பிரயோகிப்பார். குத்தகையின் மொத்த முதலீட்டின் கணிப்பீட்டிற்கு பயன்படுத்தும் ஒழுங்கு முறையில் மதிப்பிடப்பட்ட உத்தரவாதமற்ற எஞ்சிய பெறுமதியை மீளாய்வு செய்வார்.

78 SLFRS 5- *விற்பனைக்கென வைத்திருக்கப்படும் நடைமுறையல்லா சொத்துக்கள் மற்றும் தொடரப்படாத செயற்பாடுகள்* நியமத்தினை பிரயோகித்து ஒரு நிதிக்குத்தகைக்குட்பட்ட ஒரு சொத்தை விற்பனைக்குரியதாக (அல்லது விற்பனைக்குரியதாக வகைப்படுத்தப்படுகின்ற விற்பனை கூட்டுக்குள்) வகைப்படுத்தும் குத்தகை தருனர் ஒருவர் அச் சொத்துக்களுக்கு இந்த நியமத்துக்கு அமைவாகக் கணக்கு வைப்பார்.

## குத்தகை மாற்றங்கள்

79 குத்தகை தருனர் ஒருவர் பின்வரும் இரண்டும் பூர்த்தி செய்யப்படுமானால், ஒரு நிதி குத்தகைக்கான ஒரு மாற்றத்தை தனி குத்தகையாக கணக்கீடு செய்வார்:

(அ) ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அடிப்படை சொத்துக்களை பயன்படுத்துவதற்கான உரிமையை அதிகரிப்பதன் மூலம் குத்தகையின் நோக்கெல்லையை விஸ்தரிக்கும் மாற்றங்கள்.

(ஆ) விஸ்தரிக்கப்படும் நோக்கெல்லைக்கான தனிவிலையுடன் கூடிய பொருத்தமான தொகை மற்றும் குறிப்பிட்ட ஒப்பந்தத்தின் சூழ்நிலைகளை பிரதிபலிக்கும் வகையில் தனி விலையில் மேற்கொள்ளப்படும் ஏதாவது உரிய சீரமைப்புகள் ஆகியவற்றின் மூலம் குத்தகைக்கான கைமானம் அதிகரித்தல்.

80 ஒரு தனி குத்தகையாக கணக்கீடு செய்யப்படாத நிதி குத்தகையில் மேற்கொள்ளப்படும் மாற்றங்களுக்காக ஒரு குத்தகை தருனர் பின்வரும் மாற்றங்களுக்கு கணக்கீட்டை மேற்கொள்வார்.

(அ) தொடக்கத் திகதியில் ஏற்பட்ட மாற்றத்தின் விளைவாக குத்தகையானது தொழிற்பாட்டுக் குத்தகையாக வகைப்படுத்தப்பட்டிருப்பின், ஒரு குத்தகை வழங்குனரால்

(i) அக்குத்தகை மாற்றமானது ஒரு புதிய குத்தகையாக மாற்றத்திற்கான திகதியில் இருந்து பதிவு செய்யப்படும்.

(ii) அடிப்படை சொத்துக்களின் கொண்டுசெல்லும் பெறுமதியானது உடனடியாக குத்தகை மாற்றத்திகதிக்கு முந்திய திகதியில் தேறிய குத்தகை முதலீடாக அளவிடப்படும்.

(ஆ) இல்லாதுவிடின் குத்தகை தருனர் SLFRS 9 இன் தேவைப்பாடுகளை பிரயோகிப்பார்.

### தொழிற்பாட்டுக் குத்தகை
### ஏற்பிசைவு செய்லும் அளவிடுதலும்

81 ஒரு குத்தகை தருனர் தொழிற்பாட்டுக் குத்தகையின் மூலமான குத்தகைக் கொடுப்பனவுகளை நேர்கோட்டு முறையில் அல்லது வேறு ஒழுங்கு முறையில், வருமானமாக ஏற்பிசைவு செய்வார். அடிப்படை சொத்தினுடைய நலிவடையும் அனுகூலத்தின் தன்மையை வேறொரு ஒழுங்கு முறை சிறப்பாக பிரதிபலிக்குமாயின் குத்தகை தருனர் அம்முறையை பிரயோகிப்பார்.

82 குத்தகை தருனர் ஒருவர் குத்தகை வருமானத்தை ஈட்டுவதற்கு ஏற்பட்ட பெறுமான தேய்வு உட்பட்ட கிரயத்தை ஒரு செலவினமாக ஏற்பிசைவு செய்வார்.

83 தொழிற்பாட்டுக் குத்தகையை பெற்றுகொள்ளும் பொருட்டு ஏற்பட்ட நேர் கிரயத்தை அடிப்படை சொத்தின் கொண்டுசெல்லப்படும் தொகையுடன் கூட்டுவார். மேலும் அக்கிரயத்தை குத்தகை காலப்பகுதிக்கான ஒரு செலவினமாக குத்தகை வருமானத்தை ஏற்பிசைவு செய்யும் அதே முறையிலேயே ஏற்பிசைவு செய்வார்.

84 தொழிற்பாட்டுக் குத்தகை தவிர்ந்த ஏனைய பெறுமான தேய்விற்குள்ளாகும் அடிப்படை சொத்துக்களின் பெறுமான தேய்விற்கான கொள்கையானது குத்தகை வழங்குனரின் அதே போன்ற சொத்துக்களின் பெறுமான தேய்வு கொள்கைக்கு ஒத்தகாக இருக்கம். குத்தகை தருனர் ஒருவர் SLFRS 16 மற்றும் LKAS 38 க்கு அமைய பெறுமான தேய்வை கணிப்பிடுவார்.

85 குத்தகை தருனர் ஒருவர் தொழிற்பாட்டுக் குத்தகை தவிர்ந்த ஏனைய அடிப்படை சொத்துக்கள் சேத இழப்புக்கு உட்படுகின்றனவா எனவும் அவ்வாறு ஏற்பிசைவு செய்ப்பட்ட பெறுமதி குறைப்புக்கு பதிவு மேற்கொள்ளப்படுகிறதா எனவும் தீர்மானிப்பதற்கு LKAS 36 ஐ பிரயோகிப்பார்.

86 உற்பத்தி அல்லது தரகு குத்தகை தருனர் ஒருவர் தொழிற்பாட்டுக் குத்தகை மூலமான விற்பனை இலாபத்தை ஏற்பிசைவு செய்யமாட்டார், ஏனெனில் அது ஒரு விற்பனைக்கு சமமானது அல்ல.

குத்தகை மாற்றங்கள்

87 குத்தகை தருனர் ஒருவர் தொழிற்பாட்டுக் குத்தகைக்கான ஒரு மாற்றத்தை அசல் குத்தகையின் ஏதேனும் முன்செலுத்திய அல்லது அட்டுறுவாகவுள்ள கொடுப்பனவுகள் இருப்பின், அவற்றைப் புதிய குத்தகையின் பகுதிகளாகக் கருதிக் கொண்டு, ஒரு புதிய குத்தகையாக அக்குத்தகை மாற்றம் விளைவுக்கு வரும்ப்படும் திகதியில் இருந்து கணக்கீடு மேற்கொள்வார்.

முன்னிலைப்படுத்தல்

88 குத்தகை தருனர் ஒருவர் நிதி நிலைமைக் கூற்றில் தொழிற்பாட்டுக் குத்தகை தவிர்ந்த ஏனைய அடிப்படை சொத்துக்களை அச்சொத்துக்களின் இயல்புக்கமைய முன்னிலைப்படுத்துவார்.

## வெளிப்படுத்துதல்

**89 வெளிப்படுத்தலின் நோக்கமானது குத்தகை தருனர் நிதி நிலைமை கூற்று, இலாப நட்ட கூற்று மற்றும் காசு பாய்ச்சல் கூற்று ஆகியவற்றில் வழங்கப்படும் தகவல்களுடன் மேலதிகக் குறிப்புகளாக தகவல்களை வெளிப்படுத்துவதற்காகும். இது நிதிக்கூற்றுகளை பயனாளர்களுக்கு ஒரு குத்தகை வழங்குனரின் நிதி நிலைமை நிதியியல் செயற்பாடு மற்றும் காசு பாய்ச்சல் என்பவற்றில் குத்தகை ஏற்படுத்தும் விளைவை அளவீடு செய்வதற்கு ஒரு அடிப்படையை வழங்குகிறது. பந்தி 90-97 இந்நோக்கத்தை எப்படி அடைவது என்பதற்கான தேவைப்பாடுகளை குறிப்பிடுகிறது.**

90 குத்தகை தருனர் ஒருவர் பின்வரும் தொகைகளை அறிக்கையிடும் காலப்பகுதியில் வெளிப்படுத்துவார்

(அ) நிதி குத்தகைக்கான

(i) விற்பனை இலாபம் அல்லது நட்டம்
(ii) குத்தகைக்கான தேறிய முதலீட்டின் மீதான நிதியியல் வருமானம் மற்றும்
(iii) குத்தகைக்கான தேறிய முதலீட்டு அளவீட்டில் உள்ளடக்கப்படாத மாறுபடும் குத்தகைக் கொடுப்பனவுகள் தொடர்பான வருமானம்.

(ஆ) தொழிற்பாட்டுக் குத்தகைக்கான குத்தகை வருமானம் குறியீட்டிலோ அல்லது வீதத்திலோ தங்கி இல்லாத மாறுபடும் குத்தகைக் கொடுப்பனவுகள் தொடர்பான வருமானம் வேறுபடுத்தி வெளிக்காட்டப்படும்.

91 குத்தகை தருனர் ஒருவர் வேறொரு வடிவமுறை அதிக பொருத்தமாகவுள்ள போது பந்தி 90 இல் குறிப்பிடப்பட்டுள்ள வடிவத்தில் வெளிப்பாடுகளை வழங்குவார்.

92 குத்தகை தருனர் ஒருவர் பந்தி 89 இல் உள்ள நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு குத்தகை ஊடுசெயல் தொடர்பான மேலதிக அளவுசார் மற்றும் அளவுசாரா தகவல்களை வெளிப்படுத்துவார். இந்த பின்வருவன உள்ளடங்களான (இவை வரையறுக்கப்படாதவை) மேலதிக தகவல்கள் நிதிக்கூற்றுகளை பயனாள்களுக்கு அதனை அளவீடு செய்ய உதவிபுரியும்.

(அ) குத்தகை வழங்குனரின் குத்தகை ஊடுசெயல்களின் தன்மை

(ஆ) குத்தகை தருனர் எவ்வாறு அடிப்படை சொத்தினை பற்றியுள்ள எந்த உரித்துடன் கூடிய இடரை முகாமை செய்கிறார். குறிப்பாக குத்தகை தருனர் ஒருவர் அடிப்படை சொத்தினை பற்றியுள்ள உரித்துக்கான இடரை குறைக்கும் வழிவகைகளை உள்ளடக்கிய இடர் முகாமைத்துவ யுத்தியை வெளிப்படுத்துவார். அத்தகைய வழிவகைகள் உதாரணங்களாக மீள் கொள்வனவு உடன்படிக்கை எஞ்சிய உத்தரவாத தொகை அல்லது வரையறுத்த எல்லைக்கு மேலான பயன்பாட்டிற்கான மாறுபடும் குத்தகைக் கொடுப்பனவுகள் என்பவற்றை உள்ளடக்குகிறன.

## நிதிக் குத்தகைகள்

93 குத்தகை தருனர் ஒருவர், நிதிக்குத்தகைக்கான தேறிய முதலீட்டின் கொண்டுசெல்லும் தொகையில் ஏற்படும் பாரிய மாற்றத்திற்கான அளவுசார் மற்றும் அளவுசாரா விளக்கங்களை வழங்குவார்.

94 குத்தகை தருனர் ஒருவர், வருமதி குத்தகைக் கொடுப்பனவுகளுக்கான முதிர்வு பகுப்பாய்வை வெளிப்படுத்துவார். இது குறைந்தது ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் வருடாந்த அடிப்படையில் வருமதி கழிவழிக்கப்படாத குத்தகைக் கொடுப்பனவுகளையும் எஞ்சிய வருடங்களுக்கான மொத்த தொகையையும் காட்டி நிற்கும். குத்தகை தருனர் ஒருவர், கழிவழிக்கப்படாத குத்தகைக் கொடுப்பனவுகளை குத்தகைக்கான தேறிய முதலீட்டிற்கு இணங்க செய்வார். இந்த இணக்கப்பாடு ஈட்டப்படாத வருமதி குத்தகைக் கொடுப்பனவுகள் தொடர்பான நிதியியல் வருமானம் மற்றும் கழிவளிக்கப்பட்ட உத்தரவாதமற்ற எஞ்சிய பெறுமதி ஆகியவற்றை இணங்காணும்.

## தொழிற்பாட்டுக் குத்தகைகள்

95 தொழிற்பாட்டுக் குத்தகைக்கு உட்பட்டு ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்காக, குத்தகை தருனர் ஒருவர், SLFRS 16, இன் வெளிப்படுத்தலுக்கான தேவைபாடுகளை பிரயோகிப்பார். SLFRS 16, இன் வெளிப்படுத்தலுக்கான தேவைப்பாடுகளை பிரயோகித்து, குத்தகை தருனர் ஒருவர், ஒவ்வொரு வகைக்குமான ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களை தொழிற்பாட்டுக் குத்தகைக்குட்பட்ட சொத்துக்கள் மற்றும் தொழிற்பாட்டுக் குத்தகைக்குட்படாத சொத்துக்கள் என பிரித்தெடுப்பார். ஆகவே குத்தகை தருனர் ஒருவர், அவரால் உடமையாக்கப்பட்டதும் பயன்படுத்தப்படுகின்றதுமான சொத்துக்களில் இருந்து வேறுபடுத்திய தொழிற்பாட்டுக் குத்தகைக்குட்பட்ட சொத்துக்களுக்காக (அடிப்படை சொத்துக்களின் வகைக்கமைய) SLFRS 16 இன் தேவைப்பாடுகளை வெளிப்படுத்துவார்.

96 குத்தகை தருனர் ஒருவர் தொழிற்பாட்டுக் குத்தகைக்குட்பட்ட சொத்துக்களுக்காக LKAS 36, LKAS 38, LKAS 40, LKAS 41 ஆகியவற்றில் உள்ள வெளிப்படுத்தலுக்கான தேவைப்பாடுகளை பிரயோகிப்பார்.

97 குத்தகை தருனர் ஒருவர், குத்தகைக் கொடுப்பனவுகளுக்கான முதிர்வு பகுப்பாய்வை வெளிப்படுத்துவார். இது குறைந்தது ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் வருடாந்த அடிப்படையில் வருமதி கழிவழிக்கப்படாத குத்தகைக் கொடுப்பனவுகளையும் எஞ்சிய வருடங்களுக்கான மொத்த தொகையையும் காட்டி நிற்கும்.

## விற்று மீள்குத்தகையை மேற்கொள்ளும் ஊடுசெயல்கள்

98 ஒரு உரிமம் (விற்பனையாளர்-குத்தகை பெறுனர்) சொத்தொன்றை இன்னொரு உரிமத்திற்கு (பெறுனர்-குத்தகை தருனர்) மாற்றுவதுடன் அச்சொத்தை மீண்டும் பெறுனர்-குத்தகை வழங்குனரிடம் இருந்து குத்தகைக்கு பெற்றுகொள்வாராயின், விற்பனையாளர்-குத்தகை பெறுனர் மற்றும் பெறுனர்-குத்தகை தருனர் இருவரும் அப்மாற்றத்திற்கான ஒப்பந்தத்துக்கும் குத்தகைக்கும் பந்தி 99-103 ஐ பிரயோகித்து கணக்கீட்டை மேற்கொள்வார்.

## சொத்தினை மாற்றுவது ஒரு விற்பனையா என மதிப்பிடுதல்

99 செயற்பாட்டு நோக்கமானது எப்பொழுது LKAS 15 ஐ பூர்த்தி செய்கிறது என்பதை, தீர்மானிப்பதற்கான தேவைப்பாடுகளை ஒரு உரிமம் பிரயோகிக்கும். இது சொத்தொன்றினை மாற்றுவதை ஒரு விற்பனையாக கணக்கீடு செய்யப்படுகிறதா என்பதை தீர்மானிப்பதற்காகும்.

## சொத்தினை மாற்றுவது ஒரு விற்பனையாகும்

100 விற்பனையாளர்-குத்தகை பெறுனரால் மாற்றப்படும் சொத்தொன்று ஒரு சொத்து விற்பனையாக கணக்கீடு செய்யப்படுவதற்கான, LKAS 15 இன் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யுமாயின்:

(அ) விற்பனையாளர்-குத்தகை பெறுனர் மீள்குத்தகை மூலம் தோன்றிய ‘‘சொத்தினை பயன்படுத்துவதற்கான உரிமையை’’ அச்சொத்தின் முந்தைய கொண்டுசெல்லும் பெறுமதியின் விகிதமாக மதிப்பிடுவார். இச்சொத்து விற்பனையாளர்-குத்தகை பெறுனரிடம் உள்ள ‘‘பயன்படுத்துவதற்கான உரிமைடன்’’ தொடர்புடையதாகும். எனவே, விற்பனையாளர்-குத்தகை பெறுனர், பெறுனர்-குத்தகை வழங்குனருக்கு உரித்தை மாற்றுவதன் மூலமான இலாபம் அல்லது நட்டத்தை மட்டத்தை ஏற்பிசைவு செய்வார்.

(ஆ) பெறுனர்-குத்தகை தருனர், பொருத்தமான நியமங்களை பிரயோகித்து சொத்து கொள்வனவையும், இந்த நியமத்தின்படி குத்தகை வழங்குனருக்கான கணக்கீட்டு தேவைப்பாடுகளை பிரயோகித்து குத்தகையையும் பதிவு செய்வார்.

101 சொத்தொன்றின் விற்பனை விலைக்கான சீர்மதிப்புப் பெறுமதியானது அச்சொத்தின் சீர்மதிப்பு பெறுமதிக்கு இணையானதாக இல்லாதுவிடின், அல்லது குத்தகைக் கொடுப்பனவுகள் சந்தை பெறுமதியில் இல்லாதுவிடின், ஒரு உரிமம் சீர்மதிப்பு பெறுமதியிலான விற்பனை வருமானத்தை அளவிடுவதற்காக பின்வரும் சீராக்கங்களை மேற்கொள்ளும்,

(அ) எந்தவொரு குறை-சந்தை கட்டுறுப்பும் குத்தகைக் கொடுப்பனவுக்கான முற்கொடுப்பனவாக கணக்கீடு செய்யப்படும்.

(ஆ) எந்தவொரு கூடிய-சந்தை கட்டுறுப்பும் பெறுனர்-குத்தகை வழங்குனரால் விற்பனையாளர்-குத்தகை பெறுனருக்கு வழங்கிய மேலதிக நிதியாக கணக்கீடு செய்யப்படும்.

102 ஒரு உரிமம் பந்தி 101 இல் கோரப்படுகின்ற சாத்தியமான சீராக்கங்களை, அதி விரைவாக தீர்மானிக்கக்கூடிய பின்வருவன அடிப்படையில அளவீடு செய்யும்.

(அ) விற்பனை தொகைக்கான சீர்மதிப்பு பெறுமதிக் கைமானத்துக்கும் சொத்தின் சீர்மதிப்பு பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசம் மற்றும்

(ஆ) ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக் கொடுப்பனவுகளின் நிகழ்கால பெறுமதிக்கும் சந்தை விலையிலான குத்தகைக் கொடுப்பனவுகளின் நிகழ்கால பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசம்.

### சொத்தினை மாற்றுவது ஒரு விற்பனையல்ல

103 விற்பனையாளர்-குத்தகை பெறுனரால் மாற்றப்படும் சொத்தொன்று சொத்து விற்பனையாக கணக்கீடு செய்யப்படுவதற்காக LKAS 15 இன் தேவைப்பாடுகளை நிறைவேற்றவில்லையாயின்:

(அ) விற்பனையாளர்-குத்தகை பெறுனர் மாற்றப்பட்ட வருமானங்களுக்கு இணையாக ஒரு நிதி பரிப்பினை ஏற்பிசைவு செய்வதையும் மாற்றப்பட்ட சொத்தினை ஏற்பிசைவு செய்வதையும தொடர்வார். இது SLFRS 9 ஐ பயன்படுத்தி நிதியியல் பரிப்புக்களுக்காக கணக்கீடு செய்யப்படும்.

(ஆ) பெறுனர்-குத்தகை தருனர் மாற்றப்பட்ட வருமானங்களுக்கு இணையாக ஒரு நிதி பரிப்பினை ஏற்பிசைவு செய்யமாட்டார் மற்றும் மாற்றப்பட்ட சொத்தினையும் ஏற்பிசைவு செய்யமாட்டார். இது SLFRS 9 ஐ பயன்படுத்தி நிதியியல் சொத்துக்களுக்காக கணக்கீடு செய்யும்.

## பின்னிணைப்பு (அ)
## சொற்பொருள் விளக்கப்பட்ட கட்டுறுப்புகள்

*இந்த பின்னிணைப்பு நியமத்தின் அவசியமான ஒரு பகுதியாகும்.*

**குத்தகையின் தொடக்கத் திகதி (தொடக்கத் திகதி)** — குத்தகை தருனர் குத்தகை பெறுனருக்கு அடிப்படை சொத்தை பெறச்செய்யும் திகதியாகும்.

**பொருளாதார பயன்தரு ஆயுட்காலம்** — ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பாவனையாளர்களால் சொத்தொன்றை பொருளாதார ரீதியாக பயன்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படும் காலப்பகுதி அல்லது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பாவனையாளர்களால் சொத்தொன்றின் மூலம் பெறுவதற்கு எதிர்பார்க்கப்படும் உற்பத்தி அலகுகள் அல்லது அதை ஒத்த அலகுகள்.

**திருத்தத்தை விளைவுக்கு வரும் திகதி** — இரு தரப்பினரும் குத்தகை திருத்தத்திற்கு இணங்கும் போதிலான திகதி.

**சீர்மதிப்பு பெறுமதி** — சொத்தொன்றை மாற்றுவதற்கான தெளிவும் விருப்பமும் உடைய தரப்பினர்களுக்கு இடையில் சந்தை விலையில் சொத்தொன்றை மாற்றுவதற்கு அல்லது பரிப்பினை தீர்ப்பதற்கான தொகையாகும். இத்தொகை இந்நியமத்தின் குத்தகை வழங்குனருக்கான கணக்கீட்டு கொள்கைகளை பிரயோகிப்பதற்காகும்.

**நிதிக்குத்தகை** — அடிப்படை சொத்தின் உரித்துக்குரிய அனைத்து இடர்களையும் வெகுமதிகளையும் கணிசமான அளவு மாற்றும் ஒரு குத்தகை.

**நிலையான கொடுப்பனவுகள்** — குத்தகை காலப்பகுதியில் அடிப்படை சொத்தை பயன்படுத்துவதற்கான உரிமைக்காக குத்தகை பெறுனரால் குத்தகை வழங்குனருக்கு செலுத்தப்பட்ட மாறுபடும் குத்தகைக் கொடுப்பனவுகள் நீங்கலான கொடுப்பனவுகள்

**குத்தகையிலான மொத்த முதலீடு** — பின்வருவனவற்றின் கூட்டுதொகையாகும்,

(அ) நிதிக்குத்தகையின் கீழ் குத்தகை வழங்குனரால் பெறவிருக்கும் குத்தகைக் கொடுப்பனவுகள் மற்றும்

(ஆ) குத்தகை வழங்குனருக்கு சேர்க்கப்பட்ட உத்தரவாதம் அளிக்கப்படாத எஞ்சிய தொகை.

**குத்தகையின் ஆரம்ப திகதி (ஆரம்ப திகதி)** — குத்தகை ஒப்பந்தத்தின் திகதி அல்லது தரப்பினர்களால் குத்தகையின் கட்டுறுப்பு மற்றும் நிபந்தனைகளுக்கு ஈடுபட்ட திகதி, இவற்றில் எது முந்தையோ அதுவே ஆரம்ப திகதி.

**ஆரம்ப நேர்க் கிரயம்** — உற்பத்தியாளர் அல்லது தரகு குத்தகை தருனர், நிதி குத்தகையுடன் தொடர்பாக மேற்கொள்ளப்படும் கிரயம் நீங்கலான குத்தகையை பெற்றுகொள்ளவில்லையெனின், கிரயம் தோன்றியிராது குத்தகையை பெற்றுகொள்வதற்காக அதிகரிக்கும் கிரயமாகும்.

**குத்தகையில் உள்ளடங்கியுள்ள வட்டிவீதம்** — பின்வருவனவற்றின் நிகழ்கால பெறுமதியை காரணமான வட்டிவீதம்,

(அ) குத்தகை கொடுப்பனவுகள் மற்றும்

(ஆ) உத்தரவாதமற்ற பின்வருவனவற்றிற்கு சமமான எஞ்சிய பெறுமதியின் கூட்டுதொகை

(i) அடிப்படை சொத்தின் சீர்மதிப்பு பெறுமதி மற்றும்

(ii) குத்தகை வழங்குனரின் ஆரம்ப நேர் கிரயம்.

**குத்தகை** — குறிப்பட்ட ஒரு காலப்பகுதிக்கு ஒரு சொத்தினை (அடிப்படை சொத்து) பயன்படுத்துவதற்கான உரிமையை கைமானப் பெறுமதியில் தெறியப்படுத்தும் ஒரு ஒப்பந்தம், அல்லது ஒரு ஒப்பந்தத்தின் பகுதி

**குத்தகை ஊக்கத்தொகை** — குத்தகை வழங்குனரால் குத்தகை பெறுனருக்கு மேற்கொள்ளப்படும் குத்தகையுடன் தொடர்பான கொடுப்பனவுகள், அல்லது மீள்கொடுப்பனவு அல்லது குத்தகை வழங்குனரால் அனுமானிக்கப்படும் குத்தகை பெறுனரின் கிரயம்.

**குத்தகை திருத்தங்கள்** — மூலக்கட்டுறுப்பு மற்றும் மூல நிபந்தனைகளின் பகுதியாக இருந்தில்லாத (உதாரணமாக, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அடிப்படை சொத்தினை பயன்படுத்துவதற்கான உரிமையை இணைத்தல் அல்லது முறித்தல் அல்லது குத்தகை காலப்பகுதியை விஸ்தரித்தல் மற்றும் ஒடுக்குதல்) குத்தகை நோக்கெல்லையின் அல்லது குத்தகை பெறுமதியின் மாற்றமாகும்.

**குத்தகைக் கொடுப்பனவுகள்** — குத்தகை பெறுனரால் குத்தகை வழங்குனருக்கு மேற்கொள்ளப்படும் குத்தகை காலப்பகுதியில் ‘‘அடிப்படை சொத்தினை பயன்படுத்துவதற்கான உரிமை’’ தொடர்பான பின்வருவனவற்றை உள்ளடக்கிய கொடுப்பனவுகள்.

(அ) குத்தகை ஊக்கத்தொகை நீங்கலான நிலையான கொடுப்பனவுகள் (நிலையான கொடுப்பனவுகளை சார்ந்தவை உள்ளடங்களாக),

(ஆ) வீதத்தில் அல்லது குறிகாட்டியில் தங்கியுள்ள மாறுபடும் குத்தகைக் கொடுப்பனவுகள்

(இ) குத்தகை பெறுனருக்கு கொள்வனவுத் தெரிவினை நிறைவேற்றும் முகமான சீர்மதிப்புமான நிச்சயதன்மை இருப்பின், அதனை நிறைவேற்றுவதற்கான விலை.

(ஈ) குத்தகைக் காலப்பகுதியானது, குத்தகை பெறுனர் குத்தகையை முறிப்பதற்கான தெரிவை பிரதிபலிக்குமாயின், அக்குத்தகையை முறிப்பதற்கான அபராத தொகை.

குத்தகை பெறுனருக்காக, உத்தரவாத எஞ்சிய பெறுமதியின் கீழ் குத்தகை பெறுனரால் எதிர்பார்க்கப்படும் தொகையுடன் கூடிய குத்தகைக் கொடுப்பனவுகள் உள்ளடக்கும். குத்தகை பெறுனர், குத்தகை அல்லாத கூறுகளை குத்தகை ஆக்கக்கூறுகளுடன் இணைத்து அவற்றை தனி குத்தகை ஆக்கக்கூறாக கணக்கீடு செய்தல் என தீர்மானிக்காவிடின், குத்தகைக் கொடுப்பனவானது ஒரு ஒப்பந்தத்தில் குத்தகை அல்லாத கூறுகளுக்கு ஒதுக்கப்பட்ட கொடுப்பனவுகளை உள்ளடக்கி இருக்காது.

குத்தகை வழங்குனருக்கு, குத்தகை பெறுனரால் (உத்தரவாதத்தின் கடமைகளை நிறைவேற்றும் நிதியியல் வல்லமையுடைய குத்தகை பெறுனரின் உறவினர் அல்லது குத்தகை வழங்குனருக்கு உறவினரல்லாத மூன்றாம் நபர்) வழங்கப்பட்ட உத்தரவாத எஞ்சிய பெறுமதியையும் குத்தகை வழங்குனருக்கான குத்தகைக் கொடுப்பனவு உள்ளடக்கி இருக்கும், குத்தகை அல்லாதவற்றுக்கு ஒதுக்கப்பட்ட கொடுப்பனவுகளை இது உள்ளடக்கி இருக்காது

**குத்தகைக் காலம்** — குத்தகை பெறுனரிடம் காணப்படும் சொத்துகளை பயன்படுத்துவதற்கான உரிமையை இரத்துச்செய்ய முடியாத பின்வருவனவற்றுடனான காலப்பகுதி,

(அ) குத்தகை பெறுனருக்கு குத்தகையை விஸ்தரிப்பதற்கான தெரிவை நிறைவேற்றுவதற்கான சீர்மதிப்புமான

நிச்சயத்தன்மை இருப்பின், அந்த விஸ்தரிப்பு காலப்பகுதியையும் அடக்கிய காலப்பகுதி மற்றும்

(ஆ) குத்தகை பெறுனருக்கு குத்தகையை முறிப்பதற்கான தெரிவை நிறைவேற்றுவதற்கான சீர்மதிப்புமான நிச்சயதன்மை இருப்பின், அத்தெரிவை அடக்கிய காலப்பகுதி.

**குத்தகை பெறுனர்**

குறிப்பட்ட ஒரு காலப்பகுதிக்கு ஒரு சொத்தினை (அடிப்படை சொத்து) பயன்படுத்துவதற்கான உரிமையை மாற்ற கூடிய கைமானப்பெறுமதியில் அதனைப் பெற்றுக்கொள்ளும் ஒரு உரிமம்.

**குத்தகை பெறுனரின் அதிகரிக்கும் வட்டி வீதம்**

சொத்தினை பயன்படுத்தும் உரிமத்திற்கான பெறுமதியில் சொத்தொன்றை அதே பொருளாதார சூழலில் பெறுவதற்கு தேவையான தொகையை அதே காலப்பகுதியை கொண்ட காப்புடன் கூடிய கடன் மூலம் பெற்று கொள்ளும் போது அதற்கு செலுத்த வேண்டிய வட்டி வீதம்.

**குத்தகை தருனர்**

குறிப்பட்ட ஒரு காலப்பகுதிக்கு ஒரு சொத்தினை (அடிப்படை சொத்து) பயன்படுத்தும் உரிமையை மாற்ற கூடிய கைமானப்பெறுமதியில் அதனை வழங்கும் ஒரு உரிமம்.

**குத்தகையின் தேறிய முதலீடு**

குத்தகையில் உள்ளடக்கப்பட்டுள்ள வட்டி வீதத்தின் அடிப்படையில் கழிவளிக்கப்பட்ட குத்தகையின் மொத்த முதலீடு.

**தொழிற்பாட்டுக் குத்தகை**

அதேபோல், ஒரு குத்தகையானது அடிப்படை சொத்தின் உரித்துக்குரிய இடர்களையும் வெகுமதிகளையும் கணிசமான அளவு மாற்றாது.

**குத்தகை விருப்ப கொடுப்பனவு**

குத்தகை கோட்பாட்டில் உள்ளடக்கப்படாத குத்தகை முறிவு அல்லது குத்தகை விஸ்தரிப்புக்கான தெரிவினை கொண்ட குறிப்பிட்ட காலப்பகுதியில், அடிப்படை சொத்தொன்றை பயன்படுத்தும் உரிமத்துக்காக குத்தகை பெறுனரால் மேற்கொள்ளப்படவிருக்கும் கொடுப்பனவுகள்.

**பாவனைக் காலம்**

வாடிக்கையாளருடனான உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்காக சொத்தொன்றினை (தொடர்ச்சியற்ற காலப்பகுதியையும் உள்ளடக்கிய) பயன்படுத்தப்படுகின்ற மொத்த காலப்பகுதியாகும்.

**உத்தரவாத எஞ்சிய பெறுமதி**

குத்தகை வழங்குனருக்கு குத்தகை வழங்குனரின் உறவினரல்லாத தரப்பினரால் வழங்கப்பட்ட உத்தரவாதம். இந்த உத்தரவாதமானது அடிப்படை சொத்தொன்றின் குத்தகை கால முடிவில் இருக்கும் குறிப்பிட்ட ஆகக்குறைந்த பெறுமதியாகும்.

**சொத்தை பயன்படுத்தும் உரிமை**

குத்தகை பெறுனரின் உரிமமாகிய, அதாவது குத்தகை காலப்பகுதியில் அடிப்படை சொத்தினை பயன்படுத்தும் உரிமத்தை பிரதிபலிக்கும் ஒரு சொத்து.

**குறுங்காலக் குத்தகை**

ஒரு குத்தகை தொடக்கத் திகதியில், 12 மாதங்கள் அல்லது அதற்கு குறைந்த குத்தகை காலப்பகுதியை கொண்டிருத்தல். கொள்வனவு தெரிவை கொண்டிருக்கும் குத்தகை ஒரு குறுங்காலக் குத்தகை அல்ல.

**உப குத்தகை**

குத்தகை பெறுனரால் (‘இடைநிலை குத்தகை வழங்குனர்’) ஒரு சொத்தை ஒரு மூன்றாம் தரப்பினருக்கு, மீள்குத்தகையில் ஈடுபடுத்தும் ஒரு ஊடுருவல் மேலும் குத்தகையானது, தலைமை குத்தகை வழங்குனருக்கும் குத்தகை பெறுனருக்கும் இடையில் நடைமுறையில் இருக்கும் குத்தகை (தலைமை குத்தகை).

அடிப்படை சொத்து: குத்தகைக்குரிய ஒரு சொத்தாகும். இச்சொத்தை பயன்படுத்துவதற்கான உரிமை குத்தகை பெறுனருக்கு குத்தகை வழங்குனரால் வழங்கப்படுகிறது.

**உழைக்கப்படாத நிதியியல் வருமானம்**

பின்வருவனவற்றிற்கு இடையிலான வித்தியாசம்
(அ) குத்தகையின் மொத்த முதலீடு மற்றும்
(ஆ) குத்தகையின் தேறிய முதலீடு

**உத்தரவாதமற்ற எஞ்சிய பெறுமதி**

குத்தகை வழங்குனரால் உறுதிபடுத்தப்படாத அல்லது குத்தகை வழங்குனரின் உறவு தரப்பினரால் உத்தரவாதமளிக்கப்படாத, அடிப்படை சொத்தினது எஞ்சிய பெறுமதியின் பகுதி.

**மாறுபடும் குத்தகைக் கொடுப்பனவுகள்**

குத்தகை காலப்பகுதியில் அடிப்படை சொத்தொன்றை பயன்படுத்தும் உரிமைக்காக குத்தகை பெறுனரால் ஏட்டுரை காலப்பகுதி தவிர்ந்த. தொடக்கத் திகதிக்கு பின்னர் மேற்கொள்ளப்படும். தரவுகள் மற்றும் சூழ்நிலைகளின் மாற்றங்களால் வேறுபடுகின்ற கொடுப்பனவுகளின் பகுதியாகும்.

## ஒத்த கருத்துடைய ஏனைய நியமங்களில் சொற்பொருள் விளக்கப்பட்டுள்ளவையும் இந்த நியமத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளதுமான கட்டுறுப்புகளும்

**ஒப்பந்தம்**

இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட தரப்புகளுக்கு இடையில் அமுல்படுத்தகூடிய உரிமைகளையும் கடமைகளையும் கொண்ட ஒப்பந்தமாகும்.

**பயன்தரு ஆயுட்காலம்**

சொத்தொன்று, ஒரு உரிமத்தின் பயன்பாட்டிற்கு குறிப்பிட்ட காலப்பகுதிக்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவது அல்லது உற்பத்தி அலகுகள் அல்லது ஒரு உரிமத்தால் சொத்தொன்றின் மூலம் பெற்றுகொள்ளலாம் என எதிர்பார்க்கப்படும் அதையொத்த அலகுகள்.

## பின்னிணைப்பு (ஆ)

## பிரயோகத்திற்கான வழிகாட்டல்

*இந்த பின்னிணைப்பு நியமத்தின் ஒரு அவசியமான பகுதியாகும். இது பந்தி 1-103 ஐ பிரயோகத்தை விபரிக்கின்றது மேலும், இது இந்நியமத்தின் ஏனைய பகுதிகள் கொண்டுள்ள அதே அதிகாரத்தை கொண்டிருக்கும்.*

### தொகுதிகளுக்கான பிரயோகம்

ஆ1 இந்நியமம் தனி குத்தகைக்கான கணக்கீட்டினை குறிக்கின்றது. எனினும், நடைமுறையில், ஒரு உரிமம் இந்நியமத்தை தொகுதிக்கு பிரயோகிப்பதன் மூலம் நிதி அறிக்கையில் ஏற்படும் தாக்கமானது, இந்நியமத்தை அத்தொகுதியிலுள்ள தனி குத்தகைக்கு பிரயோகிப்பதில் இருந்து பொருண்மையான அளவில் வேறுபடாதவிடத்து, அந்த உரிமம் ஒத்த பண்புகளை கொண்ட குத்தகைகளின் தொகுதிக்கு இந்த நியமத்தை பிரயோகிக்கலாம். ஒரு தொகுதிக்கான கணக்கீடாயின், ஒரு உரிமம் அத்தொகுதியின் அளவு மற்றும் தொகுப்பு கொள்ளளவுகளை பிரதிபலிக்கும் வகையிலான மதிப்பீடுகளையும் அனுமானங்களையும் பயன்படுத்தும்.

### ஒப்பந்தங்களின் சேர்மானம்

ஆ2 இந்த நியமத்தை பிரயோகித்தலில், ஒரு உரிமம் ஒரே காலத்தில் மற்றும் ஒரே எதிர்தரப்பிடம் (அல்லது எதிர்தரப்புடன் தொடர்புபட்டவர்களிடம்) ஈடுபட்ட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட

ஒப்பந்தங்களை இணைக்கும். மேலும், பின்வருவனவற்றில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கொள்கைகளை திருப்திபடுத்துமாயின் அந்த ஒப்பந்தங்கள் தனி உடன்படிக்கையாக கணக்கீடு செய்யப்படும்:

(அ) ஒப்பந்தங்கள், அனைத்து வியாபார நோக்கங்களுடனும் ஒரு தொகுதியாக பேரம் பேசப்படுகின்றன. இதன்போது இணைந்த ஒப்பந்தங்கள் இல்லாது அந்நோக்கங்களை புரிந்து கொள்ள முடியாது.

(ஆ) ஒப்பந்தங்களுக்கு செலுத்த வேண்டிய தொகையானது மற்றைய ஒப்பந்தத்தின் விலையிலும் செயற்பாட்டிலும் தங்கியுள்ளது. அல்லது

(இ) உடன்படிக்கையிலுள்ள அடிப்படை சொத்தினை பயன்படுத்துவதற்கான உரிமையானது (அல்லது அடிப்படை சொத்தினை பயன்படுத்துவதற்கான சில உரிமங்கள் ஒவ்வொரு உடன்படிக்கையிலும் காவப்படும்), பந்தி ஆ32 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒரு தனி குத்தகை ஆக்கக்கூறினை உருவாக்கும்.

## விதி விலக்குகளை ஏற்பிசைவு செய்தல்: குறைந்த பெறுமதியுடைய அடிப்படை சொத்துக்கான குத்தகைகள் (பந்திகள் 5-8)

ஆ3 பந்தி ஆ7 இல் குறிப்பிடப்பட்டுள்ளதைத் தவிர, இந்நியமமானது பந்தி 6 இனை பயன்படுத்தி குறைந்த பெறுமதியுடைய அடிப்படை சொத்துக்கான குத்தகைகளுக்களுக்கு கணக்கீட்டை மேற்கொள்ள குத்தகை பெறுனருக்கு அனுமதியளிக்கிறது. குத்தகை பெறுனர் ஒருவர் அடிப்படை சொத்தின் பெறுமதியை அச்சொத்து புதியதாய் இருக்கும் போதான பெறுமதியின் அடிப்படையில் மதிப்பீடு செய்வார். இதன் போது அச்சொத்து குத்தகைக்கு விடப்பட்ட காலப்பகுதி கருத்தில் கொள்ளப்படாது.

ஆ4 குறைந்த பெறுமதியுடைய அடிப்படை சொத்தானது முழுமையான அடிப்படையில் செயற்படுகின்றதா என்பதை மதிப்பீடு செய்தல். பந்தி 6 இன் கணக்கீட்டுக்கான தகுதியை, குறைந்த பெறுமதியுடைய சொத்துக்களின் குத்தகைகள் பெறுகின்றன. இதன் போது அக்குத்தகைகள் குத்தகை பெறுனருக்கு பொருண்மையுடையதா என்பது கருத்தில் கொள்ளப்படாது. மதிப்பீடானது அளவு, இயல்பு மற்றும் குத்தகைக்கான சூழ்நிலைகள் என்பவற்றால் பாதிக்கப்படாது. அதற்கமைய, வேறுபட்ட குத்தகை பெறுனர்கள், குறிப்பிட்ட ஒரு அடிப்படை சொத்தானது குறைந்த பெறுமதியுடையதா என்பது தொடர்பான ஒரே தீர்மானத்தை அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றனர்.

ஆ5 பின்வருவனவற்றின் போது மட்டுமே, அடிப்படை சொத்தொன்று குறைந்த பெறுமதியுடையதாய் இருக்க முடியும்:

(அ) குத்தகை பெறுனர் அடிப்படை சொத்தின் (அச்சொத்தின் மூலம் அல்லது குத்தகை பெறுனருக்கு உடனடியாக பெறக்கூடிய ஏனைய வளங்களுடன அச்சொத்தின் மூலம்) பயன்பாட்டினால் கிடைக்கும் நன்மை மற்றும்,

(ஆ) ஏனைய சொத்துகளில் அதிகம் தங்கியிராத அடிப்படை சொத்து அல்லது ஏனைய சொத்துகளுடன் அதிகம் தொடர்பில்லாத அடிப்படை சொத்து.

ஆ6 குறைந்த பெறுமதியுடைய சொத்தொன்று புதியதாய் இருக்கும் போது பொதுவாக குறைபெறுமதியற்றது என்னும் இயல்பினை கொண்டிருப்பின், அடிப்படை சொத்தொன்றின் குத்தகையானது அக்குறிப்பிட்ட குறை பெறுமதியுடைய சொத்தின் குத்தகைக்கான தகுதியை பெறாது. உதாரணமாக, காருக்கான குத்தகையானது குறை பெறுமதியுடைய சொத்தின் குத்தகை என்னும் தகுதியை பெறாது. ஏனெனின், ஒரு புதிய கார் பொதுவாக குறை பெறுமதியை கொண்டிருக்காது.

ஆ7 குத்தகை பெறுனர் ஒருவர் சொத்தொன்றை உபகுத்தகையில் ஈடுபடுத்தினால், பிரதான குத்தகையானது குறை பெறுமதியுடைய சொத்தின் குத்தகைக்கான தகுதியை பெறாது.

ஆ8 குறை பெறுமதியுடைய சொத்துக்கான உதாரணமானது மடிக்கணனி மற்றும் பிரத்தியோக கணனி, அலுவலக தளபாட மற்றும் தொலைபேசி உபகரணங்களின் சிறிய உருப்படிகள் என்பவற்றை உள்ளடக்கும்.

## குத்தகையை ஏற்பிசைவு செய்தல் (பந்தி 9-11)

ஆ9 அடையாளம் காணப்பட்ட சொத்தின் குறிப்பிட்ட காலப்பகுதிக்கான பயன்பாட்டை கட்டுப்படுத்தும் உரிமையை ஒரு ஒப்பந்தம் வெளிப்படுத்துகின்றதா என்பதை மதிப்பிடுவதற்கு (பந்தி ஆ13-ஆ20 பார்க்க), ஒரு உரிமம் தனது வாடிக்கையாளர் பின்வருவன இரண்டையும் பயன்பாட்டு காலம் முழுவதும் கொண்டிருப்பாரா என்பதை மதிப்பீடு செய்யும்:

(அ) அடையாளம் காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டில் மூலமான கணிசமான பொருளாதார அனுகூலங்களை பெற்றுகொள்வதற்கான உரிமை (பந்தி ஆ21-ஆ23 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு), மற்றும்

(ஆ)அடையாளம் காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டினை வழிநடத்துவதற்கான உரிமை.

ஆ10 அடையாளம் காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டை, ஒப்பந்த காலத்தின் ஒரு பகுதிக்கு மாத்திரம் கட்டுப்படுத்தும் உரிமையை ஒரு வாடிக்கையாளர் கொண்டிருப்பின், அக்காலப்பகுதிக்கு மாத்திரம் அந்த ஒப்பந்தம் குத்தகையை உள்ளடக்கியிருக்கும்.

ஆ11 பொருட்கள் அல்லது சேவையை பெற்றுகொள்வதற்கான ஒரு ஒப்பந்தமானது ஒரு கூட்டு ஏற்பாட்டின் மூலம் மேற்கொள்ள முடியும். இதன் போது, ஒப்பந்தத்தில், அந்த கூட்டு ஏற்பாடானது ஒரு வாடிக்கையாளராக கருதப்படும். அதற்கமைய, குறிப்பிட்ட ஒப்பந்தம் குத்தகையை உள்ளடக்கியுள்ளதா என்பதை மதிப்பிடுகையில், அக்கூட்டு ஏற்பாடானது அடையாளம் காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டை பயன்பாட்டு காலம் முழுவதற்கும் கட்டுப்படுத்தும் உரிமையை கொண்டுள்ளதா என்பதை ஒரு உரிமம் மதிப்பீடு செய்யும்.

ஆ12 ஒரு ஒப்பந்தமானது வெவ்வேறான ஒவ்வொரு சாத்தியமுள்ள குத்தகை ஆக்கக்கூறுக்கான குத்தகையை உள்ளடக்கியுள்ளதா என்பதை உரிமமொன்று மதிப்பீடு செய்யும். வெவ்வேறான குத்தகை ஆக்கக்கூறுகளுக்கான வழிகாட்டலுக்காக பந்தி ஆ32 ஐ பார்க்கவும்.

### அடையாளம் காணப்பட்ட சொத்துக்கள்

ஆ13 ஒரு சொத்தானது ஒரு ஒப்பந்தத்தில் வெளிப்படையாக குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொதுவாக அடையாளப்படுத்தப்படும். எனினும், ஒரு சொத்தானது வாடிக்கையாளரால் பயன்படுத்தப்படுவதற்கு உடனடியாக கிடைக்கப்பெறுமாறு மேற்கொள்ளப்படும் தருணம் அது மறைமுகமாக குறிப்பிடப்பட்டுள்ளவாறும் அடையாளப்படுத்தப்பட முடியும்.

*கணிசமான பிரதியீட்டு உரிமைகள்*

ஆ14 சொத்தொன்று குறிப்பிடப்பட்டு இருப்பினும், வழங்குனர் சொத்தின் பயன்பாட்டு காலம் முழுவதும் சொத்தினை பிரதியீடு செய்வதற்கான கணிசமான உரிமையை கொண்டிருப்பின், ஒரு வாடிக்கையாளர் அடையாளம் காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டை கட்டுப்படுத்தும் உரிமையை கொண்டிருக்கமாட்டார். பின்வரும் இரண்டு நிபந்தனைகளும் இருந்தால் மட்டுமே, ஒரு வழங்குனருடைய சொத்தினை பிரதியீடு செய்வதற்கான உரிமை கணிசமானதாகும்.

(அ) வழங்குனர் சொத்தின் பயன்பாட்டு காலம் முழுவதும் மாற்று சொத்தினை பிரதியீடு செய்வதற்கான நடைமுறை வல்லமையை கொண்டிருப்பார் (உதாரணமாக, வழங்குனர் சொத்தொன்றை பிரதியீடு செய்தலும் மாற்று சொத்துக்கள் வழங்குனருக்கு தயாராக இருப்பதையும் அல்லது சீர்மதிப்புமான காலப்பகுதிக்குள் வழங்குனரால் வழங்க முடியுமானதையும், வாடிக்கையாளரால் தடுக்க முடியாது): மற்றும்

(ஆ)சொத்தினை பிரதியீடு செய்வதற்கான உரிமையை நிறைவேற்றுவதன் மூலம் வழங்குனர் பொருளாதார அனுகூலங்களை அடைவார் (அதாவது சொத்தினை பிரதியீடு செய்வதனுடன் இணைந்துள்ள பொருளாதார அனுகூலங்களானது சொத்தினை பிரதியீடு செய்வதனுடன்

இணைந்துள்ள கிரய செலவினங்களை விட அதிகரித்து இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆ15 குறிப்பிட்ட திகதி அல்லது குறிப்பிட்ட நிகழ்வொன்றின் போதோ அல்லது அதற்கு பின்னரோ சொத்தை பிரதியீடு செய்வதற்கு, வழங்குனருக்கு உரிமை அல்லது கடமை இருப்பின், வழங்குனருடைய பிரதியீட்டு உரிமை கணிசமானதல்ல. ஏனெனின், வழங்குனர் சொத்தின் பயன்பாட்டு காலம் முழுவதும் மாற்று சொத்தினை பிரதியீடு செய்வதற்கான நடைமுறை வல்லமையை கொண்டிருக்கமாட்டார்.

ஆ16 ஒரு உரிமத்தின், சொத்தினை பிரதியீடு செய்வதற்கான வழங்குனருடைய உரிமையானது கணிசமானதா என்னும் மதிப்பாய்வானது, ஒப்பந்தத்தின் தொடக்கத்தின் போதான தகவல்கள் மற்றும் சூழ்நிலைகளின் அடிப்படையில் உள்ளது மற்றும் இது ஒப்பந்தத்தின் தொடக்கத்தின் போது அநேகமாக நிகழும் என கருதப்படாத எதிர்கால நிகழ்வுகளின் பெறுமதியை தவிர்த்து நிற்கும். மதிப்பாய்வில் தவிர்க்கப்பட வேண்டிய, ஒப்பந்தத்தின் தொடக்கத்தின் போது அநேகமாக நிகழும் என கருதப்படாத எதிர்கால நிகழ்வுகளின் உதாரணங்கள்:

(அ) சொத்தின் பயன்பாட்டிற்கு சந்தை பெறுமதியை விட கூடிய கொடுப்பனவிற்காக ஒரு எதிர்கால வாடிக்கையாளருடனான ஒப்பந்தம்.

(ஆ) ஒப்பந்தத்தின் தொடக்கத்தில் கணிசமாக உருவாக்கப்பட்டிராத புதிய தொழில்நுட்ப அறிமுகம்.

(இ) வாடிக்கையாளருடைய, சொத்தின் பயன்பாடு அல்லது சொத்தின் செயற்பாடு மற்றும் ஒப்பந்தத்தின் தொடக்கத்தில் கருதப்பட்ட பயன்பாடு அல்லது செயற்பாடு ஆகியவற்றுக்கான கணிசமான வேறுபாடு.

(ஈ) பயன்பாட்டு காலத்தில் சொத்தின் சந்தை விலைக்கும் ஒப்பந்தத்தின் தொடக்கத்தில் கருதப்பட்ட சந்தை விலைக்குமான பாரிய வேறுபாடு.

ஆ17 வாடிக்கையாளரின் வளாகத்தில் அல்லது வேறிடத்தில் சொத்தொன்று இருக்குமாயின், பிரதியீட்டுடன் தொடர்புடைய செலவினங்களானது வழங்குனரின் வளாகத்தில் இருக்கும் போதான செலவினங்களை விட பொதுவாக அதிகமாகும். ஆகவே, பிரதியீட்டு சொத்துடனான அனுகூலங்களும் அநேகமாக அதிகமாகும்.

ஆ18 திருத்தங்கள் அல்லது பராமரிப்புக்காக சொத்தினை பிரதியீடு செய்வதற்கான வழங்குனருக்கு உரித்தான உரிமை அல்லது கடமையானது, அச்சொத்து ஒழுங்காக இயங்கவில்லையாயின் அல்லது புதிய தொழில்நுட்ப மேம்படுத்தல்கள் கிடைக்கப்பெறின், வாடிக்கையாளரை அடையாளப்படுத்தப்பட்ட ஒரு சொத்தின் பயன்படுத்துவதற்கான உரிமையை வைத்திருக்க தடை செய்யாது.

ஆ19 சொத்தினை பிரதியீடு செய்வதற்கான கணிசமான உரிமை வழங்குனருக்கு இருக்கிறதா என்பதின் உடனடியான முடிவை வாடிக்கையாளரால் எடுக்க முடியாவிட்டால், சொத்தினை பிரதியீடு செய்வதற்கான உரிமை கணிசமானதல்ல என்று வாடிக்கையாளர் கருதுவார்.

*சொத்தின் பகுதிகள்*

ஆ20 சொத்தொன்றின் கொள்ளளவு பகுதியானது பௌதிக ரீதியாக வேறுபடுத்தப்பட்டிருப்பின் அது அடையாளப்படுத்தப்பட்ட சொத்தாகும் (உதாரணமாக, கட்டடத்தின் தரை). சொத்தொன்றின் கொள்ளளவு அல்லது ஏனைய பகுதி பௌதிக ரீதியாக வேறுபடுத்தப்பட்டிருக்கவில்லையாயின் (உதாரணமாக, பைபர் ஆப்டிக் கேபிள்) அது அடையாளப்படுத்தப்பட்ட சொத்தல்ல. அதாவது சொத்தினுடைய அனைத்து கொள்ளளவையும் கணிசமாக வெளிப்படுத்தி, அதன்மூலம் வாடிக்கையாளருக்கு அச்சொத்தின் பயன்பாட்டின் மூலமான கணிசமான பொருளாதார அனுகூலங்களை வழங்குமாயின் அது அடையாளப்படுத்தப்பட்ட சொத்தல்ல.

## பயன்பாட்டின் மூலமான பொருளாதார அனுகூலங்களை பெற்றுகொள்ளும் உரிமை

ஆ21 அடையாளப்படுத்தப்பட்ட சொத்தின் பயன்பாட்டை கட்டுப்படுத்துவதற்கு, ஒரு வாடிக்கையாளர் பயன்பாட்டின் மூலமான பொருளாதார அனுகூலங்களை பயன்பாட்டு காலம் முழுவதும்

பெற்றுகொள்ளும் உரிமையை கொண்டிருக்க வேண்டப்படுகிறார் (உதாரணமாக, காலம் முழுவதும் சொத்தினை பயன்படுத்துவதற்கான பிரத்தியேக உரிமை). ஒரு வாடிக்கையாளர் சொத்தொன்றின் பயன்பாட்டின் மூலமான பொருளாதார அனுகூலங்களை, பயன்படுத்தல், வைத்திருத்தல் அல்லது உபகுத்தகை போன்ற பல வழிகளில் நேராகவோ அல்லது மறைமுகமாகவோ பெற்றுகொள்ள முடியும். சொத்தொன்றின் பயன்பாட்டின் மூலமான பொருளாதார அனுகூலங்கள் அதன் முதன்மை உற்பத்தி மற்றும் உப-உற்பத்திகளை உள்ளடக்கியிருக்கும் (இவ்வுற்பத்திகள் மூலமான சாத்தியமான காசுப்பாய்ச்சல்களையும் உள்ளடக்கியிருக்கும்), மற்றும் சொத்தொன்றின் பயன்பாட்டின் மூலமான, ஏனைய பொருளாதார அனுகூலங்கள் மூன்றாம் தரப்பினருடனான வர்த்தக ஊடுசெயல்யின் மூலம் தேறக்கூடியன.

ஆ22 சொத்தொன்றின் பயன்பாட்டின் மூலமான அனைத்து பொருளாதார அனுகூலங்களையும் கணிசமாக பெற்றுகொள்வதற்கான உரிமையை மதிப்பிடும் போது, ஒரு உரிமம், சொத்தினை பயன்படுத்துவதற்கான உரிமைக்கான (பந்தி ஆ30ஐ பார்க்கவும்) வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் சொத்தினை பயன்படுத்துவதால் தோன்றும் பொருளாதார அனுகூலங்களை கருத்தில் கொள்ளும். உதாரணமாக:

(அ) ஒரு ஒப்பந்தம் மோட்டார் வாகனமொன்றை அதன் பாவனைக்காலப்பகுதியில் குறிப்பிட்ட பிராந்தியத்துக்குள் மட்டுமே பயன்படுத்துவதற்கு வரையறுக்குமாயின், ஒரு உரிமம், மோட்டார் வாகனத்தை அந்த பிராந்தியத்துக்குள் பயன்படுத்துவதால் தோன்றும் பொருளாதார அனுகூலங்களை மட்டுமே கருத்தில் கொள்ளும்.

(ஆ)ஒப்பந்தம் ஒன்று மோட்டார்வாகனமொன்றை அதன் பாவனைக்காலப்பகுதியில் குறிப்பிட்ட மைல் துாரத்திற்கு மட்டுமே செலுத்த முடியும் என வாடிக்கையாளரை வரையறுப்பின், ஒரு உரிமம், மோட்டார்வாகனத்தை அந்த அனுமதிக்கப்பட்ட தொலைவுக்கு பயன்படுத்துவதால் தோன்றும் பொருளாதார அனுகூலங்களை மட்டுமே கருத்தில் கொள்ளும்.

ஆ23 வழங்குனருக்கோ அல்லது வேற தரப்பினருக்கோ சொத்தின் பயன்பாட்டின் மூலம் கிரயமாக பெற்றுகொள்ளப்பட்ட காசுப்பாய்ச்சலின் ஒரு பகுதியை செலுத்துமாறு ஒப்பந்தம் ஒன்று வாடிக்கையாளரை நிர்ப்பந்திக்குமாயின், வாடிக்கையாளர் அச்சொத்தினை பயன்படுத்துவதன் மூலமான பொருளாதார அனுகூலங்களின் ஒரு பகுதியாக கிரயமாக செலுத்தப்பட்ட காசுப்பாய்ச்சல்களானது கருதப்படும். உதாரணமாக, மீள்விற்பனை தளத்தினை பயன்படுத்தி மேற்கொள்ளும் விற்பனையின் ஒரு வீதத்தை அதன் பயன்பாட்டுக்காக வழங்குனருக்கு செலுத்த வேண்டும் என வாடிக்கையாளர் கேட்டுகொள்ளப்பட்டால், அந்த நிபந்தனை அந்த மீள்விற்பனை தளத்தினை பயன்படுத்துவதன் மூலமான அனைத்து பொருளாதார அனுகூலங்களையும் பெற்றுகொள்வதற்கான உரிமையை அந்த வாடிக்கையாயர் வைத்திருக்க தடை செய்யாது. ஏனெனின், விற்பனையில் தோன்றிய காசுப்பாய்ச்சல்களானது மீள்விற்பனை தளத்தினை பயன்படுத்துவதன் மூலம் வாடிக்கையாளர் பெற்றுகொண்ட பொருளாதார அனுகூலங்களாக கருதப்படும்.

## பாவனையை வழிநடத்துவதற்கான உரிமை

ஆ24 பின்வரும் ஏதாவதொரு சந்தர்ப்பம் ஏற்படின், பாவனைக்காலம் முழுவதும் அடையாளம் காணப்பட்ட சொத்தொன்றின் பயன்பாட்டினை வழிநடத்துவதற்கான உரிமையை வாடிக்கையாளர் ஒருவர் கொண்டிருப்பார்.

(அ) எப்படி மற்றும் எந்த தேவைக்காக, பாவனைக்காலம் முழுவதும் சொத்தானது பயன்படுத்தப்படுகிறது என்பதை வழிநடத்துவதற்கான உரிமையை வாடிக்கையாளர் கொண்டிருப்பார் (பந்தி ஆ25-ஆ30 குறிப்பிடப்பட்டுள்ளவாறு) அல்லது

(ஆ)எப்படி மற்றும் எந்த தேவைக்காக சொத்தானது பயன்படுத்தப்படுகிறது என்பது தொடர்பான தீர்மானங்கள் முன்கூட்டியே தீர்மானிக்கப்படுகின்றன மற்றும்:

(i) வழங்குனர் கொண்டிருக்கும் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை மாற்றும் அதிகாரத்தை தவிர்த்து, பாவனைக்காலம் முழுவதும் சொத்தினை தொழிற்படுத்துவதற்கான (அல்லது வரையறுக்கப்பட்ட முறையில் சொத்தினை தொழிற்படுத்துவதற்காக ஏனையோரை வழிநடத்துவதற்கான) உரிமையை வாடிக்கையாளர் கொண்டிருப்பார்: அல்லது

(ii) எப்படி மற்றும் எந்த தேவைக்காக, பாவனைக்காலம் முழுவதும் சொத்தானது பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை முன்கூட்டியே தீர்மானிக்கும் வகையில் வாடிக்கையாளர் சொத்தினை (அல்லது குறித்த சொத்தின் அம்சங்களை) வடிவமைத்தல்.

*எப்படி மற்றும் எந்த தேவைக்காக சொத்தானது பயன்படுத்தப்படுகிறது*

ஆ25 ஒப்பந்தத்தில் சொற்பொருள் விளக்கம் அளிக்கப்பட்ட, பாவனைக்கான உரிமையின் நோக்கெல்லைக்குள், எப்படி மற்றும் எந்த தேவைக்காக, சொத்தானது பயன்படுத்தப்படுகிறது என்பதை வழிநடத்துவதற்கான உரிமையை வாடிக்கையாளர் கொண்டிருப்பின், அவர் எப்படி மற்றும் எந்த தேவைக்காக, பாவனைக்காலம் முழுவதும் சொத்தானது பயன்படுத்தப்படுகிறது என்பதை மாற்ற முடியும். இந்த மதிப்பீட்டை மேற்கொள்ளும் போது, உரிமமொன்று, எப்படி மற்றும் எந்த தேவைக்காக, பாவனைக்காலம் முழுவதும் சொத்தானது பயன்படுத்தப்படுகிறது என்பதை மாற்றுதலுடன் நெருங்கிய தொடர்புடைய தீர்மானங்களை மேற்கொள்ளும் உரிமையை கருத்தில் கொள்ளும். பயன்பாட்டின் மூலம் பெறப்படும் பொருளாதார அனுகூலங்களை பாதிக்கும் போது தீர்மானங்களை மேற்கொள்ளும் உரிமைகள் தொடர்புப்படுகின்றன. மிகவும் தொடர்புடைய தீர்மானங்களை மேற்கொள்ளும் உரிமைகள் அநேகமாக வேறுபட்ட ஒப்பந்தங்களுக்கு வித்தியாசப்படும், இது சொத்தின் இயல்பு மற்றும் ஒப்பந்தத்தின் விதிகள், கட்டுறுப்புக்களில் தங்கியுள்ளது.

ஆ26 தீர்மானங்களை மேற்கொள்ளும் உரிமைக்கான உதாரணங்களானது எப்படி மற்றும் எந்த தேவைக்காக சொத்தானது பயன்படுத்தப்படுகிறது என்பதை மாற்றுவதற்கான உரிமையை வழங்கும், பின்வருவன உள்ளடங்களான வாடிக்கையாளருடைய உரிமைக்கான வரையறுக்கப்பட்ட நோக்கெல்லைக்குள்ளான சந்தர்ப்பங்களில் தங்கியுள்ளது.

(அ) சொத்தினால் உற்பத்தியாக்கப்படுகின்ற உற்பத்தியின் வகையை மாற்றுவதற்கான உரிமைகள் (உதாரணமாக, கப்பல் கொள்கலன்களை பொருட்களை கொண்டு செல்லவா அல்லது களஞ்சியப்படுத்தவா பயன்படுத்துவது என்பதை தீர்மானிக்க அல்லது மீள்விற்பனை தளத்தில் இருந்து விற்கப்படும் உற்பத்தியின் கலவையை தீர்மானிக்க):

(ஆ)எப்போது வெளியீடொன்று உற்பத்தியாக்கப்படுகிறது என்பதை மாற்றுவதற்கான உரிமை (உதாரணமாக, இயந்திரம் அல்லது மின் இயந்திரத் தொகுதி எப்போது பயன்படுத்தப்படுகிறது என்பதை தீர்மானிக்க):

(இ) எங்கே வெளியீடொன்று உற்பத்தியாக்கப்படுகிறது என்பதை மாற்றுவதற்கான உரிமை (உதாரணமாக, கப்பல் அல்லது சரக்கு வண்டியின் இலக்கை தீர்மானிக்க அல்லது எங்கே உபகரணமொன்று பயன்படுத்தப்படுகிறது என்பதை தீர்மானிக்க): மற்றும்

(ஈ) வெளியீடொன்று உற்பத்தியாக்கப்படுகிறதா என்பதையும் அதன் அளவையும் மாற்றும் உரிமை (உதாரணமாக, மின் ஆலையிலிருந்து சக்தியை உற்பத்தி செய்யவும் அந்த இயந்திரத் தொகுதியிலிருந்து எவ்வளவு சக்தியை உற்பத்தி செய்வது என்பதையும் தீர்மானிக்க).

ஆ27 எப்படி மற்றும் எந்த தேவைக்காக சொத்தானது பயன்படுத்தப்படுகிறது என்பதை மாற்றுவதற்கான உரிமையை வழங்காத தீர்மானங்களை மேற்கொள்ளும் உரிமைக்கான உதாரணங்களானது சொத்தினை பராமரிப்பதற்கு அல்லது தொழிற்படுத்துவதற்கான வரையறுக்கப்பட்ட உரிமையை உள்ளடக்கியிருக்கும். அதகைய உரிமைகள் வாடிக்கையாளரால் அல்லது வழங்குனரால் கொண்டிருக்கப்படும். சொத்தினை பராமரிப்பதற்கு அல்லது தொழிற்படுத்துவதற்கான உரிமைகள் சொத்தினை வினைதிறனாக பயன்படுத்துவதற்கு அத்தியாவசியம், எனினும், அவை எப்படி மற்றும் எந்த தேவைக்காக சொத்தானது பயன்படுத்தப்படுகிறது என்பதை வழிநடத்துவதற்கான உரிமைகள் அல்ல மற்றும் இவை எப்படி மற்றும் எந்த தேவைக்காக சொத்தானது பயன்படுத்தப்படுகிறது என்பது பற்றிய தீர்மானத்தில் தங்கியுள்ளன. எவ்வாறாயினும், எப்படி மற்றும் எந்த தேவைக்காக சொத்தானது பயன்படுத்தப்படுகிறது என்பது பற்றிய பொருத்தமான முடிவுகள் முன்கூட்டியே தீர்மானிக்கப்படின் (பந்தி ஆ24(ஆ)(i) ஐ பார்க்கவும்), சொத்தினை தொழிற்படுத்துவதற்கான உரிமையானது சொத்தின் பாவனையை வழிநடத்துவதற்கான உரிமையை வாடிக்கையாளருக்கு வழங்ககூடும்.

**பயன்பாட்டு காலத்தில் மற்றும் அதற்கு முன்னர் தீர்மானிக்கப்படும் முடிவுகள்**

ஆ28 எப்படி மற்றும் எந்த தேவைக்காக சொத்தானது பயன்படுத்தப்படுகிறது என்பது பற்றிய பொருத்தமான முடிவுகள் முன்கூட்டியே பல வழிகளில் தீர்மானிக்கப்பட முடியும். உதாரணமாக, பொருத்தமான முடிவுகள் முன்கூட்டியே சொத்தினது வடிவமைப்பினால் அல்லது சொத்தினது பயன்பாட்டின் மீதான ஒப்பந்த கட்டுப்பாடுகள் மூலம் தீர்மானிக்கப்பட முடியும்.

ஆ29 சொத்தின் பாவனையை வழிநடத்துவதற்கான உரிமையை வாடிக்கையாளர் ஒருவர் கொண்டிருக்கிறாரா என்பதை உரிமமொன்று மதிப்பிடுகையில், வாடிக்கையாளர் சொத்தினை (அல்லது சொத்தின் பகுதிகளை) பந்தி ஆ24 (ஆ) (ii) இல் விபரிக்கப் பட்டுள்ளவாறு வடிவமைத்தில்லாத போது, பாவனைக்காலத்தில் சொத்தின் பயன்பாடு பற்றிய முடிவுகளை மேற்கொள்ளும் உரிமைகளை மட்டும் கருத்தில் கொள்ளும். அதனை தொடர்ந்து, பந்தி ஆ24(ஆ)(ii) இல் உள்ள கட்டுறுப்புக்கள் இருக்காவிடின், ஒரு உரிமம் பாவனை காலத்திற்கு முன்னர் முன்கூட்டி தீர்மானிக்கப்பட்ட முடிவுகளை கருத்தில் கொள்ளாது. உதாரணமாக, ஒரு வாடிக்கையாளர் பாவனை காலத்திற்கு முன்னரே சொத்தொன்றின் வெளியீட்டை குறிப்பிடுவதற்கு மட்டுமே வல்லமையை கொண்டிருப்பின், அந்த சொத்தின் பாவனையை வழிநடத்துவதற்கான உரிமையை அந்த வாடிக்கையாளர் கொண்டிருக்க மாட்டார். சொத்தின் பயன்பாட்டுடன் தொடர்புடைய தீர்மானங்களை மேற்கொள்ளும் ஏனைய உரிமைகளை தவிர்த்து, பாவனை காலத்திற்கு முன்னரே ஒப்பந்தத்தின் வெளியீட்டை குறிப்பிடுவதற்கான வல்லமையானது, எந்தவொரு வாடிக்கையாளரும் பொருட்களையோ அல்லது சேவையையோ கொள்வனவு செய்வதற்கான அதே உரிமையை ஒரு வாடிக்கையாளருக்கு வழங்கும்.

**பாதுகாப்பு உரிமை**

ஆ30 ஒரு ஒப்பந்தமானது குறிப்பிட்ட சொத்தின் அல்லது ஏனைய சொத்துக்களில், அதன் தொழிற்பாட்டாளர்களை பாதுகாப்பதற்கு அல்லது சட்டத்திட்டங்களுடனான வழங்குனரின் இணக்கப்பாட்டை நிச்சயப்படுத்துவதற்கு, வழங்குனர் கொண்டுள்ள நலன்களை பாதுகாப்பதற்கு ஏற்படுத்திய கட்டுறுப்புக்கள் மற்றும் நிபந்தனைகளை உள்ளடக்கி இருக்கக்கூடும். பாதுகாப்பு உரிமைக்கு உதாரணமாக, ஒரு ஒப்பந்தமானது பின்வருவனவற்றை மேற்கொள்ளலாம்:


(i) சொத்தினது உச்ச பயன்பாடு அல்லது வாடிக்கையாளர் எங்கு அல்லது எப்போது சொத்தை பயன்படுத்த முடியும் என வரையறுத்தல்,

(ii) வாடிக்கையாளரை குறித்த தொழிற்பாட்டு நடைமுறைகளை பின்பற்றுமாறு வேண்டுதல் அல்லது

(iii) சொத்தொன்று எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும் என வழங்குனருக்கு அறிவிக்குமாறு வாடிக்கையாளரை வேண்டுதல்.

பாதுகாப்பு உரிமையானது பொதுவாக வாடிக்கையாளரொருவர் சொத்தினது பயன்பாட்டை வழிநடத்தும் உரிமையை வைத்திருப்பதை தடுக்க தனியாக அன்றி வாடிக்கையாளருக்குரிய பயன்படுத்தும் உரிமைக்கான நோக்கெல்லையை சொற்பொருள் விளக்கும்.

ஆ31 பின்வரும் பாய்வு மாதிரி வரைபடமானது ஒரு ஒப்பந்தமானது குத்தகையா அல்லது குத்தகையை உள்ளடக்கியதா என்பதை மதிப்பிடுவதற்கு உரிமங்களுக்கு உதவிபுரியும்.



## ஒப்பந்தத்தின் ஆக்கக்கூறுகளை வேறுபடுத்துதல் (பந்தி 12-17)

ஆ32 பின்வருவன இரண்டும் காணப்படின் அடிப்படை சொத்தொன்றினை பயன்படுத்துவதற்கான உரிமையானது குத்தகை ஆக்கக்கூறுகளில் இருந்து வேறுபடும்.

(அ) குத்தகை பெறுனர் அடிப்படை சொத்தின் மூலம் அல்லது குத்தகை பெறுனருக்கு தயாராக பெறக்கூடிய ஏனைய வளங்களுடன் அச்சொத்தை பயன்படுத்துவதால் நன்மையடைய முடியும். தயாராக பெறக்கூடிய வளங்களாவன வெவ்வேறாக (குத்தகை வழங்குனரால் அல்லது ஏனைய வழங்குனரால்) விற்கப்படுகின்ற அல்லது குத்தகைக்கு விடப்படுகின்ற பொருட்கள் அல்லது சேவைகள் அல்லது குத்தகை பெறுனரால் ஏற்கனவே பெற்றுகொள்ளப்பட்ட (குத்தகை வழங்குனரிடம் இருந்து அல்லது ஏனைய ஊடுசெயல்கள் அல்லது நிகழ்வுகளில் இருந்து): மற்றும்

(ஆ) அடிப்படை சொத்தானது ஏனைய அடிப்படை சொத்துக்களில் அதிகமாக சார்ந்து அல்லது அதிகமாக தொடர்பை கொண்டிராமல் இருக்கும். உதாரணமாக, குத்தகை பெறுனர் ஒருவர், அடிப்படை சொத்தானது ஏனைய அடிப்படை சொத்துக்களில் அதிகமாக சார்ந்து அல்லது அதிகமாக தொடர்பை கொண்டிருக்கவில்லை என்பதை சுட்டிகாட்ட கூடிய ஒப்பந்தத்திலுள்ள அந்த ஏனைய அடிப்படை சொத்துக்களை பயன்படுத்தும் உரிமையை கணிசமாக பாதிப்படைய செய்யாது, அடிப்படை சொத்தை பயன்படுத்த கூடாதென தீர்மானிக்க முடியும்.

ஆ33 ஒப்பந்தமொன்று குத்தகை பெறுனருக்கு பொருட்கள் அல்லது சேவைகளை மாற்றாத ஊடுசெயல் மற்றும் கிரயம் ஆகியவற்றுக்காக குத்தகை பெறுனரால் செலுத்தப்பட வேண்டிய தொகையை உள்ளடக்கி இருக்கும். உதாரணமாக, குத்தகை தருனர் ஒருவர் செலுத்த வேண்டிய மொத்த தொகைக்குள், நிர்வாக செயற்பாட்டுக்கான செலவினம் அல்லது குத்தகை பெறுனருக்கு பொருட்கள் அல்லது சேவைகளை மாற்றாத குத்தகையுடன் தொடர்புடைய ஏனைய செலவினங்களை ஆகியவற்றை உள்ளடக்குவார். அத்தகைய செலுத்தப்பட வேண்டிய தொகையானது, ஒப்பந்தத்தின் வேறொரு கூறுக்கான தேவையை தோற்றுவிக்காது, ஆனால் ஒப்பந்தத்தின் வேறொரு கூறுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த விற்பனை கிரயத்தின் ஒரு பகுதியாக கருதப்படும்.

### குத்தகை காலப்பகுதி (பந்தி 18-21)

ஆ34 குத்தகை காலப்பகுதி மற்றும் குத்தகையின் இரத்துச் செய்யப்பட முடியாத காலப்பகுதியை மதிப்பிடுகையில், உரிமம் ஒப்பந்தத்தின் வரைவிலக்கணத்தை பிரயோகித்து, ஒப்பந்தம் அமுக்கலாக்கப்படும் காலத்தைத் தீர்மானிக்கும். குத்தகை பெறுனர் மற்றும் குத்தகை வழங்குனர் இருவரும் மற்றவரின் அனுமதியை பெறாமல் மிகக்குறைந்த அபராதத்துடன் குத்தகையை முறிப்பதற்கான உரிமையைத் தனித்தனியாக கொண்டிருக்கும் போது, குத்தகையானது வலுவுள்ளதாக இருக்காது.

ஆ35 குத்தகையை முறிப்பதற்கான உரிமையானது குத்தகை பெறுனருக்கு மட்டுமே இருப்பின் உரிமம் குத்தகைக் காலத்தை நிர்ணயிக்கும் போது, அவ்வுரிமை குத்தகை பெறுனருக்கு காணப்படும் குத்தகையை முறிப்பதற்கான தெரிவாகவே கருதப்படும். குத்தகையை முறிப்பதற்கான உரிமை குத்தகை வழங்குனருக்கு மட்டுமே இருப்பின், இரத்துச்செய்ய முடியாத குத்தகைக் காலமானது குத்தகையை முறிப்பதற்கான தெரிவையும் கொண்ட காலத்தை உள்ளடக்கியதாக இருக்கும்.

ஆ36 குத்தகைக் காலமானது தொடக்கத் திகதியில் ஆரம்பிப்பதுடன், இது குத்தகை வழங்குனரால் குத்தகை பெறுனருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் வாடகையற்ற காலப்பகுதியை உள்ளடக்கும்.

ஆ37 தொடக்கத் திகதியில், உரிமம் குத்தகை பெறுனர் குத்தகையை நீடிப்பதற்கு அல்லது தொடர்பபட்ட சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கான தெரிவை நிறைவேற்றுவதற்கு அல்லது குத்தகையை முறிப்பதற்கான தெரிவை நிறைவேற்றாது விடுவதற்கான நியாயமான நிச்சயதன்மையை கொண்டிருக்கிறாரா என்பதை மதிப்பீடு செய்யும். தொடக்கத் திகதியில் இருந்து தெரிவை நிறைவேற்றும் திகதி வரை, தெரிவை நிறைவேற்றுவதற்கு அல்லது தெரிவை நிறைவேற்றாது விடுவதற்குக் குத்தகை பெறுனருக்காக ஒரு பொருளாதார சலுகையை உருவாக்குகின்ற எதிர்பார்க்கபட்ட சந்தர்ப்பங்கள் மற்றும் பொருண்மைத் தன்மையை

உள்ளடக்கிய சந்தர்ப்பங்கள் மற்றும் பொருண்மைத்தன்மை என்பவற்றை உரிமம் கவனத்தில் கொள்ளும். கருத்தில் கொள்ள வேண்டிய காரணிகளுக்கான உதாரணம் பின்வருவனவற்றை உள்ளடக்கும், ஆனால் இவற்றுடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்படவில்லை:

(அ) சந்தை வீதங்களுடன் ஒப்பிடப்பட்ட, விருப்பத் தெரிவுக் காலப்பகுதிக்குரிய ஒப்பந்த கட்டுறுப்புக்கள் மற்றும் நிபந்தனைகள், அவையாவன:

(i) ஏதாவது விருப்பத் தெரிவுக் காலப்பகுதியிலான குத்தகைக் கொடுப்பனவு தொகை:

(ii) முறிப்புக்கான அபராதம் மற்றும் எஞ்சிய பெறுமதி உத்தரவாதங்கள் ஆகியவற்றின் மூலமான கொடுப்பனவுகள் முதலிய குத்தகைக்கான ஏதாவது மாறுபடும் கொடுப்பனவுகள் தொகை அல்லது ஏனைய உறுமுரிமை கொடுப்பனவுகள் தொகை, மற்றும்

(iii) ஆரம்ப விருப்பத் தெரிவுக் காலப்பகுதியின் பின்னர் நிறைவேற்ற கூடிய ஏதாவது விருப்பத்தெரிவுகளின் கட்டுறுப்புக்கள் மற்றும் நிபந்தனைகள் (உதாரணமாக, ஒரு நீட்டிப்பு காலத்தின் இறுதியில் சந்தைப் பெறுமதியை விட தற்போது குறைந்த விகிதத்தில் நிறைவேற்றக் கூடிய ஒரு கொள்வனவுக்கான தெரிவு).

(ஆ) குத்தகையை நீடிப்பதற்கு அல்லது முறிப்பதற்கு அல்லது அடிப்படையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கான தெரிவானது நிறைவேற்ற கூடியதாகும்போது குத்தகை பெறுனருக்கு கணிசமான பொருளாதார நன்மைகளை பெற்றுத்தரும் என எதிர்பார்க்கப்படும் ஒப்பந்தக் காலத்தில் மேற்கொள்ளப்படும் (அல்லது மேற்கொள்ள எதிர்பார்க்கப்படும்) கணிசமான குத்தகை விருத்திகள்.

(இ) குத்தகை முறிவு தொடர்பான செலவினங்கள், பேரம்பேசல் செலவினம், மீள் இடமாற்ற செலவினம், குத்தகை பெறுனரின் தேவைகளுக்கு பொருத்தமான இன்னொரு அடிப்படை சொத்தினை இனங்காணுதலுக்கான செலவினம், குத்தகை பெறுனரின் செயற்பாடுகளுக்காக ஒரு புதிய சொத்தினை ஒருங்கிணைப்பதற்கான செலவினம் அல்லது ஒப்பந்தத்தால் குறிப்பிடப்பட்ட நிபந்தனையில் அல்லது ஒப்பந்தத்தால் குறிப்பிடப்பட்ட இருப்பிடத்தில் அடிப்படை சொத்தினைத் திருப்பி வழங்குவது தொடர்பான செலவினங்கள் மற்றும் உள்ளடங்கலான முறிவுக்கான அபராதம் மற்றும் ஒத்த செலவினங்கள்.

(ஈ) உதாரணமாக, அடிப்படை சொத்தொன்று சிறப்பியல்புடைய சொத்தா, அடிப்படை சொத்தின் இருப்பிடம் மற்றும் பொருத்தமான மாற்றீடுகளின் கிடைக்கக்கூடிய தன்மை போன்றவற்றைக் கருத்தில் கொண்டு கொள்வனவாளரின் செயற்பாடுகளுக்கான அடிப்படை சொத்துக்களின் முக்கியத்துவம், மற்றும்

(உ) தெரிவை நிறைவேற்றுதலுடன் தொடர்புடைய நிபந்தனை (அதாவது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிபந்தனைகள் பூர்த்தியாகுமாயின் மாத்திரம் தெரிவை நிறைவேற்ற கூடியதாய் இருத்தல்), மற்றும் அத்தகைய நிபந்தனைகள் காணப்படுவதற்கான சாத்தியம்.

ஆ38 குத்தகையை நீடிப்பதற்கு அல்லது முறிப்பதற்கான விருப்பத்தெரிவானது குத்தகை பெறுனர் குத்தகை வழங்குனருக்கு விருப்பத்தெரிவு நிறைவேற்றப்படுகிறதா இல்லையா என்பதைப் பொருட்படுத்தாமல் ஆகக்குறைந்த அல்லது நிலையான காசு மீளளிப்புக்கு உத்தரவாதம் கொடுத்தல் (உதாரணமாக, ஒரு எஞ்சிய பெறுமதி உத்தரவாதம்) போன்ற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிபந்தனைசார் பண்புகளுடன் இணைந்து இருக்கலாம். அத்தகைய நிலைமைகளின் போது, பந்தி ஆ-42 இல் விபரிக்கப்பட்ட நிலையான செலவினத்திற்கான வழிகாட்டலைக் கவனத்தில் எடுக்காது, உரிமம், குத்தகை பெறுனர் குத்தகையை நீடிப்பதற்கான தெரிவை நிறைவேற்றுவதற்கு அல்லது குத்தகை முறிவுக்கான தெரிவை நிறைவேற்றாமைக்கான நியாயமான நிச்சயதன்மையை கொண்டிருப்பார் என கருதும்.

ஆ39 இரத்துச்செய்ய முடியாத காலப்பகுதி குறுகியதாக உள்ளவரையில் குத்தகை பெறுனர் குத்தகையை நீடிப்பதற்கான தெரிவை நிறைவேற்றுவதற்கு அல்லது குத்தகை முறிவுக்கான தெரிவை நிறைவேற்றாமைக்கான சந்தர்ப்பங்கள் அதிகமாகும். ஏனென்றால் மாற்று சொத்தொன்றை பெறுவது தொடர்பான செலவானது இரத்து செய்ய முடியாத காலப்பகுதி

குறுகியதாக உள்ளவரையில் விகிதாசார ரீதியாக அதிகமாக இருப்பதற்கான சாத்தியங்கள் உள்ளன.

ஆ40 குத்தகை பெறுனரின் குறித்த வகையான சொத்துக்களை (குத்தகை அல்லது சொந்தமான) பொதுவாக பயன்படுத்தியுள்ள காலப்பகுதி தொடர்பான கடந்த கால நடைமுறை, மற்றும் அவ்வாறு செய்வதற்கான அதன் பொருளாதார காரணங்கள், குத்தகை பெறுனர் ஒருவர் தெரிவை நிறைவேற்றுவதற்கு அல்லது நிறைவேற்றாமைக்கான நியாயமான நிச்சயதன்மையை கொண்டிருக்கிறாரா என்பதை மதிப்பிடுவதற்கு உதவிபுரியும் தகவல்களை வழங்கும். உதாரணமாக, குத்தகை பெறுனர் ஒருவர் குறித்த வகையான சொத்துக்களை குறித்த காலப்பகுதியில் பொதுவாக பயன்படுத்தியிருப்பின் அல்லது குத்தகை பெறுனர் குறித்த வகையான அடிப்படை சொத்துக்களின் குத்தகையில் அடிக்கடி தெரிவை நிறைவேற்றுவதை நடைமுறையாக கொண்டிருப்பின், குத்தகை பெறுனர் அந்தச் சொத்துக்களின் குத்தகையில் தெரிவை நிறைவேற்றுவதற்கு நியாயமான நிச்சயதன்மை இருக்கிறதா என்பதை மதிப்பிடுவதற்கு அத்தகைய கடந்தகால நடைமுறைக்கான பொருளாதார காரணங்களை கருத்தில் கொள்வார்.

ஆ41 பந்தி 20 குறிப்பிடுவதாவது, தொடக்கத் திகதிக்கு பின்னர், குறிப்பிட்ட ஒரு நிகழ்வு அல்லது குத்தகை பெறுனரின் கட்டுப்பாட்டிற்குள்ளான சூழ்நிலைகளில் தோன்றும் குத்தகை காலப்பகுதியின் தீர்மானத்தில் முன்னர் உள்ளடக்கப்பட்ட தெரிவை நிறைவேற்றுவதற்கு அல்லது நிறைவேற்றாமைக்கான நியாயமான நிச்சயதன்மைக்கானதொரு கணிசமான மாற்றத்தை உண்டாக்கும் நிகழ்வுகள் அல்லது சூழ்நிலை மாற்றங்களின் போது குத்தகை பெறுனர் குத்தகை காலப்பகுதியை மீள்மதிப்பீடு செய்வார். குறிப்பிட்ட நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளில் தோன்றும் மாற்றங்கள் உதாரணமாக பின்வருவனவற்றை உள்ளடக்கி இருக்கும்:

(அ) தொடக்கத் திகதியில் எதிர்பார்க்கப்படாத கணிசமான விருத்திகளான குத்தகையை நீடிப்பதற்கு அல்லது குத்தகையை முறிப்பதற்கு அல்லது அடிப்படை சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கான தெரிவை நிறைவேற்ற கூடியதாக மாறும்போது குத்தகை பெறுனருக்காக கணிசமான பொருளாதார நன்மைகளை கொண்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ)தொடக்கத் திகதியில் எதிர்பார்க்கப்படாத அடிப்படைச் சொத்தின் ஒரு கணிசமான திருத்தம் அல்லது தனிப்பயனாக்கம்

(இ) அடிப்படை சொத்தின் முன்னர் தீர்மானிக்கப்பட்ட குத்தகை காலப்பகுதியின் முடிவிற்கு அப்பாற்பட்ட ஒரு காலப்பகுதிக்காக ஒரு உப குத்தகைக்கான உருவாக்கம்: மற்றும்

(ஈ) ஒரு தெரிவை நிறைவேற்றுதல் அல்லது நிறைவேற்றாமையுடன் நேரடி தொடர்புடைய குத்தகை பெறுனரின் வியாபாரத் தீர்மானம் (உதாரணமாக, ஒரு மாற்று சொத்தை அகற்றுவதற்காக அல்லது சொத்தை பயன்படுத்துவதற்கான உரிமை உள்வாங்கப்பட்டிருக்கும் ஒரு வியாபார அலகை அகற்றுவதற்கான ஒரு இணைப்பு சொத்தின் குத்தகையை நீடிப்பதற்கான தீர்மானம்)

## கருத்துமிக்க நிலையான குத்தகைக் கொடுப்பனவு (பந்தி 27(அ), 36(இ) மற்றும் 70(அ))

ஆ42 குத்தகைக் கொடுப்பனவுகள் எந்தவொரு கருத்தாளம் மிக்க நிலையான குத்தகைக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கி இருக்கும். கருத்தாளம் மிக்க நிலையான குத்தகைக் கொடுப்பனவுகள் என்பது தோற்றப்பாட்டில் மாறுபாட்டைக் கொண்டு ஆனால் அதன் உள்ளடக்கத்தில் தவிர்க்க முடியாத கொடுப்பனவுகள் ஆகும். கருத்தாழம் மிக்க நிலையான குத்தகைக் கொடுப்பனவுகள் காணப்படுவதற்கான உதாரணங்களாவன:

(அ) மாறுபடும் குத்தகைக் கொடுப்பனவுகளாகக் கட்டமைக்கப்பட்டுள்ள, ஆனால் அத்தகைய கொடுப்பனவுகளில் உண்மையான மாறுபாடுகள் காணப்படுவதில்லை. அத்தகைய கொடுப்பனவுகள் உண்மையான பொருளாதார கருத்தாழமற்ற மாறுபாடுகளைக் கொண்டிருக்கும். அத்தகைய கொடுப்பனவுகளுக்கான உதாரணங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கி இருக்கும்,

(i) குத்தகை காலப்பகுதியில் தொழிற்படக்கூடிய ஆற்றலை உறுதிபடுத்திய சொத்துக்கு அல்லது இடம்பெறாது இருப்பதற்கான நேர்மையான சாத்தியக் கூறுகள் இல்லாத நிகழ்வு ஒன்றுக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய கொடுப்பனவுகள், அல்லது

(ii) அடிப்படை சொத்தினை பயன்படுத்துவதுடன் தொடர்புடைய மாறுபடும் குத்தகைக் கொடுப்பனவுகளாக தொடக்கத்தில் கட்டமைக்கப்பட்ட, ஆனால் தொடக்கத் திகதிக்கு பிறகு ஒரு கட்டத்தில் அந்த அடிப்படை சொத்துகளுக்காக மாறுபாடுகள் தீர்க்கப்படும் போது, எஞ்சிய குத்தகை காலப்பகுதிக்கான அந்தக் கொடுப்பனவுகள் நிலையானதாகும் வகையிலான கொடுப்பனவுகள். மாறுபாடுகள் தீர்க்கப்படும் போது, அத்தகைய கொடுப்பனவுகளின் கருத்து நிலையான குத்தகைக் கொடுப்பனவுகளாக மாறும்.

(ஆ)குத்தகை பெறுனர் மேற்கொள்ள கூடிய ஒன்றுக்கு மேற்பட்ட கொடுப்பனவு தொகுதிகள் காணப்பட, ஆனால் அவற்றில் ஒன்று மாத்திரமே யதார்த்தமானதாக இருத்தல். இத்தகைய நிலைமையின் போது, உரிமம் யதார்த்தமான குத்தகைக் கொடுப்பனவுகளை மாத்திரம் கருத்தில் கொள்ளும்.

(இ) குத்தகை பெறுனர் மேற்கொள்ள கூடிய ஒன்றுக்கு மேற்பட்ட கொடுப்பனவு தொகுதிகள் காணப்பட, ஆனால் அவற்றில் ஒன்றேனும் மேற்கொள்ளப்பட வேண்டியதாக இருத்தல். இத்தகைய நிலைமைகளின் போது, உரிமம் மிகக்குறைந்த பெறுமதிகளின் (ஒரு கழிவிடப்பட்ட அடிப்படையில்) கூட்டுதொகையான கொடுப்பனவு தொகுதியே குத்தகைக் கொடுப்பனவாக கருத்தில் கொள்ளும்.

## தொடக்க திகதிக்கு முன்னர் அடிப்படை சொத்துடனான குத்தகை பெறுனரின் ஈடுபாடு

### அடிப்படை சொத்தின் நிர்மாணம் மற்றும் வடிவமைப்பு தொடர்பாக குத்தகை பெறுனரின் செலவினங்கள்

ஆ43 உரிமம் அடிப்படை சொத்தொன்றை குத்தகை பெறுனரின் பாவனைக்கு வழங்கும் முன்னரே குத்தகைக்கான பேரம்பேசலை மேற்கொள்ளலாம். சில குத்தகைகளுக்கு அடிப்படை சொத்தானது குத்தகை பெறுனரின் பாவனைக்காக நிர்மாணிக்கப்பட அல்லது மீள்வடிவமைக்கப்பட வேண்டி ஏற்படலாம். ஒப்பந்த கட்டுறுப்பு மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய, ஒரு குத்தகை பெறுனர் சொத்தின் நிர்மாணம் மற்றும் வடிவமைப்பு தொடர்பான கொடுப்பனவை மேற்கொள்ள வேண்டப்படலாம்.

ஆ44 குத்தகை பெறுனர் அடிப்படை சொத்தின் நிர்மாணம் மற்றும் வடிவமைப்பு தொடர்பாக செலவுகளை மேற்கொண்டிருப்பின், குத்தகை பெறுனர் அச்செலவுகளுக்கு SLFRS 16 போன்ற பொருத்தமான நியமங்களை பிரயோகித்து கணக்கீட்டை மேற்கொள்வார். அடிப்படை சொத்தின் நிர்மாணம் மற்றும் வடிவமைப்பு தொடர்பான செலவுகள் அடிப்படை சொத்தினை பயன்படுத்துவதற்கான உரிமைக்காக குத்தகை பெறுனரால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை உள்ளடக்காது. அடிப்படை சொத்தினை பயன்படுத்துவதற்கான உரிமைக்கான கொடுப்பனவுகள் கொடுப்பனவுகளுக்கான காலத்தைப் பொருட்படுத்தாது குத்தகைக்கான கொடுப்பனவுகளாகக் கருதப்படும்.

### அடிப்படை சொத்தின் சட்டபூர்வ உரிமை

ஆ45 குத்தகை பெறுனருக்கு சட்டபூர்வ உரிமையை மாற்றுதல் மற்றும் சொத்தினை குத்தகை பெறுனருக்கு குத்தகைக்கு வழங்குதலுக்கு முன் ஒரு குத்தகை வழங்குனர் அடிப்படை சொத்தின் சட்டபூர்வ உரிமையை பெற்றுகொள்ளலாம். சட்டபூர்வ உரிமையை பெற்றுகொள்ளுதல் மாத்திரம் அந்த ஊடுசெயலுக்கு எவ்வாறான கணக்கீட்டை மேற்கொள்வது என்பதை தீர்மானிக்காது.

ஆ46 குத்தகை வழங்குனருக்கு சட்டபூர்வ உரிமையை மாற்றுவதற்கு முன்னர் குத்தகை பெறுனர் அடிப்படை சொத்தினை கட்டுப்படுத்துபவராக இருப்பின் (அல்லது கட்டுப்படுத்தும் அதிகாரத்தினை பெறுவாராயின்), அந்த நடவடிக்கையானது விற்றுமீள் குத்தகை நடவடிக்கையாகும், அது பந்தி 98-103 இனை பிரயோகித்து கணக்கீடு மேற்கொள்ளப்படும்.

ஆ47 எவ்வாறாயினும், குத்தகை வழங்குனருக்கு சட்டபூர்வ உரிமையை மாற்றுவதற்கு முன் குத்தகை பெறுனர் அடிப்படை சொத்தினை கட்டுப்படுத்தும் அதிகாரத்தினை பெறமாட்டாராயின் அந்த நடவடிக்கையானது விற்று மீள்குத்தகையில் ஈடுபடும் ஒரு நடவடிக்கையல்ல. உதாரணமாக குத்தகை வழங்குனர் உற்பத்தியாளரிடம் சொத்தினை கொள்வனவு செய்து அதனை குத்தகை பெறுனருக்கு குத்தகைக்கு வழங்கும் நடவடிக்கையானது உற்பத்தியாளர், குத்தகை வழங்குனர், மற்றும் குத்தகை பெறுனர் ஆகியோரின் பேரம்பேசுதலாகக் கொள்ளப்படும். குத்தகை

வழங்குனருக்கு சட்டபூர்வ உரிமையை மாற்றுவதற்கு முன் குத்தகை பெறுனர் அடிப்படை சொத்தின் சட்டபூர்வ உரிமையை பெற்றுகொள்ளலாம். இதன் போது குத்தகை பெறுனர் அடிப்படை சொத்தின சட்டபூர்வ உரிமையை பெற்றுகொண்டு ஆனால் சொத்தினை கட்டுப்படுத்தும் அதிகாரத்தினை பெறமாட்டாராயின் (குத்தகை வழங்குனருக்கு இதனை மாற்றுவதற்கு முன்) அந்நடவடிக்கையானது விற்று மீள்குத்தகையில் ஈடுபடும் ஒரு நடவடிக்கையாக பதியப்படாது, ஆனால் குத்தகையாக பதியப்படும்.

**குத்தகை வெளிப்பாடுகள் (பந்தி 59)**

ஆ48 பந்தி 51 இன் வெளிப்படுத்தல் தேவைப்பாட்டை நிறைவேற்றுவதற்கு அவசியமான குத்தகை நடவடிக்கைகள் பற்றிய மேலதிக வெளிப்படுத்தல்களின் போதுமான தன்மையைத் தீர்மானிப்பதற்கு, குத்தகை பெறுனர் பின்வருவனவற்றை கருத்தில் கொள்வார்:

(அ) நிதிக் கூற்றுக்களின் பயனாளர்களுக்கு இத் தகவல்கள் தொடர்புடையதா. நிதிக் கூற்றுக்களின் பயனாளர்களுக்கு இத் தகவல்கள் தொடர்புடையதாயின் மாத்திரமே, குத்தகை பெறுனர் பந்தி 51 இல் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக தகவல்களை வழங்குவார். அத்தகைய பயனாளர்கள் பின்வருவனவற்றை புரிந்து கொள்வதற்கு இது உதவும்.

**(i)** குத்தகைகளால் வழங்கப்படும் நெகிழ்வுத்தன்மை. குத்தகைகள் நெகிழ்வை வழங்கலாம், உதாரணமாக குத்தகை பெறுனர் முறிவுக்கான தெரிவை நிறைவேற்றுவதன் மூலம் அல்லது குத்தகைகளை சாதகமான கட்டுறுப்புக்கள் மற்றும் நிபந்தனைகளுடன் புதுப்பித்தல் மூலம் அதன் வெளிப்பாட்டை குறைக்க முடியுமாயின்.

**(ii)** குத்தகையால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள். குத்தகைகள் கட்டுப்பாடுகளை விதிக்ககூடும், உதாரணமாக குத்தகை பெறுனரை குறிப்பிட்ட நிதி விகிதங்களைப் பேணுமாறு கேட்டுகொள்ளல்.

**(iii)** முக்கிய மாறிகளுக்கான அறிக்கையிடப்பட்ட தகவல்களது உணர்திறன். அறிக்கையிடப்பட்ட தகவல்கள் உணர்திறன் மிக்கவையாகவும், உதாரணமாக எதிர்கால மாறும் குத்தகைக் கொடுப்பனவுகள்.

**(iv)** குத்தகை மூலம் தோன்றும் ஏனைய இடர்களுக்கான வெளிப்பாடு

**(v)** தொழிற்துறை நடைமுறைகளில் இருந்தான விலகல். இத்தகைய விலகல்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கும், உதாரணமாக, குத்தகை பெறுனரின் குத்தகைத் தொகுப்பைப் பாதிக்கக்கூடிய அசாதாரண அல்லது தனிச்சிறந்த குத்தகைக் கட்டுறுப்புக்கள் மற்றும் நிபந்தனைகள்.

(ஆ)பிரதான நிதிக் கூற்றுக்களில் பிரசுரிக்கப்பட்ட அல்லது குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் மூலம் அந்த தகவல்கள் வெளிப்படையானவையா. குத்தகை பெறுனர் ஒருவர் நிதிக் கூற்றுயில் எங்கேனும் ஏற்கனவே பிரசுரிக்கப்பட்ட தகவல்களை மீண்டும் பிரசுரிக்க தேவையில்லை.

ஆ49 மாறுபடும் குத்தகைக் கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய சந்தர்ப்பங்களில் தங்கியுள்ள மேலதிக தகவல்கள் பந்தி 51 இன் வெளிப்படுத்தல் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு தேவைப்படலாம் என்பதுடன், பந்தி 51, நிதிக்கூற்றுக்களின் பயனாளர்கள் அதனை மதிப்பிடுவதற்கு உதவும் தகவல்களை உள்ளடக்கி இருக்கும். உதாரணமாகப

(அ) மாறுபடும் குத்தகைக் கொடுப்பனவுகளை பயன்படுத்துவதற்கான குத்தகை பெறுனரின் காரணங்களும் அத்தகைய கொடுப்பனவுகளின் தாக்கமும்:

(ஆ)மாறுபடும் குத்தகைக் கொடுப்பனவுகளின் நிலையான கொடுப்பனவுகளுக்கான தொடர்புடைய பரிணாமம்:

(இ) மாறுபடும் குத்தகைக் கொடுப்பனவுகள் தங்கியுள்ள முக்கிய மாறிகள் மற்றும் அத்தகைய முக்கிய மாறிகளின் மாற்றங்களுக்கேற்ப எவ்வாறு கொடுப்பனவுகள் வேறுபடும் என எதிர்பார்க்கப்படுகின்றன மற்றும்

(ஈ) மாறுபடும் குத்தகைக் கொடுப்பனவுகளின் ஏனைய செயற்பாட்டு மற்றும் நிதியியல் தாக்கங்கள்.

ஆ50 சூழ்நிலைகளில் தங்கியுள்ள, நீடிப்பதற்கான தெரிவு அல்லது முறிப்பதற்கான தெரிவுகளுடன் தொடர்புடைய மேலதிக தகவல்கள் பந்தி 51 இன் வெளிப்படுத்தல் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு தேவைப்படலாம். பந்தி 51, நிதிக்கூற்றுக்களின் பயனாளர்கள் அதனை மதிப்பிடுவதற்கு உதவும் தகவல்களை உள்ளடக்கி இருக்கும். உதாரணமாக:

(அ) நீடிப்பதற்கான தெரிவு அல்லது முறிப்பதற்கான தெரிவுகளை பயன்படுத்துவதற்காக குத்தகை பெறுனரின் காரணங்கள் மற்றும் அத்தகைய தெரிவுகள் இருத்தல்.

(ஆ) குத்தகைக் கொடுப்பனவுக்கான *தெரிவு குத்தகைக் கொடுப்பனவின்* தொடர்பியல் பரிணாமம்

(இ) குத்தகைப் பரிப்புக்களின் அளவீட்டில் உள்ளடக்கப்படாத தெரிவுகளை நிறைவேற்றுதலின் நிலவுதல். மற்றும்

(ஈ) ஏனைய செயற்பாட்டு மற்றும் நிதியியல் தாக்கங்கள்

ஆ51 சூழ்நிலைகளில் தங்கியுள்ள எஞ்சிய பெறுமதி உத்தரவாதங்ளுடன் தொடர்புடைய மேலதிக தகவல்கள் பந்தி 51 இன் வெளிப்படுத்தல் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு தேவைப்படலாம். பந்தி 51, நிதிக் கூற்றுக்களின் பயனாளர்கள் அதனை மதிப்பிடுவதற்கு உதவும் தகவல்களை உள்ளடக்கி இருக்கும். உதாரணமாக:

(அ) எஞ்சிய பெறுமதி உத்தரவாதங்கள் வழங்குவதற்கு குத்தகை பெறுனரின் காரணங்கள் மற்றும் அத்தகைய உத்தரவாதங்களின் நிலவுகை.

(ஆ) குத்தகை பெறுனரின் எஞ்சிய பெறுமதி இடருக்கான வெளிப்பாட்டின் பரிணாமம்

(இ) அத்தகைய உத்தரவாதங்கள் வழங்கப்பட்ட அடிப்படை சொத்தின் இயல்பு, மற்றும்

(ஈ) அத்தகைய உத்தரவாதங்களின் ஏனைய செயற்பாட்டு மற்றும் நிதியியல் தாக்கங்கள்.

ஆ52 சூழ்நிலைகளில் தங்கியுள்ள விற்றுமீள் குத்தகை பெறுதல் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய மேலதிக தகவல்கள் பந்தி 51 இன் வெளிப்படுத்தல் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு தேவைப்படலாம். பந்தி 51, நிதிக்கூற்றுக்களின் பயனாளர்கள் அதனை மதிப்பிடுவதற்கு உதவும் தகவல்களை உள்ளடக்கி இருக்கும். உதாரணமாக:

(அ) விற்று பின் மீள்குத்தகைக்கு பெறுவதம் குத்தகை பெறுனரின் காரணங்கள் மற்றும் அத்தகைய நடவடிக்கைகளின் நிலவல்.

(ஆ) விற்று பின் மீள்குத்தகை மேற்கொள்ளப்படும் தனிதனி நடவடிக்கைகளின் முதன்மை கட்டளைகள் மற்றும் நிபந்தனைகள்

(இ) குத்தகை பரிப்புக்களின் அளவீட்டில் உள்ளடக்கப்படாத கொடுப்பனவுகள் மற்றும்

(ஈ) அறிக்கையிடற் காலப்பகுதியில் விற்று பின் மீள்குத்தகை மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் காசு பாய்ச்சல் தாக்கம்.

## குத்தகை வழங்குனர் குத்தகை வகைப்படுத்தல் (பந்தி 61-66)

ஆ53 இந்த நியமத்தின் குத்தகை வழங்குனருக்கான குத்தகைகளின் வகைப்படுத்தலானது குத்தகை அடிப்படை சொத்தின் இடர்களையும் வெகுமதிகளையும் உரித்துக்கு கைமாற்றும் அளவின் அடிப்பிடையில் தங்கியுள்ளது. பயனற்ற கொள்ளளவு மூலமான நட்டம் அல்லது தொழில்நுட்ப வழக்கிழப்பு மற்றும் மாறும் பொருளாதார நிலைமைகள் காரணமாக வருமானத்தில் தோன்றும் மாற்றம் என்பவற்றை இடர் உள்ளடக்கும். வெகுமதிகள், அடிப்படை சொத்தினது பொருளாதார

ஆயுட்காலத்தில் மேற்கொள்ளப்படும் இலாபகரமான நடவடிக்கையின் எதிர்பார்ப்பாகவும் மற்றும் பெறுமதியின் மதிப்பேற்ற ஆதாயம் அல்லது எஞ்சிய தேறிய பெறுமதியை பிரதிநிதித்துவப்படுத்தும்.

ஆ54 ஒரு குத்தகை ஒப்பந்தம் உருவாக்கத் திகதிக்கும் ஆரம்ப திகதிக்கும் இடையில் ஏற்படக்கூடிய குறிப்பிட்ட மாற்றங்களுக்காக (குத்தகை வழங்குனரின் அடிப்படை சொத்தின் கிரயத்திலான அத்தகைய ஒரு மாற்றம் அல்லது குத்தகை வழங்குனரின் நிதி குத்தகையிலான ஒரு மாற்றம்) குத்தகைக் கொடுப்பனவுகளை சரிசெய்வதற்கான கட்டளைகள் மற்றும் நிபந்தனைகள் என்பவற்றை உள்ளடக்கும். இதன்போது குத்தகையை வகைப்படுத்துதல் தேவைக்காக, எந்தவொரு அத்தகைய மாற்றங்களும் புத்தாக்க திகதியில் ஏற்பட்டதாக கருதப்படும்.

ஆ55 ஒரு குத்தகையானது காணி மற்றும் கட்டடம் ஆகிய இரு கூறுகளையும் உள்ளடக்கும் போது, ஒரு குத்தகை வழங்குனர், பந்தி 62-66 மற்றும் ஆ-53-ஆ54 ஆகியவற்றை பிரயோகித்து ஒரு நிதிக் குத்தகை அல்லது ஒரு தொழிற்பாட்டுக் குத்தகையாக வகைப்படுத்தப்பட்ட ஒவ்வொரு கூறுகளின் வகைப்படுத்தலையும் மதிப்பீடு செய்வார். காணியானது ஒரு தொழிற்பாட்டுக் குத்தகையா அல்லது ஒரு நிதிக் குத்தகையா என தீர்மானிப்பதில், பொதுவாக காணி கொண்டிருக்கும் வரையறுக்கப்படாத பொருளாதார ஆயுட் காலமானது ஒரு முக்கிய கருதுபொருள் விடயமாகும்.

ஆ56 காணி மற்றும் கட்டடம் ஆகியவற்றுக்காக வகைப்படுத்தலையும் கணக்கீட்டையும் மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்படும் போது, ஒரு குத்தகை வழங்குனர் குத்தகைக் கொடுப்பனவுகளை (ஏதாவது முன்கூட்டிய பெருந்தொகை உள்ளடங்கலாக) காணி மற்றும் கட்டடம் ஆகிய கூறுகளுக்கிடையில் தொடக்கத் திகதியில் குத்தகையின் காணி கூறு மற்றும் கட்டடக்கூறின் குத்தகை பகுதியின் அண்ணளவான சீர்மதிப்பின் விகிதத்தில் ஒதுக்கீடு செய்வார். குத்தகைக் கொடுப்பனவுகளை அந்த இரு கூறுகளுக்கிடையில் நம்பகமாக ஒதுக்கீடு செய்ய முடியாத போது, இரு கூறுகளும் தொழிற்பாட்டுக் குத்தகை எனத் தெளிவாயின், முழு குத்தகையும் தொழிற்பாட்டுக் குத்தகையாக வகைப்படுத்தப்படுவதுடன், அவ்வாறு இல்லாவிடில் முழுக் குத்தகையும் நிதிக் குத்தகையாக வகைப்படுத்தப்படும்.

ஆ57 குத்தகைக்கு பொருண்மையற்ற காணி கூறின் பெறுமதியைக் கொண்ட, காணி மற்றும் கட்டட குத்தகைக்காக ஒரு குத்தகை வழங்குனர் காணி மற்றும் கட்டடங்களை வகைப்படுத்தும் தேவைக்காக ஒரு தனி அலகாக கருதுவார். மேலும் பந்தி 62-66 மற்றும் ஆ-53-ஆ54 ஆகியவற்றை பிரயோகித்து அதனை ஒரு நிதி குத்தகை அல்லது ஒரு தொழிற்பாட்டுக் குத்தகையாக வகைப்படுத்துவார். இதன் போது, ஒரு குத்தகை வழங்குனர், கட்டடங்களின் பொருளாதார ஆயுட் காலத்தை அனைத்து அடிப்படை சொத்துக்களினதும் பொருளாதார ஆயுட் காலமாகக் கொள்வார்.

**உப குத்தகை வகைப்படுத்தல்**

ஆ58 உபகுத்தகையை வகைப்படுத்தலில், ஒரு இடைநிலை குத்தகை வழங்குனர் உபகுத்தகையை, ஒரு நிதிக் குத்தகை அல்லது ஒரு தொழிற்பாட்டுக் குத்தகையாகப் பின்வருமாறு வகைப்படுத்துவார்:

(அ) முதன்மை குத்தகையானது குறுங்காலக் குத்தகைக, உரிமம் ஒரு குத்தகை கொள்வனவாளராக பந்தி 6 இனைப் பிரயோகித்துக் கணக்கீட்டை மேற்கொண்டிருப்பின், அந்த உப குத்தகை ஒரு தொழிற்பாட்டுக் குத்தகையாக வகைப்படுத்தப்படும்.

(ஆ) இல்லையாயின், அடிப்படை சொத்துக்களை (உதாரணமாக, குத்தகையின் பொருளான ஆதனம், இயந்திரம் மற்றும் பொறிகள்) குறித்துக் காட்டாது முதன்மைக் குத்தகை மூலம் தோன்றும் சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கான உரிமையைக் குறித்து அந்த உபகுத்தகை வகைப்படுத்தப்படும்.

## பின்னிணைப்பு (இ)

## விளைவுக்கு வரும் திகதியும் நிலைமாற்றமும்

*இந்தப் பின்னிணைப்பானது நியமத்தின் ஒரு பகுதியாகுவதுடன், இந்நியமத்தின் ஏனைய பகுதிகளுக்குள்ள அதே அதிகாரத்தினை கொண்டிருக்கும்.*

## விளைவுக்கு வரும் திகதி

இ1. உரிமம் 01 சனவரி, 2019 இல் அல்லது அதற்கு பின் ஆரம்பிக்கும் வருடாந்த நிதிக் கூற்று காலப்பகுதிக்கு இந்நியமத்தைப் பிரயோகிக்கும். இந்நியமத்தின் ஆரம்பப் பிரயோகத் திகதியிலோ அல்லது அதற்கு முன்னரோ "LKAS 15 *வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிருந்தான வருமானம்*" நியமத்தைப் பிரயோகிக்கும் உரிமங்களுக்கு இந்நியமத்தை முன்கூட்டிய பிரயோகிப்பதற்கு அனுமதியளிக்கப்படுகிறது. ஒரு உரிமம் முன்கூட்டியே இந்நியமத்தை பிரயோகிக்குமாயின், அது அந்த விடயத்தை வெளிப்படுத்தும்.

## நிலைமாற்றம்

இ2. பந்திகள் இ1–இ19 உள்ள தேவைப்பாடுகளின் நிமித்தம், ஒரு உரிமம் முதன்முதலில் இந்நியமத்தை பிரயோகிக்கின்ற வருடாந்த நிதிக் கூற்று காலத்தின் ஆரம்பமே ஆரம்பப் பிரயோகத் திகதியாகும்.

## ஒரு குத்தகைக்கான வரைவிலக்கணம்

இ3. சூழ்நிலைக்கேற்ற நடைமுறைக்கமைய, ஒரு ஒப்பந்தம் குத்தகையா அல்லது குத்தகையை கொண்டிருக்கிறதா என்பதை உரிமம், ஆரம்பப் பிரயோகத் திகதியில் மீள்மதிப்பீடு செய்ய தேவையில்லை. அதற்கு பதிலாக அந்த உரிமம் பின்வருவனவற்றிற்கு அனுமதிக்கப்படும்.

(அ) LKAS 17 "*குத்தகைகள்*" மற்றும் IFRIC 4 "*ஒரு ஒப்பந்தம் குத்தகையை கொண்டிருக்கிறதா என்பதை தீர்மானித்தல்*" ஆகியவற்றை பிரயோகித்து முன்னரே இனங்காணப்பட்ட குத்தகைகளுக்கு இந்நியமத்தை பிரயோகிக்கலாம். அத்தகைய குத்தகைகளுக்கு உரிமம், பந்திகள் இ5–இ18 உள்ள நிலைமாற்றங்களுக்கான தேவைப்பாடுகளை பிரயோகிக்கும்.

(M) LKAS 17 மற்றும் IFRIC 4 ஆகியவற்றை பிரயோகித்து ஒரு ஒப்பந்தம் குத்தகையை கொண்டிருக்கிறது என்பதை முன்னரே இனங்காணப்படாத ஒப்பந்தங்களுக்கு இந்நியமத்தை பிரயோகிக்கலாகாது.

இ4. ஒரு உரிமம், பந்தி இ3 குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலைக்கேற்ற வகைக்கான நடைமுறையை தெரிவு செய்யுமாயின், அதனை வெளிப்படுத்துவதுடன் அனைத்து ஒப்பந்தங்களுக்கும் சூழ்நிலைக்கேற்ற வகைக்கான நடைமுறையை பிரயோகிக்கும். இதன் விளைவாக, இந்நியமத்தின் ஆரம்பப் பிரயோகத் திகதியிலோ அல்லது அதற்கு பின்னரோ ஈடுபடுத்தப்பட்ட அல்லது மாற்றப்பட்ட ஒப்பந்தங்களுக்கு மட்டுமே, உரிமம் பந்திகள் 9–11 உள்ள தேவைப்பாடுகளை பிரயோகிக்கும்,

### குத்தகை பெறுனர்

இ5. ஒரு குத்தகை பெறுனர், அவரின் குத்தகைகளுக்கு இந்நியமத்தை இவ்வாறு பிரயோகிப்பார்:

(அ) கடந்த காலங்களில் இருந்து, LKAS 8 "*கணக்கீட்டு கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளின் மாற்றங்கள் மற்றும் வழுக்கள்*" நியமத்தை பிரயோகித்து முன்னிலைப் படுத்திய ஒவ்வொரு முந்தைய அறிக்கை காலப்பகுதிக்கும், அல்லது

(ஆ)பந்திகள் இ7–இ11 க்கு அமைய, ஆரம்பப் பிரயோகத் திகதியில் ஏற்பிசைவு செய்யப்பட்ட நியமத்தை, முதன்முதலில் பிரயோகிப்பதற்கான கடந்த காலங்களில் இருந்தான திரண்ட விளைவு.

இ6. ஒரு குத்தகை பெறுனர், பந்தி இ5 ல் விவரிக்கப்பட்டுள்ளவாறு, அவர் குத்தகை பெறுனராக உள்ள அனைத்து குத்தகைகளுக்கும் சீராகப் பிரயோகிப்பார்.

இ7. ஒரு குத்தகை பெறுனர் பந்தி இ5(ஆ) க்கு அமைய இந்நியமத்தை பிரயோகிக்கத் தெரிவு செய்வாராயின், அக்குத்தகை பெறுனர் ஒப்பீட்டு தகவல்களை மீளறிக்கையிடமாட்டார். பதிலாக, அக்குத்தகை பெறுனர், முதன்முதலில் இந்நியமத்தை பிரயோகிப்பதற்கான திரண்ட விளைவை ஆரம்பத் திரண்ட வருமான மீதியின் (அல்லது உரிமையாண்மையின் ஏனைய பொருத்தமான கூறுக்கு) ஆரம்பப் பிரயோகத் திகதியில் ஒரு சீராக்கமாக ஏற்பிசைவு செய்வார்.

**முன்னர் தொழிற்பாட்டுக் குத்தகையாக வகைப்படுத்தப்பட்ட குத்தகைகள்**

இ8. ஒரு குத்தகை பெறுனர் பந்தி இ5(ஆ) க்கு அமைய இந்நியமத்தை பிரயோகிப்பாராயின், அவர்:

(அ) LKAS 17 இனை பிரயோகித்து முன்னர் தொழிற்பாட்டுக் குத்தகையாக வகைப்படுத்தப்பட்ட குத்தகைகளுக்காக, ஆரம்பப் பிரயோகத் திகதியில் ஒரு குத்தகை பரிப்பாக ஏற்பிசைவு செய்வார். குத்தகை பெறுனர் எஞ்சிய குத்தகைக் கொடுப்பனவுகளை குத்தகை பெறுனரின் ஆரம்பப் பிரயோகத் திகதியிலான அதிகரிக்கும் கடன் விகிதத்தை பயன்படுத்தி, கழிவளிக்கப்பட்ட நிகழ்கால பெறுமதியில் குறிப்பிட்ட குத்தகை பரிப்பை அளவிடுவார்.

(ஆ)LKAS 17 இனை பிரயோகித்து முன்னர் தொழிற்பாட்டுக் குத்தகையாக வகைப்படுத்திய குத்தகைகளுக்கு, ஆரம்பப் பிரயோகத் திகதியில், சொத்தினை பயன்படுத்துவதற்கான உரிமையாக ஏற்பிசைவு செய்வார். குத்தகை பெறுனர் சொத்தினை பயன்படுத்துவதற்கான உரிமையை பின்வருவனவற்றில் மதிப்பிடுவதற்கு ஒவ்வொரு குத்தகை என்னும் அடிப்படையில் தெரிவு செய்வார்.

(i) தொடக்கத் திகதியில் இருந்து நியமம் பிரயோகிக்கப்பட்டிருப்பின், அதன் முன்கொண்டு செல்லப்படும் மீதி, ஆனால் குத்தகை பெறுனரின் ஆரம்பப் பிரயோகத் திகதியிலான அதிகரிக்கும் கடன் விகிதத்தை பயன்படுத்தி, கழிவளிக்கப்பட்டது. அல்லது

(ii) ஆரம்பப் பிரயோகத் திகதிக்கு முன்னர், நிதி நிலைமைக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்ட குத்தகையுடன் தொடர்புடைய ஏதாவது அட்டுறு அல்லது முற்கொடுப்பனவு குத்தகைக் கொடுப்பனவுகளால் சீராக்கப்பட்ட குத்தகை பரிப்பிற்கு சமமான ஒரு தொகை,

(இ) குத்தகை பெறுனர் பந்தி இ10(ஆ) இல் உள்ளவாறு சூழ்நிலைக்கு ஏற்ற வகைக்கான நடைமுறையை பிரயோகிப்பாராகின், LKAS 36 "*சொத்துக்களின் சேத இழப்பு*: நியமத்தினை ஆரம்பப் பிரயோகத் திகதியில் சொத்தினை பயன்படுத்துவதற்கான உரிமைக்கு பிரயோகிப்பார்,

இ9. பந்தி 8 இன் தேவைப்பாடுகளை கருத்தில் கொள்ளாது, LKAS 17 இனை பிரயோகித்து முன்னர் தொழிற்பாட்டுக் குத்தகையாக வகைப்படுத்தப்பட்ட குத்தகைகளுக்காக, ஒரு குத்தகை பெறுனர்:

(அ) பந்தி 6 இனை பிரயோகித்து கணக்கீடு மேற்கொள்ளப்படும் குறைந்த பெறுமதியுடைய அடிப்படை சொத்துக்களின் (பந்திகள் ஆ3-ஆ8 இல் விவரிக்கப்பட்டுள்ளவாறு) குத்தகைகளுக்கான மாற்றத்திற்கு எந்த சீராக்கமும் வேண்டப்பட மாட்டார். குத்தகை பெறுனர் அத்தகைய குத்தகைகளுக்கு இந்நியமத்தை பிரயோகித்து ஆரம்பப் பிரயோகத் திகதியில் கணக்கீட்டை மேற்கொள்வார்.

(ஆ)LKAS 40 "*முதலீட்டு ஆதனம்*" நியமத்தின், நியாய விலை மாதிரியை பிரயோகித்து முன்னர் முதலீட்டு ஆதனமாக கணக்கீடு செய்யப்பட்ட குத்தகைகளுக்கான மாற்றத்திற்கு எந்த சீராக்கமும் வேண்டப்பட மாட்டார். குத்தகை பெறுனர், LKAS 40 இனைப் பிரயோகிப்பதால் தோன்றும் சொத்தினை பயன்படுத்துவதற்கான உரிமை மற்றும் குத்தகை பரிப்பு

ஆகியவற்றிற்கு இந்நியமத்தை பிரயோகித்து ஆரம்பப் பிரயோகத் திகதியில் கணக்கீட்டை மேற்கொள்வார்.

(இ) LKAS 17 இனை பிரயோகித்து முன்னர் தொழிற்பாட்டுக் குத்தகையாக கணக்கீடு செய்யப்பட்ட குத்தகைகளுக்காக, ஆரம்பப் பிரயோகத் திகதியில் நியாய விலையில் சொத்தினை பயன்படுத்துவதற்கான உரிமையை மதிப்பிடுவதுடன், அது LKAS 40 இன், சீர்மதிப்பு மாதிரியை பிரயோகித்து ஆரம்பப் பிரயோகத் திகதியில் முதலீட்டு ஆதனமாக கணக்கீடு செய்யப்படும்.

குத்தகை பெறுனர், LKAS 40 இனைப் பிரயோகிப்பதால் தோன்றும் சொத்தினை பயன்படுத்துவதற்கான உரிமை மற்றும் குத்தகை பரிப்பு ஆகியவற்றிற்கு இந்நியமத்தை பிரயோகித்து ஆரம்பப் பிரயோகத் திகதியில் கணக்கீட்டை மேற்கொள்வார்.

இ10. LKAS 17 இனை பிரயோகித்து முன்னர் தொழிற்பாட்டுக் குத்தகையாக கணக்கீடு செய்யப்பட்ட குத்தகைகளுக்கு பந்தி இ5(ஆ) க்கு அமைய இந்நியமத்தை கடந்த காலங்களுக்கும் சேர்த்து பிரயோகிக்கும்போது, குத்தகை பெறுனர் பின்வரும் சூழ்நிலைக்கேற்ற வகைக்கான நடைமுறைகளில் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்டதை பயன்படுத்தலாம், ஒரு குத்தகை பெறுனர் சூழ்நிலைக்கேற்றவகைக்கான நடைமுறையை ஒவ்வொரு குத்தகைக்கும் பிரயோகிக்க அனுமதிக்கப்படுகிறார்.

(அ) ஒரு குத்தகை பெறுனர் தனித்த கழிவு விகிதத்தை ஒரு நியாயமான வகையில் ஒரே தன்மையுடைய (அதாவது ஒத்த பொருளாதார சூழலில் ஒத்த அடிப்படை சொத்து வகைகளுக்கான ஒத்த எஞ்சிய குத்தகை காலத்தை உடைய குத்தகைகள்) குத்தகைத் தொகுதிக்குப் பிரயோகிக்கலாம்.

(ஆ)ஆரம்பப் பிரயோகத் திகதிக்கு முன்னர், LKAS 37 "*ஏற்பாடுகள், உறுமுரிமைப் பரிப்புக்கள் மற்றும் உறுமுரிமைச் சொத்துக்கள்*" நியமத்தைப் பிரயோகிப்பது குத்தகைகளுக்கு கனமானதா என்னும் மதிப்பீட்டினை ஒரு குத்தகை பெறுனர் சேத இழப்பு மதிப்பாய்வுரை செயற்படுத்துவதற்கு ஒரு மாற்றீடாக சார்ந்து இருக்கலாம். ஒரு குத்தகை பெறுனர் இந்த சூழ்நிலைக்கேற்ற வகைக்கான நடைமுறையை தெரிவு செய்வாராயின், அக்குத்தகை பெறுனர் ஆரம்பப் பிரயோகத் திகதிக்கு முன்னர் நிதிநிலைமை கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்ட கனத்த குத்தகைகளுக்கான ஒதுக்க தொகையால் சொத்தினை பயன்படுத்துவதற்கான உரிமையை ஆரம்பப் பிரயோகத் திகதியில் சீராக்குவார்.

(இ) ஒரு குத்தகை பெறுனர் 12 மாதங்களுக்குள் முடிவடையும் குத்தகைகளுக்கு, பந்தி இ-8 இன் தேவைப்பாடுகளை ஆரம்பப் பிரயோகத் திகதியில் பிரயோகிப்பதில்லை என்னும் தெரிவை மேற்கொள்ளலாம். இதன்போது, குத்தகை பெறுனர்:

(i) பந்தி 6 இல் வரையறுக்கப்பட்டுள்ளவாறு, குறுங்காலக் குத்தகைகளுக்கான அதே வழியில் குறிப்பிட்ட குத்தகைகளுக்கு கணக்கீட்டை மேற்கொள்வதுடன், மற்றும்

(ii) குறிப்பிட்ட குத்தகைகளுக்கான செலவினத்தை ஆரம்பப் பிரயோகத் திகதியை உள்ளடக்கிய வருடாந்த அறிக்கையிடல் காலப்பகுதியில் குறுங்காலக் குத்தகைக்கான செலவின வெளிப்படுத்தலுக்குள் உள்ளடக்குவார்.

(ஈ) ஒரு குத்தகை பெறுனர், ஆரம்பப் பிரயோகத் திகதியில் சொத்தினைப் பயன்படுத்துவதற்கான உரிமை மதிப்பீட்டில் இருந்து ஆரம்ப நேரடிக் கிரயத்தைத் தவிர்க்கலாம்.

(c) ஒப்பந்தம் குத்தகையை முறிப்பதற்கான அல்லது நீடிப்பதற்கான தெரிவை கொண்டிருப்பின், குத்தகை காலத்தை தீர்மானித்தல் போன்ற விடயங்களில் குத்தகை பெறுனர் மறைகாட்சியை பயன்படுத்தலாம்.

**முன்னர் நிதிக்குத்தகையாக வகைப்படுத்தப்பட்ட குத்தகைகள்**

இ11. LKAS 17 இனைப் பிரயோகித்து முன்னர் நிதிக்குத்தகையாக வகைப்படுத்தப்பட் குத்தகைகளுக்காக ஒரு குத்தகை பெறுனர் பந்தி இ5(ஆ) க்கு அமைய இந்நியமத்தை பிரயோகிக்கத் தெரிவு செய்வாராயின், ஆரம்பப் பிரயோகத் திகதியில் சொத்தினை

பயன்படுத்துவதற்கான உரிமையின் முன்கொண்டு செல்லப்படும் மீதி மற்றும் குத்தகைப் பரிப்பு என்பன LKAS 17 இனை பிரயோகித்து மதிப்பிடப்பட்ட திகதிக்கு முன்னர் குத்தகை சொத்து மற்றும் குத்தகை பரிப்பு ஆகியவற்றின் முன்கொண்டு செல்லப்படும் மீதியாகும். அக்குத்தகைகளுக்காக, ஒரு குத்தகை பெறுனர் சொத்தினை பயன்படுத்துவதற்கான உரிமை மற்றும் குத்தகைப் பரிப்பு ஆகியவற்றுக்கு ஆரம்பப் பிரயோகத் திகதியில் இந்நியமத்தை பிரயோகித்து கணக்கீட்டை மேற்கொள்வார்.

**வெளிப்படுத்தல்**

இ12. ஒரு குத்தகை பெறுனர் பந்தி இ5(ஆ) க்கு அமைய இந்நியமத்தை பிரயோகிக்க தெரிவு செய்வாராயின், குத்தகை பெறுனர், LKAS 8 ன் பந்தி 28(ஊ) இல் விபரிக்கப்பட்டுள்ள விபரங்கள் தவிர, LKAS 8 இன் பந்தி 28க்கு அமைய ஆரம்பப் பிரயோகம் பற்றிய தகவல்களை வெளிக்காட்டுவார். LKAS 8 இன் பந்தி 28(ஊ) இல் விபரிக்கப்பட்ட விபரங்களுக்கு பதிலாக, குத்தகை பெறுனர் பின்வருவனவற்றை வெளிக்காட்டுவார்:

(அ) ஆரம்பப் பிரயோகத் திகதியில், நிதிநிலைமைக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்ட குத்தகைப் பரிப்புக்கு பிரயோகித்த குத்தகை பெறுனரின் அதிகரித்த நிறையேற்றிய சராசரி கடன் விகிதம், மற்றும்

(ஆ)பின்வருவனவற்றிற்கிடையிலான வித்தியாசத்திற்கான விளக்கம்

**(i)** வருடாந்த நிதிக் கூற்றுக் காலப்பகுதியின் முடிவில் ஆரம்பப் பிரயோகத் திகதிக்கு முன்னர் LKAS 17 இனை பிரயோகித்து வெளிக்காட்டப்பட்ட தொழிற்பாட்டுக் குத்தகையின் பரிப்புக்கள், அதிகரித்த கடன் விகிதத்தை பயன்படுத்தி, ஆரம்பப் பிரயோகத் திகதியில் பந்தி இ8(அ) ல் வரையறுக்கப்பட்டுள்ளவாறு கழிவளிக்கப்பட்டன என்பது, மற்றும்

**(ii)** ஆரம்பப் பிரயோகத் திகதியில் நிதிநிலைமைக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்ட குத்தகைப் பரிப்புக்கள்.

இ13. ஒரு குத்தகை பெறுனர் பந்தி இ10(ஆ) இல் வரையறுக்கப்பட்டுள்ளவாறு ஒன்று அல்லது மேற்பட்ட சூழ்நிலைக்கேற்ற வகைக்கான நடைமுறையை பிரயோகிப்பாராயின். அந்த விடயத்தை வெளிக்காட்டுவார்.

## குத்தகை வழங்குனர்

இ14. பந்தி இ15 இல் விவரிக்கப்பட்டவை தவிர, ஒரு குத்தகை வழங்குனர், அவர் குத்தகை வழங்குனராக ஈடுபட்டுள்ள குத்தகைகளுக்கான மாற்றத்திற்கு எந்த சீராக்கமும் மேற்கொள்ளமாட்டார் என்பதுடன், அத்தகைய குத்தகைகளுக்கு ஆரம்பப் பிரயோகத் திகதியில் இருந்து இந்நியமத்தை பிரயோகித்து கணக்கீட்டை மேற்கொள்வார்.

இ15. ஒரு இடைநிலை குத்தகை வழங்குனர்:

(அ) ஒவ்வொரு உபகுத்தகையும் இந்நியமத்தை பிரயோகித்து தொழிற்பாட்டுக் குத்தகையாக அல்லது நிதிக்குத்தகையாக வகைப்படுத்தப்பட வேண்டுமா என்பதை தீர்மானிக்க, LKAS 17 இனை பிரயோகித்து தொழிற்பாட்டுக் குத்தகையாக வகைப்படுத்தப்பட்டு ஆரம்பப் பிரயோகத் திகதியில் தொடரும் உபகுத்தகைகளை, மீள்மதிப்பிடுவார். இடைநிலை குத்தகை வழங்குனர் ஆரம்பப் பிரயோகத் திகதியில் முதன்மை குத்தகை மற்றும் உபகுத்தகைகளின் எஞ்சிய ஒப்பந்த காலப்பகுதி மற்றும் நிபந்தனைகள் அடிப்படையில் மதிப்பாய்வை செயற்படுத்துவார்.

(ஆ)LKAS 17 இனைப் பிரயோகித்து தொழிற்பாட்டுக் குத்தகையாக வகைப்படுத்தப்பட்ட உபகுத்தகைகளுக்காக (ஆனால் இந்நியமத்தை பிரகாரம் நிதிகுத்தகை), புதிய நிதிக்குத்தகையில் ஈடுபட்டதாக ஆரம்பப் பிரயோகத் திகதியில் உபகுத்தகைகளுக்காக கணக்கீட்டை மேற்கொள்வார்.

## ஆரம்பப் பிரயோகத் திகதிக்கு முன்னரான விற்பனையும் மீள்குத்தகையும் பரிவர்த்தனை

இ16. பரிமாற்றத்திற்குட்பட்ட அடிப்படை சொத்தினை ஒரு விற்பனையாக கணக்கீட்டை மேற்கொள்ள, LKAS 15 இன் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்கிறதா என தீர்மானிப்பதற்கு, ஒரு உரிமம் ஆரம்பப் பிரயோகத் திகதிக்கு முன்னர் மேற்கொண்ட விற்பனை மற்றும் மீள்குத்தகையிள் பரிவர்த்தனைகளை மீள்மதிப்பிடாது.

இ17. விற்பனை மற்றும் மீள்குத்தகையின் பரிவர்த்தனையானது ஒரு விற்பனையாகவும் LKAS 17 இனை பிரயோகித்து நிதிக்குத்தகையாகவும் கணக்கீட்டை மேற்கொண்டிருப்பின், விற்பனை குத்தகை பெறுனர்:

(அ) ஆரம்பப் பிரயோகத் திகதியில் உள்ள வேறு ஏதேனும் நிதி குத்தகையாக கணக்கீடு மேற்கொள்ளும் அதே வழியில் மீள்குத்தகையை கணக்கீடு செய்வதுடன்,

(ஆ)விற்பனை இலாபத்தை குத்தகை காலத்திற்கு தெடார்ச்சியாகப் பெறுமதியழிவு செய்வார்.

இ18. விற்பனையும் மீள்குத்தகையும் பரிவர்த்தனையானது ஒரு விற்பனையாகவும் LKAS 17 இனை பிரயோகித்து தொழிற்பாட்டுக் குத்தகையாகவும் கணக்கீட்டை மேற்கொண்டிருப்பின், விற்பனை குத்தகை பெறுனர்

(அ) ஆரம்பப் பிரயோகத் திகதியில் உள்ள வேறு ஏதேனும் தொழிற்பாட்டுக் குத்தகையாக கணக்கீடு மேற்கொள்ளும் அதே வழியில் மீள்குத்தகையை கணக்கீடு செய்வார், மற்றும்

(ஆ)ஆரம்பப் பிரயோகத் திகதிக்கு முன்னர் நிதிநிலைமைக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்ட ஏதேனும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இலாபம் மற்றும் நட்டத்திற்காக சொத்தினை பயன்படுத்துவதற்கான உரிமையின் மீள்குத்தகையை சீராக்குவார்.

## வணிக இணைப்புக்கள் தொடர்பாக முன்னரே ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகைகள்

இ19. ஒரு குத்தகை பெறுனர் SLFRS 3 "*வணிக இணைப்புக்கள்*" இனைப் பிரயோகித்து, வணிக இணைப்பின் ஒரு பகுதியாக பெற்ற தொழிற்பாட்டுக் குத்தகையின் சாதகமான அல்லது சாதகமற்ற நிலைமைகளுடன் தொடர்புடைய ஒரு சொத்து அல்லது ஒரு பரிப்பை முன்னரே ஏற்பிசைத்திருப்பின், அக்குத்தகை பெறுனர் அந்த சொத்தை அல்லது பரிப்பை விலக்களிப்பார். மேலும் ஆரம்பப் பிரயோகத் திகதியில் ஒத்திருக்கின்ற தொகையால் சொத்தினை பயன்படுத்துவதற்கான உரிமையின் முன்கொண்டு செல்லப்படும் மீதியை சீராக்குவார்.

## SLFRS 9 – குறிப்புரைகள்

இ20. ஒரு உரிமம் இந்நியமத்தை பிரயோகிக்கும் அதே வேளை, SLFRS 9 "*நிதிச்சாதனங்கள்*" இனைப் பிரயோகிக்கவில்லையாயின், இந்நியமத்தில் உள்ள SLFRS 9 க்கான குறிப்பானது LKAS 39 "*நிதிச்சாதனங்கள்- ஏற்பிசைவும் அளவீடும்*" நியமத்துக்கான குறிப்பாக வாசிக்கப்படும்.

### இரத்துச்செய்யப்படும் ஏனைய நியமங்கள்

இ21. இந்நியமம் பின்வரும் நியமங்கள் மற்றும் வியாக்கியானங்களை பிரதியீடு செய்கின்றது:

(அ) LKAS 17 *குத்தகைகள்,*

(ஆ) IFRIC 4 *ஏற்பாடு ஒன்று குத்தகையை கொண்டுள்ளதா என தீர்மானித்தல்,*

(இ) SIC - 15 *தொழிற்பாட்டுக் குத்தகைகள் – ஊக்கக் கொடுப்பனவுகள்,* மற்றும்

(ஈ) SIC - 27 *குத்தகையொன்றின் சட்ட வடிவில் ஈடுபடும் பரிவர்த்தனைகளின் பொருளை மதிப்பிடுதல்.*

## பின்னிணைப்பு (ஈ)

## பிற நியமங்களுக்கான திருத்தங்கள்

*இந்தப் பின்னிணைப்பானது இந்நியமத்தினை வழங்கியதன் விளைவாக ஏனைய நியமங்களில் ஏற்படத்தக்க மாற்றங்களைக் குறிப்பிடுகிறது. உரிமம் ஒன்று இத் திருத்தங்களை 1 சனவரி 2019 அன்று அல்லது அதற்குப் பின் ஆரம்பிக்கும் ஆண்டுக் காலப்பகுதிகளுக்குப் பிரயோகிக்கும். உரிமம் ஓர் முந்தைய காலத்திற்கு இந்த நியமத்தைப் பிரயோகிப்பின், அது முந்தைய காலத்திற்கு இத் திருத்தங்களையும் பிரயோகிக்கும்.*

*உரிமம் ஒன்று SLFRS 15* வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானங்கள் நியமத்தைப் பிரயோகிப்பதற்கு *முன்பாக SLFRS 16 நியமத்தினைப் பயன்படுத்த அனுமதிக்கப்படவில்லை (பந்தி இ 1 ஐப் பார்க்கவும்). இதன் விளைவாக, 1 சனவரி 2016 முதல் நடைமுறைக்கு வந்த நியமங்களுக்கு, SLFRS 15 நியமத்தினால் திருத்தப்பட்டபடி, 1 சனவரி 2016 முதல் நடைமுறைக்கு வந்த அந்த நியமங்களின் உரையின் அடிப்படையில் இந்த பின்னிணைப்பின் திருத்தங்கள் முன்னிலைப்படுத்தப்படுகின்றன. இந்த பின்னிணைப்பில் உள்ள அந்த நியமங்களின் உரைகள் 1 சனவரி 2016 இல் நடைமுறைக்கு வராத வேறு எந்த திருத்தங்களையும் உள்ளடக்கவில்லை.*

*1 சனவரி 2016 இல் நடைமுறைக்கு வந்திராத நியமங்களுக்கு, SLFRS 15 நியமத்தினால் திருத்தப்பட்டபடி, 1 சனவரி 2016 முதல் நடைமுறைக்கு வந்த நியமங்களின் உரையின் அடிப்படையில் (இந்த பிரசுரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன) இந்த பின்னிணைப்பின் திருத்தங்கள் முன்னிலைப்படுத்தப் படுகின்றன. இந்த பின்னிணைப்பில் உள்ள அந்த நியமங்களின் உரைகள் 1 சனவரி 2016 இல் நடைமுறைக்கு வராத வேறு எந்த திருத்தங்களையும் உள்ளடக்கவில்லை.*

*திருத்தப்பட்ட பந்திகளில் நீக்கப்பட்ட உரைகள் வெட்டப்பட்டுக் காண்பிக்கப்பட்டு, புதிய உரை அடிக்கோடிட்டுக் காட்டப்படுகிறது.*

### SLFRS 1: *இலங்கைக் கணக்கீட்டு நியமகங்களின் முதற் தடவையான கடைப்பிடிப்பு*

| |
|---|
| பந்தி 30 திருத்தப்பட்டுள்ளதுடன், பந்தி 39AB சேர்க்கப்பட்டுள்ளது. |

**சீர்மதிப்பினை கருதப்படும் கிரயமாக உபயோகித்தல்**

30 உரிமமொன்று அதன் ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படியொன்றின், முதலீட்டு ஆதனமொன்றின் அல்லது அருவச் சொத்தொன்றின் சுருதப்பட்ட கிரயமாகச் சீர்மதிப்பினை அதன் ஆரம்ப SLFRS நிதிக்கூற்றுக்களில் உபயோகிக்குமேயாகில் (பந்திகள் D5 மற்றும் D7 இனைப் பார்க்கவும்), உரிமத்தின் முதலாவது SLFRS நிதிக்கூற்றுக்கள் ஆரம்ப SLFRS நிதிநிலைமைக் கூற்றிலுள்ள ஒவ்வொரு வரிசை உருப்படிக்கும் கீழ்வருவனவற்றினை வெளிக்காட்டும்:

(அ) …

**விளைவுக்கு வரும் திகதி**

…

39AB ஏப்ரல் 2016 இல் வழங்கப்பட்ட SLFRS 16 குத்தகைகள் நியமம் திருத்தப்பட்ட பந்திகள் 30, C4, D1, D7, D8B மற்றும் D9, நீக்கப்பட்ட பந்திகள் D9A மற்றும் d9B-D9E. உரிமமொன்று இத் திருத்தங்களை SLFRS 16 நியமத்தினைப் பிரயோகிக்கும் போது பிரயோகிக்கும்.

| |
|---|
| பந்தி C4 திருத்தப்பட்டுள்ளது. |

**வணிக இணைப்புக்களுக்கான விலக்களிப்புக்கள்**

C4 முதற் தடவையாக கடைப்பிடிக்கும் உரிமமொன்று கடந்த கால வணிக இணைப்பு ஒன்றிற்காக SLFRS 3 நியமத்தினை முற்கூட்டிய காலப்பகுதியிலிருந்து அமுலுக்கு வரும்வகையில் பிரயோகிக்காவிடில், இது அந்த வணிக இணைப்புக்கு கீழே தரப்பட்டுள்ள தொடர் விளைவுகளை எற்படுத்தும்.

(அ) …

(ஊ) கடந்த கால வணிக இணைப்பொன்றின் போது கொள்வனவு செய்யப்பட்ட சொத்தொன்று அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட பரிப்பொன்று முன்னைய GAAPக்கு அமைவாக ஏற்பிசைவு செய்யப்பட்டிராவிடில், அது ஆரம்ப SLFRS நிதிநிலைக் கூற்றில் கருதப்பட்ட கிரயமாக பூஜ்யத்தினை கொண்டிராது. அதற்குப் பதிலாக சுவீகரிக்கும் உரிமம் அதன் ஒன்றித்த நிதிநிலைக் கூற்றில், சுவீகரிக்கப்படுனரின் நிதிநிலைக் கூற்றில் SLFRS கள் தேவைப்படுத்தும் அதே அடிப்படையில் ஏற்பிசைவு செய்து அளவிடும். இதனை விளக்குவதற்கு சுவீகரிக்கும் உரிமமொன்று கடந்த கால வணிக இணைப்பொன்றின் போது கொள்வனவு செய்யப்பட்ட நிதிக்குத்தகை ஒன்றினை முன்னைய GAAP க்கு அமைவாக மூலதனப்படுத்தாது இருந்திருப்பின், சுவீகரிக்கப்படும் உரிமம் SLFRS நிதிநிலைக் கூற்றில் அதனை மூலதனப்படுத்த வேண்டுமென LKAS 17 **<u>SLFRS 16</u>** *குத்தகைகள்* இல் கேட்டுக்கொள்ளப்பட்டவாறு, அது அதன் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் அந்த குத்தகைகளை மூலதனப்படுத்தும். அதேபோல, சுவீகரிக்கும் உரிமமொன்று முன்னைய GAAP க்கு அமைவாக உறுமுரிமைப் பரிப்பொன்றினை ஏற்பிசைவு செய்யாதிருந்து, அந்தப் பரிப்பு உரிமம் SLFRS களுக்கு நிலைமாறிய திகதி வரையில் இருக்கும் பட்சத்தில், சுவீகரிக்கப்படும் உரிமத்தின் நிதிக் கூற்றுக்களில் அதன் ஏற்பிசைவினை LKAS 37 *ஏற்பாடுகள், உறுமுரிமைப் பரிப்புக்கள் மற்றும் உறுமுரிமைச் சொத்துக்கள்* என்னும் நியமம் தடைசெய்திருந்தாலன்றி, சுவீகரிக்கும் உரிமம் அந்தத் திகதியில் அந்த உறுமுரிமைப் பரிப்பினை ஏற்பிசைவு செய்யும். மாறாக, சொத்தொன்று அல்லது பரிப்பொன்று முன்னைய GAAP க்கு அமைவாக நன்மதிப்பினில் உள்ளடக்கப்பட்டிருந்து ஆனால் SLFRS 3 இன் கீழ் வேறாக ஏற்பிசைவு செய்யப்பட்டிருப்பின், சுவீகரிக்கப்படும் உரிமத்தின் நிதிக் கூற்றுக்களில் அதன் ஏற்பிசைவினை SLFRS கள் தேவைப்படுத்தி இருந்தாலேயன்றி, அந்த சொத்து அல்லது பரிப்பு நன்மதிப்பிலேயே தொடர்ந்தும் இருக்கும்.

(எ) …

| |
|---|
| பின்னிணைப்பு D இல் பந்திகள் D1, D7, D8B மற்றும் D9 ஆகியன திருத்தப்பட்டுள்ளன. பந்தி D9A நீக்கப்பட்டுள்ளது. பந்திகள் D9B-D9E சேர்க்கப்பட்டுள்ளன. |

## ஏனைய SLFRS நியமங்களிலிருந்தான விலக்களிப்புக்கள்

…

D1 உரிமமொன்று கீழே தரப்பட்டுள்ள விதிவிலக்குகளில் ஒன்றினையோ அல்லது அதிகமானவற்றினையோ உபயோகத்திற்காக தேர்வு செய்யக்கூடும்:

(அ) …

(ஈ) குத்தகைகள் (பந்திகள் D9 மற்றும் D9A, D9B-D9E)

…

கருதப்பட்ட கிரயங்கள்

…

D7 D5 மற்றும் D6 பந்திகளில் கூறப்பட்டுள்ள தேர்வுகள் கீழ்வருவனவற்றிற்கும் கிடைக்கப்பெறும்:

*(அ)* உரிமமானது LKAS 40 *முதலீட்டு ஆதனங்கள்* நியமத்திலுள்ள கிரய மாதிரியினை உபயோகிப்பதற்கு தேர்வு செய்திருந்தால், அத்துடன்

*அஅ)* **பயன்படுத்துவதற்கான உரிமை கொள்ளப்பட்ட சொத்துக்கள் (SLFRS 16 குத்தகைகள்), மற்றும்**

ஆ) …

…

D8B சில உரிமங்கள் வீத விதிமுறைகள்கு உட்டபட்டுப் பயன்படுத்தப்படும் அல்லது முன்னர் பயன்படுத்தப்பட்ட ஆதனம், பொறி, உபகரணங்கள் அல்லது <u>பயன்படுத்துவதற்கான உரிமை கொண்ட சொத்துக்கள்</u> அல்லது அருவச் சொத்துக்கள் முதலியவற்றைக் கொண்டிருக்கலாம். அத்தகைய உருப்படிகளின் கொண்டு செல்லும் பெறுமதியானது முன்னைய GAAP களுக்கு அமைவாகத் தீர்மானிக்கப்பட்ட, ஆனால் SLFRS களின் படி மூலதனமாக்கலுக்குத் தகைமை பெறாத தொகைகளை உள்ளடக்கியிருக்கலாம். நிலைமை இவ்வாறு காணப்படின், முதன்முறை பின்பற்றுனர் முன்னயை GAAP களின்படியாகத் தீர்மானிக்கப்பட்ட கொண்டுசெல்லல் பெறுமதியை SLFRS க்கு நிலைமாறும் திகதியிலான கருதப்பட்ட கிரயமாகப் பயன்படுத்தத் தெரிவு செய்யலாம். உரிமம் ஏதேனும் உருப்படி ஒன்றுக்கு இந்த விலக்களிப்பைப் பிரயோகித்தால், அதனை அனைத்து உருபப்டிகளுக்கும் பிரயோகிக்க வேண்டிய தேவையில்லை. SLFRS களுக்கு நிலைமாறும் திகதியில், விலக்களிப்புப் பயன்படுத்தப்பட்ட அனைத்து உருப்படிகளுக்கும் உரிமம் LKAS 36 நியமத்துக்கு இணக்கமான சேத இழப்பை சோதனை செய்யும். இந்தப் பந்தியின் நோக்கங்களுக்காக, பொருட்கள் சேவைகளுக்காக வாடிக்கையாளர்கள் மீது சுமத்தப்படத்தக்க விலைகளை உருவாக்குவதற்கான சட்டகத்தினால் நிர்வகிக்கப்பட்டால், தொழிற்பாடுகள் வீத விதிமுறைகள்கு உட்பட்டவையெனக் கருதப்படுவதுடன், அச் சட்டகமானது வீத விதிமுறையாளரின் மேற்பார்வை அல்லது அங்கீகாரத்துக்கு உட்பட்டதாகும் (SLFRS 14 *விதிமுறை பிற்போடல் கணக்குகள்* நியமத்தில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறு)

**குத்தகைகள்**

D9 <u>முதன்முறை பின்பற்றுனர் IFRIC களுக்கு நிலைமாறும் திகதியில் காணப்படும் ஒப்பந்தம் ஒன்று குத்தகை ஒன்றினைக் கொண்டுள்ளதா என்பதனை SLFRS 16 நியமத்தின் பந்திகள் 9-11உ இனைப் பிரயோகிப்பதன் மூலம் அத் திகதியில் நிலவிய உண்மைகள் மற்றும் புறநிலைகளின் அடிப்படையில், தீர்மானிக்கும்</u>.

D9A (நீக்கப்பட்டுள்ளது)

<u>D9B குத்தகைதாரராக இருக்கும் முதன்முறை பின்பற்றுனர் ஒருவர் குத்தகைப் பரிப்புக்கள் மற்றும் சொத்துக்களின் பயன்பாட்டு உரிமைகளை ஏற்பிசைவு செய்யும்போது, அது அதன் அனைத்து குத்தகைகளுக்கும் பின்வரும் அணுகுமுறைகளைப் பிரயோகிக்கும் (பந்தி D9D இல் விவரிக்கப்பட்டுள்ள நடைமுறை விடயங்களுக்கு உட்பட்ட வகையில்):</u>

<u>(அ) SLFRSக்கு மாற்றும் திகதியில் குத்தகைப் பரிப்பை அளவிடும். இந்த அணுகுமுறையைப் பின்பற்றும் ஒரு குத்தகைதாரர் மீதமுள்ள குத்தகைக்</u>

கொடுப்பனவுகளின் தற்போதைய மதிப்பினை SLFRSகளுக்கு நிலைமாறும் திகதியில் குத்தகைதாரரின் அதிகரிக்கும் கடன் விகிதத்தைப் பயன்படுத்திக் கழிவீடு செய்த பெறுமதியில் (பந்தி D9E ஐப் பார்க்கவும்) குத்தகைப் பரிப்பை (பந்தி D9E ஐப் பார்க்கவும்) ஏற்பிசைவு செய்யும்.

(ஆ) SLFRSக்கு நிலைமாறும் திகதியில் சொத்தின் பயன்பாட்டு உரிமையை அளவிடும். குத்தகைதாரர் உரிமம் பயன்பாட்டு சொத்தை அளவிட ஒவ்வொரு குத்தகையாக பின்வருவனவற்றில் ஏதேனும் ஓர் முறையில் தேர்வு செய்யும்:

(i) குத்தகை தொடங்கப்பட்ட நாளிலிருந்து SLFRS 16 நியமம் பயன்படுத்தப்பட்டதைப் போல அதன் கொண்டு செல்லும் பெறுமதி, ஆனால் அது ளுடுகுசுளு க்கான நிலைமாற்றத் திகதியில் குத்தகைதாரரின் அதிகரிக்கும் கடன் விகிதத்தைப் பயன்படுத்தி கழிவீடு செய்யப்பட்ட தொகை (பந்தி னு9நு இனைப் பார்க்கவும்), அல்லது

(ii) SLFRS களுக்கான நிலைமாற்றத் திகதிக்கு உடனடி முன்பாக நிதிநிலைமைக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்ட குத்தகை தொடர்பான முன்செலுத்தப்பட்ட அல்லது நிலுவையிலுள்ள குத்தகைக் கொடுப்பனவுகளுக்காக சீராக்கப்பட்ட குத்தகைப் பரிப்புக்கு சமமான தொகை.

(இ) SLFRS-களுக்கு நிலைமாறும் திகதியில் LKAS36 நியமத்தினை சொத்துக்களின் பயன்பாட்டு உரிமைக்காகப் பயன்படுத்தும்.

D9C பந்தி D9B இல் உள்ள தேவைகளைக் கருத்தில் எடுக்காது, குத்தகைதாரரான முதன்முறை பின்பற்றுனர் LKAS 40 இலுள்ள முதலீட்டுச் சொத்தின் பொருள்வரையறையைப் பூர்த்தி செய்யும் குத்தகைகளுக்கான SLFRS களுக்கு நிலைமாறும் திகதியில் பயன்பாட்டு உரிமையினை சீர்மதிப்பில் அளவிட்டு, LKAS 40 இல் உள்ள சீர்மதிப்பு மாதிரியைப் பயன்படுத்தி SLFRS களுக்கு மாற்றப்பட்ட திகதியிலிருந்து அவற்றை அளவிடும்.

D9D குத்தகைதாரரான முதன்முறை பின்பற்றுனர், SLFRS களுக்கு நிலைமாறும் திகதியில் ஒவ்வொரு குத்தகையாகப் பிரயோகிக்கும் வகையில் பின்வருவனவற்றில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றைச் செய்யலாம்:

(அ) நியாயமானளவில் ஒத்த குணாதிசயங்களைக் கொண்ட குத்தகைகளின் ஒரு தொகுதிக்கு ஒரு கழிவீட்டு வீதத்தைப் பிரயோகித்தல் (உதாரணமாக, ஒத்த பொருளாதார சூழலில் ஒத்த அடிப்படை சொத்தின் சமமான வகுப்பிற்கான மீதமுள்ள குத்தகை காலம்).

(ஆ) SLFRS களுக்கு நிலைமாறிய திகதியிலிருந்து 12 மாதங்களுக்குள் முடிவடையும் குத்தகைக் காலத்தினைக் கொண்ட குத்தகைகளுக்கு D9B பந்தியில் உள்ள தேவைப்பாடுகளைப் பயன்படுத்தாது விடத் தேர்ந்தெடுக்கலாம் (பந்தி D9E ஐப் பார்க்கவும்). அதற்கு பதிலாக, அவற்றுக்கு SLFRS 16 இன் பந்தி 6 க்கு இணக்கமான முறையில் குறுங்காலக் குத்தகைகள் போலவே உரிமம் கணக்கிடும் (அவற்றின் வெளிப்படுத்தல் தகவல்கள் உள்ளடங்கலாக).

(இ) அடிப்படை சொத்து குறைந்த மதிப்புள்ள குத்தகைகளுக்கு D9B பந்தியில் உள்ள தேவைப்பாடுகளைப் பயன்படுத்தாது விடத் தேர்ந்தெடுத்தல் (SLFRS 16 இன் B3-B8 பந்திகளில் விவரிக்கப்பட்டுள்ளபடி). அதற்கு பதிலாக, அவற்றுக்கு SLFRS 16 இன் பந்தி 6 க்கு இணக்கமான முறையில் உரிமம் கணக்கிடும் (அவற்றின் வெளிப்படுத்தல் தகவல்கள் உள்ளடங்கலாக).

(ஈ) SLFRS களுக்கு நிலைமாறிய திகதி முதல் ஆரம்ப நேரக் கிரயங்களை பயன்பாட்டு உரிமைச் சொத்தின் அளவீட்டிலிருந்து விலக்குதல் (பந்தி D9E ஐப் பார்க்கவும்).

(உ) ஒப்பந்தத்தை நீட்டிக்க அல்லது நிறுத்த விருப்பத் தெரிவுகள் இருந்தால் குத்தகை காலத்தை தீர்மானிப்பது போன்ற பின்னிடைத் தகவல்களைப் பயன்படுத்துதல்.

D9E குத்தகைக் கொடுப்பனவுகள், குத்தகைதாரர், குத்தகைதாரரின் அதிகரிக்கும் கடன்படுகை விகிதம், குத்தகையின் தொடக்கத் திகதி, ஆரம்ப நேரக் கிரயங்கள் மற்றும் குத்தகை காலம் ஆகியன SLFRS 16 இல் பொருள்வரையறுக்கப்பட்ட சொற்களாக இருப்பதுடன், இந்த நியமத்தில் அதே அர்த்தத்துடன் பயன்படுத்தப்படுகின்றன.

## SLFRS 3 வணிக இணைப்புக்கள்

பந்திகள் 14 மற்றும் 17 ஆகியன திருத்தப்பட்டுள்ளதுடன், பந்தி 28A மற்றும் 28B மற்றும் அவற்றுடன் தொடர்புபட்ட தலைப்புக்கள், மற்றும் பந்தி 64M ஆகியன சேர்க்கப்பட்டுள்ளன.

*ஏற்பிசைவு நிபந்தனைகள்*

14 பந்திகள் ~~B28 – B40~~ B31-B 40 ஆனது அருவச் சொத்துக்களினதும் தொழிற்படு குத்தகைகளினதும் ஏற்பிசைவிற்கான வழிகாட்டலை வழங்குகிறது. பந்திகள் 22 – 28 ஆனது இனங்காணத்தக்க சொத்துக்களினதும் பரிப்புக்களினதும் வகைகளை குறிப்பிடுகிறது. இது நிபந்தனைகள் மற்றும் ஏற்பிசைவு கொள்கை என்பவற்றிற்கு வரையறுக்கப்பட்ட விதிவிலக்குகளை வழங்குகின்ற இவ் SLFRS இற்கான உருப்படிகளை உள்ளடக்குகிறது.

*வணிக இணைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரிப்புக்கள் மற்றும் கையகப்படுத்தப்பட்ட இனங்காணத்தக்க சொத்துக்கள் என்பவற்றை பெயரிடல் அல்லது வகைப்படுத்தல்*

...

17 இவ் SLFRS நியமமானது பந்தி 15 இல் கொள்கைக்கான இரு விதிவிலக்குகளை வழங்குகிறது;

(அ) குத்தகை ஒப்பந்தத்தின் வகைப்படுத்தலானது ~~LKAS 17~~ SLFRS 16 குத்தகைகள் நியமத்திற்கமைய ஒரு தொழிற்படு குத்தகையாகவோ அல்லது ஒரு நிதி குத்தகையாகவோ காணப்படுகிறது;

(ஆ) ...

**கையகப்படுத்துனரே குத்தகை பெறுனராகும் குத்தகைகள்**

28A கையகப்படுத்துனரே குத்தகை பெறுனராகும் குத்தகைகளில் SLFRS 16 க்கு இணங்க அடையாளம் காணப்பட்ட குத்தகைகளுக்கான பயன்பாட்டு உரிமைகள் மற்றும் குத்தகைப் பரிப்புக்களை கையகப்படுத்துபவர் ஏற்பிசைவு செய்வார். கையகப்படுத்துபவர் பின்வருவனவற்றுக்காக சொத்துக்களின் பயன்பாட்டு உரிமை மற்றும் குத்தகைப் பரிப்புக்களை ஏற்பிசைவு செய்ய வேண்டியதில்லை:

(அ) SLFRS களுக்கு நிலைமாறிய திகதியிலிருந்து 12 மாதங்களுக்குள் முடிவடையும் குத்தகைக் காலத்தினைக் கொண்ட குத்தகைகளுக்கு (SLFRS 16 இல் பொருள் வரையறை செய்யப்பட்டவாறு), அல்லது

(ஆ) அடிப்படை சொத்து குறைந்த மதிப்பைக் கொண்ட குத்தகைகள் (SLFRS 16 இன் B3-B8 பந்திகளில் விவரிக்கப்பட்டுள்ளபடி).

28B கையகப்படுத்தப்படும் திகதியில் கையகப்படுத்தப்பட்ட குத்தகையானது ஒரு புதிய குத்தகை போலவே கையகப்படுத்தபவர் குத்தகைப் பரிப்பை மீதமுள்ள குத்தகைக் கொடுப்பனவுகளின் தற்போதைய மதிப்பில் அளவிடுவார் (SLFRS 16 இல் வரையறுக்கப்பட்டுள்ளபடி). கையகப்படுத்துபவர் குத்தகைப் பரிப்புக்கு சமமான தொகையிலே சந்தை விதிமுறைகளுடன் ஒப்பிடும்போது குத்தகையின் சாதகமான அல்லது சாதகமற்ற விதிமுறைகளை பிரதிபலிக்கும் வகையில் சீராக்கப்பட்டு பயன்பாட்டு உரிமையை அளவிடுவார்.

## விளைவுக்கு வரும் திகதி

…

64M ஏப்ரல் 2016 இல் வழங்கப்பட்ட SLFRS 16 குத்தகைகள் நியமம் திருத்தப்பட்ட பந்திகள் 14, 17, B28-B30 மற்றும் பந்தி 28A மற்றும் 28B மற்றும் அவற்றுடன் தொடர்புபட்ட தலைப்புக்கள். உரிமமொன்று இத் திருத்தங்களை SLFRS 16 நியமத்தினைப் பிரயோகிக்கும் போது பிரயோகிக்கும்.

பின்னிணைப்பு B இல் பந்திகள் B28-B30 மற்றும் அவற்றுடன் தொடர்புபட்ட தலைப்புக்கள் நீக்கப்பட்டுள்ளதுடன், பந்திகள் B32 மற்றும் B42 ஆகியன திருத்தப்பட்டுள்ளன.

B28 (நீக்கப்பட்டுள்ளது)

B29 (நீக்கப்பட்டுள்ளது)

B30 (நீக்கப்பட்டுள்ளது)

**அருவச்சொத்துக்கள்**

B32 சொத்தானது சுவீகரிக்கப்பட்டதிலிருந்து அல்லது ஏனைய உரிமைகள் மற்றும் கடப்பாடுகளிலிருந்து வேறுபடுத்தக்கூடியதாக அல்லது மாற்றக்கூடியதாக காணப்படாதாயின், ஒப்பந்த ரீதியான சட்ட தகுதிவிதியினை அடைந்துள்ள அருவச்சொத்தொன்று இனங்காணப்படத்தக்கதாக காணப்படுகிறது. உதாரணமாக:

(அ) (நீக்கப்பட்டுள்ளது)

(ஆ) …

### கையகப்படுத்தப்படுனர் குத்தகை தருனராயுள்ள தொழிற்படு குத்தகைக்கு உட்பட்ட சொத்துக்கள்

B42 கையகப்படுத்தப்படுனரே குத்தகைக்கு விடுபவராக காணப்படுகின்ற தொழிற்படு குத்தகைக்குட்பட்ட பதிப்புரிமை அல்லது கட்டடம் போன்ற சொத்தின் கையகப்படுத்தல் திகதியிலான சீர்மதிப்பு பெறுமதியினை அளவிடுவதில், கையகப்படுத்துபவர் குத்தகையின் நிபந்தனைகளை கவனத்தில் கொள்ள வேண்டும். நிபந்தனைகளுடன் ஒப்பிடுகின்ற போது தொழிற்படு குத்தகையின் நிபந்தனைகளானது சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ காணப்படுமாயின், கையகப்படுத்துபவர் சொத்தினை அல்லது பரிப்பினை தனியாக ஏற்பிசைவு செய்வதில்லை.

## SLFRS 4 காப்புறுதி ஒப்பந்தங்கள்

SLFRS 15 நியமத்தினால் திருத்தப்பட்டவாறு, பந்தி 4 திருத்தப்பட்டுள்ளதுடன், பந்தி 41I சேர்க்கப்பட்டுள்ளது.

**நோக்கெல்லை**

**4** உரிமம் ஒன்று இந்த SLFRS இனைப் பின்வருவனவற்றுக்காகப் பிரயோகிக்க மாட்டாது:

(அ) …

(இ) நிதியல்லா விடயத்தின் (உதாரணமாக சில கட்டணங்கள், இறைகள், நிகழ்தகு மாறும் குத்தகைக் கொடுப்பனவுகள், மேலும் அதையொத்த விடயங்கள்) அத்துடன், நிதிக்குத்தகையில் ஒன்றிணைந்த உத்தரவாதமளிக்கப்பட்ட குத்தகை எடுப்பவரின் ஒடிவுப் பெறுமதிக்கும் எதிர்காலப் பயன்பாட்டின், பாவிக்க உரிமையுள்ள நிகழக் கூடிய ஒப்பந்த உரிமைகளும் ஒப்பந்தக் கடப்பாடுகளும் (LKAS 17 SLFRS 16, SLFRS 15 *வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்*, LKAS 38 அருவச்சொத்து முதலியவற்றைப் பார்க்க)

**விளைவுக்கு வரும் திகதி**

41I ஏப்ரல் 2016 இல் வழங்கப்பட்ட SLFRS 16 குத்தகைகள் நியமம் திருத்தப்பட்ட பந்தி 4. உரிமமொன்று இத் திருத்தங்களை SLFRS 16 நியமத்தினைப் பிரயோகிக்கும் போது பிரயோகிக்கும்.

## SLFRS 7 நிதிச்சாதனங்கள் - வெளிக்காட்டல்கள்:

பந்தி 29 திருத்தப்பட்டுள்ளதுடன், பந்தி 44CC சேர்க்கப்பட்டுள்ளது.

**சீர்மதிப்பு**

…

29 கீழ்வரும் சந்தர்ப்பங்களில் சீர்மதிப்புக்களின் வெளிக்காட்டல் தேவைப்படமாட்டாது :

(அ) …

(ஆ) செயற்திறனான சந்தையொன்றில் சந்தைவிலை குறிக்கப்படாத உரிமையாண்மைச் சாதனங்களில் முதலீடு அல்லது அவ்வாறான உரிமையாண்மைச் சாதனங்களுடன் இணைந்த, சீர் மதிப்பு நம்பகரமாக அளவிடப்பட முடியாததன் காரணமாக LKAS 39 க்கு அமைவாக கிரயத்தில் அளவிடப்படும் அல்லது

(இ) சுயமாக தீர்மானிக்கும் பங்கு பற்றுதல் குணவியல்பினைக் கொண்டிருக்கம் (SLFRS 4 இல் விபரிக்கப்பட்டவாறு) ஒப்பந்தம் ஒன்று தொடர்பில், அந்த குணவியல்பின் சீர்மதிப்பு நம்பகரமாக அளவிடப்பட முடியாதபோது, அல்லது

(ஈ) குத்தகைப் பரிப்புக்களுக்காக

**விளைவுக்கு வரும் திகதி மற்றும் நிலைமாறுகை**

44CC ஏப்ரல் 2016 இல் வழங்கப்பட்ட SLFRS 16 குத்தகைகள் நியமம் திருத்தப்பட்ட பந்திகள் 29 மற்றும் பந்தி B11D. உரிமமொன்று இத் திருத்தங்களை SLFRS 16 நியமத்தினைப் பிரயோகிக்கும் போது பிரயோகிக்கும்.

பின்னிணைப்பு B பந்தி B11D திருத்தப்பட்டுள்ளது.

**அளவுரீதியான திரவத்தன்மை இடர் வெளிப்படுத்தல்கள் (பந்திகள் 34(அ) மற்றும் 39(அ) மற்றும் (ஆ))**

…

B11D (பந்திகள் 34(அ) மற்றும் 39(அ) மற்றும் (ஆ)) இன் தேவைப்பாடுகளுக்காக முதிர்வுத்தன்மை பகுப்பாய்வில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஒப்பந்தத் தொகைகள் கழிவிடப்படாத ஒப்பந்த காசுப் பாய்ச்சல்கள் ஆகும், உதாரணமாக:

(அ) மொத்த நிதிக் குத்தகைப் பரிப்புக்கள் (நிதிக் கட்டணங்களைக் கழிப்பதற்கு முன்பான)

(ஆ) …

## SLFRS 9 *நிதிச்சாதனங்கள்*

பந்தி 2.1 மற்றும் பந்தி 5.5.15 ஆகியன திருத்தப்பட்டுள்ளதுடன், பந்தி 7.1.5 சேர்க்கப்பட்டுள்ளது.

**அத்தியாயம் 2 நோக்கெல்லை**

**2.1 இந்த நியமமானது பின்வருவன தவிர்ந்த அனைத்த சாதனங்களுக்கும் அனைத்து உரிமங்களாலும் பிரயோகிக்கப்படும்:**

**(அ) …**

**(ஆ) ~~LKAS 17~~ SLFRS 16 நியமம் பிரயோகிக்கப்படும் அனைத்துக் குத்தகைகளின் கீழான உரிமைகள் மற்றும் கடப்பாடுகள். எனினும்:**

**(i) குத்தகை வழங்குனர் ஒருவரால் ஏற்பிசைவு செய்யப்பட்ட நிதிக் குத்தகை வருமதிகள் (அதாவது, நிதிக் குத்தகைகளிலான நிகர முதலீடு) மற்றும் தொழிற்படு குத்தகை வருமதிகள் இந் நியமத்தின் ஏற்பிசைவு நீக்கல் மற்றும் சேத இழப்புத் தேவைப்பாடுகளுக்கு உட்பட்டவையாகும்,**

**(ii) குத்தகை பெறுனரால் ஏற்பிசைவு செய்யப்பட்ட குத்தகை பரிப்புக்கள் இந் நியமத்தின் பந்தி 3.3.1 இலுள்ள ஏற்பிசைவு நீக்கல் தேவைப்பாடுகளுக்கு உட்பட்டவையாகும், மற்றும்**

**(iii) குத்தகைகளின் ஒரு பகுதியானவமைந்த உய்த்தறி சாதனங்கள் இந் நியமத்தின் ஒருங்கிணைந்த உய்த்தறி சாதனங்களின் தேவைப்பாடுகளுக்கு உட்பட்டவையாகும்.**

**(இ) …**

## வியாபார வருமதிகள், ஒப்பந்த சொத்துகள் மற்றும் குத்தகை வருமதிகள் ஆகியவற்றுக்கான இலகுவாக்கிய அணுகுமுறை

**5.5.15 பந்திகள் 5.5.3 மற்றும் 5.5.5 ஆகியனவற்றைக் கருத்தில் கொள்ளாது, உரிமம் எப்பொதும் இழப்பு ஒதுக்கத்தை பின்வருவனவற்றின் ஆயுள் எதிர்பார்த்த கடன் இழப்புக்களுக்கு சமமான தொகையில் ஏற்பிசைவு செய்யும்:**

**(அ) …**

**(ஆ) <u>SLFRS 16</u> நியமத்தின் நோக்கெல்லைக்கு உட்பட்ட ஊடுசெயல்களிலிருந்த எழும் குத்தகை வருமதிகள், உரிமம் இழப்பு ஒதுக்கங்களை எதிர்பார்த்த ஆயுள் கடன் இழப்புக்களுக்கு சமமான தொகையில் அளவிடுவது என கணக்கீட்டுக் கொள்கையைத் தீர்மானித்திருப்பின். இந்தக் கணக்கீட்டுக் கொள்கையானது அனைத்து குத்தகை வருமதிகளுக்கும் பிரயோகிக்கப்படும், ஆனால் நிதி மற்றும் தொழிற்படு குத்தகை வருமதிகளுக்குத் தனித்தனியாக பிரயோகிக்கப்படலாம்.**

**(இ)** …

..

## விளைவுக்கு வரும் திகதி

...

7.1.5 <u>ஏப்ரல் 2016 இல் வழங்கப்பட்ட SLFRS 16 *குத்தகைகள்* நியமம். திருத்தப்பட்ட பந்திகள் 2.1, 5.5.15, B4.3.8, B5.5.34 மற்றும் B5.5.46. உரிமம் ஒன்று SLFRS 16 நியமத்தைப் பிரயோகிக்கும் போது இத் திருத்தங்களைப் பிரயோகிக்கும்.</u>

| பின்னிணைப்பு B இல் பந்தி B4.3.8, B5.5.34 மற்றும் பந்தி B5.5.46 5.5.15 ஆகியன திருத்தப்பட்டுள்ளன. |
|---|

## ஒருங்கிணைந்த உய்த்தறி சாதனங்கள் (பிரிவு 4.3)

...

B4.3.8 ஒருங்கிணைந்த உய்த்தறி சாதனம் ஒன்றின் இடர்கள் மற்றும் பொருளாதார குணவியல்புகள் பின்வரும் உதாரணங்களிலுள்ள பிரதான ஒப்பந்தங்களின் இடர்கள் மற்றும் பொருளாதார குணவியல்புகளை ஒத்தவையாக உள்ளன. இந்த உதாரணங்களில், உரிமம் ஒருங்கிணைந்த உய்த்தறி சாதனங்களுக்கு பிரதான ஒப்பந்தத்திலிருந்த தனித்த விதமாகக் கணக்கு வைப்பதில்லை.

(அ) …

(ஊ) பிரதான குத்தகை ஒப்பந்தமொன்றிலுள்ள ஒருங்கிணைந்த உய்த்தறி சாதனமானது பிரதான ஒப்பந்தத்துடன் நெருக்கமான தொடர்பைக் கொண்டிருக்கும் தருணங்கள் (i) குத்தகைக் கட்டணங்கள் நுகர்வொன் விலைச் சுட்டியுடன் தொடர்புபட்டடிருத்தல் போன்ற பணவீக்கம் தொடர்பான சுட்டி (குத்தகையானது இணைப்பற்றது எனவும் சுட்டியானது உரிமத்தின் சொந்த பொருளாதார சூழலை சார்ந்தது எனவும் கொண்டு), (ii) தொடர்புபட்ட விற்பனையின் அடிப்படையில் அமைந்த நிகழ்தகு வாடகைகள் அல்லது (iii) <u>மாறும் வட்டி</u> வீதங்களின் அடிப்படையில் அமைந்த நிகழ்தகு வாடகைகள் மாறும் குத்தகைக் கொடுப்பனவுகள்.

(எ) …

## எதிர்பார்த்த கடன் இழப்புக்கள்

…

B5.5.34 குத்தகை வருமதி ஒன்றுக்காக கடன் இழப்புக்களை மதிப்பிடும் போது, எதிர்பார்த்த கடன் இழப்புக்களை தீர்மானிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் காசுப் பாய்ச்சலானது <u>SLFRS 16</u> *குத்தகைகள்* நியமத்துக்கு அமைவாக குத்தகை வருமதிகளை தீர்மானிக்கும் போது

பயன்படுத்தப்பட்ட காசுப் பாயச்சல்களுக்கு இணக்கமானதாக இருத்தல் வேண்டும்.

...

**பணத்தின் காலப் பெறுமதி**

...

B5.5.46 குத்தகை வருமதிகள் மீதான எதிர்பார்த்த கடன் இழப்புக்கள் SLFRS 16 *குத்தகைகள்* நியமத்துக்கு அமைவாக குத்தகை வருமதிகளை தீர்மானிக்கும் போது பயன்படுத்தப்பட்ட அதே கழிவீட்டு வீதங்களைப் பயன்படுத்திக் கழிவீடு செய்யப்படல் வேண்டும்.

...

## SLFRS 13 *சீர்மதிப்பு அளவீடு*

| பந்தி 6 திருத்தப்பட்டுள்ளது. |
|---|

**நோக்கெல்லை**

6 இந்த SLFRS நியமத்தின் அளவீடு மற்றும் வெளிப்படுத்தல் தேவைப்பாடுகள் பின்வருவனவற்றுக்குப் பிரயோகிக்கத்தகாது:

(அ) …

(ஆ) நியமத்தின் நோக்கெல்லைக்கு உட்டபட்ட SLFRS 16 *குத்தகைகள்* நியமத்துக்கு இணக்கமாகக் கணக்கு வைக்கப்பட்ட குத்தகை ஊடுசெயல்கள், மற்றும்

(இ) …

| பின்னிணைப்பு C இல் பந்தி C6 சேர்க்கப்பட்டுள்ளது. |
|---|

**விளைவுக்கு வரும் திகதி மற்றும் நிலைமாறுகை**

C6 ஏப்ரல் 2016 இல் வழங்கப்பட்ட SLFRS 16 *குத்தகைகள்* நியமம். திருத்தப்பட்ட பந்தி 6. உரிமம் ஒன்று SLFRS 16 நியமத்தைப் பிரயோகிக்கும் போது இத் திருத்தங்களைப் பிரயோகிக்கும்.

## SLFRS 15 *வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்*

| பந்தி 5 மற்றும் 97 ஆகியன திருத்தப்பட்டுள்ளன. |
|---|

## நோக்கெல்லை

1 உரிமம் ஒன்று பின்வருவன தவிர்ந்த, வாடிக்கையாளர்களுடனான அனைத்து ஒப்பந்தங்களுக்கும் இந் நியமத்தினைப் பயன்படுத்த முடியும்:

(அ) SLFRS 16 *குத்தகைக*ள் நியமத்தின் நோக்கெல்லைக்கு உட்பட்ட குத்தகை ஒப்பந்தங்கள்

(ஆ) …

## ஒப்பந்தம் ஒன்றை நிறைவு செய்வதற்கான கிரயங்கள்

…

97 ஒப்பந்தம் ஒன்றுடன் (அல்லது ஒரு பிரத்தியேக எதிர்பார்க்கப்பட்ட ஒப்பந்தத்துடன்) நேரடியாகத் தொடர்புபடும் கிரயங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

(அ) நேர்க்கூலி (உதாரணமாக, வாடிக்கையாளருக்கு உறுதி வழங்கப்பட்ட சேவையை மேற்கொள்ளும் ஊழியர்களுக்கான சம்பளங்கள் மற்றும் கூலிகள்)

(ஆ) …

(இ) ஒப்பந்தம் அல்லது ஒப்பந்த நடவடிக்கைகளுடன் நேரடியாகத் தொடர்புபடும் கிரயங்களின் ஒதுக்கீடுகள் (உதாரணமாக, ஒப்பந்த முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வைக் கிரயம், ஒப்பந்தத்தினை நிறைவு செய்வதற்காக பயன்படுத்தப்படும் பொறிகள் மற்றும் உபகரணங்களின் காப்புறுதி மற்றும் பெறுமானத் தேய்வு மற்றும் பயன்பாட்டு உரிமைச் சொத்துக்கள்)

(ஈ) …

பின்னிணைப்பு B இல் பந்தி B66 மற்றும் B70 ஆகியன திருத்தப்பட்டுள்ளன.

## முன்னோக்கிய அல்லது அழைப்பு விருப்பத் தேர்வு

B66 உரிமம் சொத்தினை மீள்கொள்வனவு செய்வதற்கான கடப்பாடு அல்லது உரிமையைக் கொண்டுள்ள போது (ஒரு முன்னோக்கிய அல்லது ஒரு அழைப்பு விருப்பத் தேர்வு), வாடிக்கையாளர் சொத்தின் கட்டுப்பாட்டைப் பெற்றுக் கொள்வதில்லை. ஏனெனில், வாடிக்கையாளர் சொத்தினைப் பௌதீக வைத்திருப்பினும், சொத்தின் பயன்பாட்டை நெறிப்படுத்தி, மீதமுள்ள நன்மைகளின் கணிசமான அளவு முழுவதையும் பயன்படுத்துவதற்கான திறனைக் குறைவாகக் கொண்டிருப்பார். இதன் விளைவாக, உரிமம் அந்த ஒப்பந்தத்தை பின்வரும் முறைகளில் ஏதேனும் ஒன்றில் கணக்கு வைக்கும்:

(அ) ஒப்பந்தமானது விற்று மீள் குத்தகையான இல்லாதவிடத்து, சொத்தின் அசல் விற்பனை விலையிலும் குறைவான விலையில் உரிமம் சொத்தை மீள்கொள்வனவு செய்ய முடியும் எனில், SLFRS 16 *குத்தகைகள்* நியமத்துக்கு இணக்கமாக. ஒப்பந்தமானது விற்று மீள் குத்தகையின் ஓர் பகுதியாகக் காணப்படுமாயின், உரிமம் சொத்தினைத் தொடர்ந்தும் ஏற்பிசைவு செய்வதுடன், வாடிக்கையாளரிடமிருந்து பெறப்பட்ட ஏதேனும் கைமானங்களுக்காக ஓர் நிதிப் பரிப்பை ஏற்பிசைவு செய்தல் வேண்டும். உரிமம் இந் நிதிப் பரிப்புக்கு SLFRS 9 நியமத்துக்கு அமைவாகக் கணக்கு வைக்கும், அல்லது

(ஆ) ...

## வைப்புத் தேர்வு விருப்பம்

B70 ஒப்பந்தமானது விற்று மீள் குத்தகையான இல்லாதவிடத்து, வாடிக்கையாளரின் கோரிக்கையில், சொத்தின் அசல் விற்பனையை விட குறைவான ஒரு விலையில் சொத்துக்களை மீள்கொள்வனவு செய்வதற்கான ஒரு கடப்பாட்டை உரிமம் கொண்டிருந்தால் (வைப்புத் தேர்வு விருப்பம்) உரிமம் ஒப்பந்த ஆரம்பத்தில் வாடிக்கையாளர் அந்த உரிமையை செயற்படுத்துவதற்கான கணிசமான பொருளாதார ஊக்கப்பாடு காணப்படுகின்றதா என்பதை கருத்தில் கொள்ளுதல் வேண்டும். வாடிக்கையாளர் அந்த உரிமையைப் பயன்படுத்துதலானது, குறிப்பிட்ட சொத்தினை குறித்த காலத்துக்குப் பயன்படுத்துவதற்கான உரிமைக்கான கைமானத்தை வாடிக்கையாளர் விளைதிறனான வகையில் செலுத்துவதில் விளைவுபெறும். ஆகவே, வாடிக்கையாளர் அந்த உரிமையை செயற்படுத்துவதற்கான கணிசமான பொருளாதார ஊக்கப்பாடு காணப்பட்டால், உரிமம் அந்த உடன்படிக்கையை SLFRS 16 நியமத்துக்கு இணக்கமாக குத்தகையாக கணக்கு வைக்கும். ஒப்பந்தமானது விற்று மீள் குத்தகையின் ஓர் பகுதியாகக் காணப்படுமாயின், உரிமம் சொத்தினைத் தொடர்ந்தும் ஏற்பிசைவு செய்வதுடன், வாடிக்கையாளரிடமிருந்து பெறப்பட்ட ஏதேனும் கைமானங்களுக்காக ஓர் நிதிப் பரிப்பை ஏற்பிசைவு செய்தல் வேண்டும். உரிமம் இந் நிதிப் பரிப்புக்கு SLFRS 9 நியமத்துக்கு அமைவாகக் கணக்கு வைக்கும்.

...

| |
|---|
| பின்னிணைப்பு C இல் பந்தி C1A சேர்க்கப்பட்டுள்ளது. |

## விளைவுக்கு வரும் திகதி மற்றும் நிலைமாறுகை

...

C1A ஏப்ரல் 2016 இல் வழங்கப்பட்ட SLFRS 16 *குத்தகைகள்* நியமம் திருத்தப்பட்ட பந்திகள் 5, 97, B66 மற்றும் B70. உரிமம் ஒன்று SLFRS 16 நியமத்தைப் பிரயோகிக்கும் போது இத் திருத்தங்களைப் பிரயோகிக்கும்.

## LKAS 1 நிதிக்கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தல்

| |
|---|
| பந்தி 123 திருத்தப்பட்டுள்ளதுடன், பந்தி 139Q சேர்க்கப்பட்டுள்ளது. |

**கணக்கீட்டுக் கொள்கைகளின் வெளிக்காட்டல்கள்**

123 உரிமத்தின் கணக்கீட்டுக் கொள்கையினைப் பிரயோகிக்கும் செயன்முறையின் போது, மதிப்பீடுகள் சம்பந்தமானவைக்கு மேலதிகமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ள தொகைகளை கணிசமான அளவில் பாதிக்கக் கூடியவை தொடர்பாக முகாமையானது பல்வேறு சுயதீர்ப்புக்களை மேற்கொள்கின்றது. உதாரணமாக: கீழ்வருவனவற்றினை தீர்மானிப்பதில் முகாமை சுயதீர்ப்புக்களை மேற்கொள்ளும்.

(அ) …

(ஆ) நிதிச் சொத்துக்களினதும் குத்தகைச் சொத்துக்களினதும் சொத்துரிமை தொடர்புபட்ட கணிசமான இடர் மற்றும் பயன்பாடுகள், மற்றும் <u>குத்தகை தருனர்களுக்கு, குத்தகைக்கு உட்பட்ட சொத்துக்கள்</u> எப்போது பிற உரிமங்களுக்கு மாற்றப்பட்டது என்பது பற்றி;

(இ) …

**விளைவுக்கு வரும் திகதி மற்றும் நிலைமாறுகை**

…

<u>139Q ஏப்ரல் 2016 இல் வழங்கப்பட்ட SLFRS 16 குத்தகைகள் நியமம் திருத்தப்பட்ட பந்தி 123. உரிமமொன்று இத் திருத்தங்களை SLFRS 16 நியமத்தினைப் பிரயோகிக்கும் போது பிரயோகிக்கும்.</u>

## LKAS 2 *இருப்புக்கள்*

| |
|---|
| பந்தி 12 திருத்தப்பட்டுள்ளதுடன், பந்தி 40G சேர்க்கப்பட்டுள்ளது. |

**நிலைமாற்றுக் கிரயங்கள்**

12 தொக்குகளின் உருமாற்றுக் கிரயங்கள் நேர்கூலி போன்ற உற்பத்தி அலகுகளுடன் நேரடியாகத் தொடர்புபட்ட கிரயங்களை உள்ளடக்கும். அவை மூலப்பொருட்களை முற்றுப்பெற்ற பொருட்களாக மாற்றுவதில் ஏற்படும் நிலையான மற்றும் மாறி உற்பத்தி மேந்தலைகளின் ஒரு முறைமையான ஒதுக்கீட்டினையும் உள்ளடக்கும். நிலையான உற்பத்தி மேந்தலையாவது தேய்மானம், தொழிற்சாலைக் கட்டட மற்றும் உபகரண பராமரிப்பு, தொழிற்சாலை முகாமை மற்றும் நிருவாககிரயங்கள் <u>மற்றும் உற்பத்திச் செயன்முறைகளில் பயன்படுத்தப்படும் பயன்பாட்டு உரிமைச் சொத்துக்கள்</u> போன்ற உற்பத்தி அளவு மாறுகின்ற போதும் ஒப்பீட்டளவில் மாறாது இருக்கும் உற்பத்தியின் நேரில் கிரயங்களாகும். மாறும் உற்பத்தி மேந்தலைகளாவன நேரில் பொருட்கள் மற்றும் நேரில் கூலிகள் போன்ற உற்பத்தி அளவுடன் நேரடியாக அல்லது கிட்டத்தட்ட நேரடியாக மாறுபடும் நேரில் கிரயங்களாகும்.

**விளைவுக்கு வரும் திகதி**

…

40G ஏப்ரல் 2016 இல் வழங்கப்பட்ட SLFRS 16 குத்தகைகள் நியமம் திருத்தப்பட்ட பந்தி 12. உரிமமொன்று இத் திருத்தங்களை SLFRS 16 நியமத்தினைப் பிரயோகிக்கும் போது பிரயோகிக்கும்.

# LKAS 7 *காசுப் பாய்ச்சல் கூற்று*

பந்தி 17 மற்றும் 44 திருத்தப்பட்டுள்ளதுடன், பந்தி 59 சேர்க்கப்பட்டுள்ளது.

### நிதியிடல் நடவடிக்கைகள்

17 நிதியியல் நடவடிக்கையிலிருந்து தோன்றும் காசுப் பாய்ச்சல்களின் பிறம்பான வெளிக்காட்டல்கள் அவசியமானவை ஏனெனில் உரிமத்தின் மூலதன வழங்குனர்களால் எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் மீதான பாத்தியதையினை முன்னுணர்வதற்கு இது உபயோகமானதாகும். நிதியியல் நடவடிக்கைகளிலிருந்து தோன்றும் காசுப் பாய்ச்சல்களுக்கான உதாரணங்கள்:

(அ) …

(உ) குத்தகையுடன் தொடர்பான நிலுவைப் பொறுப்பினை குறைப்பதற்காக குத்தகை கொள்வோனால் மேற்கொள்ளப்படும் காசுக் கொடுப்பனவுகள்

### காசு அல்லாத ஊடுசெயல்கள்

…

44 உரிமமொன்றின் முதலீடு மற்றும் சொத்துக் கட்டமைப்பில் தாக்கத்தினை ஏற்படுத்தினாலும், பல முதலீட்டு மற்றும் நிதியிடல் நடவடிக்கைகள் நடைமுறை காசுப் பாய்ச்சல்களில் ஒரு நேரடி தாக்கத்தினைக் கொண்டிராது. காசுப் பாய்ச்சல் கூற்றிலிருந்து காசு அல்லாத ஊடுசெயல்களை விலக்குதல், நடைமுறை காலப்பகுதியில் இவ்விடயங்கள் காசுப் பாய்ச்சல்களுக்கு உட்படுத்தப்படாததால் காசுப் பாய்ச்சல் கூற்றொன்றின் நோக்கத்துடன் மாறாத் தன்மையில் உள்ளது. காசு அல்லாத ஊடுசெயல்களுக்கு உதாரணங்கள்:

(அ) தொடர்பான பரிப்புக்களை நேரடியாக பொறுப் பேற்று அல்லது குத்தகை ஒன்றின் மூலமாக சொத்துக்களை கைவசப்படுத்தல்.

### விளைவுக்கு வரும் திகதி

…

59 ஏப்ரல் 2016 இல் வழங்கப்பட்ட SLFRS 16 குத்தகைகள் நியமம் திருத்தப்பட்ட பந்தி 17 மற்றும் 44. உரிமமொன்று இத் திருத்தங்களை SLFRS 16 நியமத்தினைப் பிரயோகிக்கும் போது பிரயோகிக்கும்.

# LKAS 12 *வருமான வரிகள்*

SLFRS 9 *நிதிச்சாதனங்களை* பின்பற்றாத உரிமங்களுக்கு, பந்தி 20 திருத்தப்பட்டுள்ளது.

**சீர்மதிப்பில் கொண்டுசெல்லும் சொத்துக்கள்**

20 SLFRS சில சொத்துக்கள் சீர்மதிப்பில் கொண்டு செல்லப்பட அல்லது மீள் மதிப்பிட அனுமதிக்கின்றது. (உதாரணமாக LKAS 16 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள், LKAS 38 அருவச் சொத்துக்கள், LKAS 39 நிதிச் சாதனங்கள் : ஏற்பிசைவும் அளவீடும் அத்துடன் முதலீட்டு ஆதனம் மற்றும் SLFRS 16 *குத்தகைகள்* என்பவற்றைப் பார்க்க). சில நியாயதிக்க எல்லைகளுக்குள் சொத்தொன்றின் சீர்மதிப்புக்கு மீள் மதிப்பிடல் அல்லது வேறு மீள் அமைத்தல் நடைமுறைக் காலத்திற்கான வரிக்குரிய இலாபம் (வரிநட்டம்) த்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். இதன் விளைவாக சொத்தின் வரி அடிப்படையானது செம்மையாக்கப்படுவதுடன் தற்காலிக வேறுபாடுகள் எதுவும் தோன்றாது. வேறு நியாயாதிக்க எல்லைகளில் சொத்தொன்றின் மீள் பெறுமதி அல்லது மீளமைத்தல் அம்மீள் மதிப்பீடு அல்லது மீளமைப்புக் காலப்பகுதிக்குரிய வரிக்குரிய இலாபந்தில் தாக்கத்தினை ஏற்படுத்தாததுடன், அதன் தொடர்ச்சியாக அச் சொத்தின் வரி அடிப்படையானது செம்மையாக்கப்படாதது மட்டுமல்லாது முன்கொண்டு செல்லப்படும். எனினும் பெறுமதியின் எதிர்கால மீள் பெறுகைகள் அந் நிறுவனத்துக்கு வரிக்குரிய பொருளாதார விளைவுகளின் பாய்ச்சலை விளைவிப்பதுடன் வரித்தேவைக்காக கழிக்கப்படும் அத்தொகையானது அப்பொருளாதார விளைவுகளின் தொகைகளிலிருந்து வேறுபடும். மீள்மதிப்பிடப்பட்ட சொத்தொன்றின் முன்கொண்டு செல்லப்படும் தொகைக்கும், அதன் வரி அடிப்படைக்குமிடையேயான வேறுபாடானது தற்காலிக வேறுபாடு என்பதுடன் அது ஒரு பிற்போடப்பட்ட வரிக்கடன்பாட்டை அல்லது சொத்தொன்றினைத் தோற்றுவிக்கின்றது. கீழ்வருமாறு இருப்பின் இது உண்மையானதாகும்:

(அ) …

SLFRS 9 *நிதிச் சாதனங்களைப்* பின்பற்றும் உரிமங்களுக்கு, பந்தி 20 திருத்தப்பட்டுள்ளது.

**சீர்மதிப்பில் கொண்டுசெல்லும் சொத்துக்கள்**

20 SLFRS சில சொத்துக்கள் சீர்மதிப்பில் கொண்டு செல்லப்பட அல்லது மீள் மதிப்பிட அனுமதிக்கின்றது. (உதாரமாக LKAS 16 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள், LKAS 38 அருவச் சொத்துக்கள், LKAS 39 நிதிச் சாதனங்கள்: ஏற்பிசைவும் அளவீடும் அத்துடன் முதலீட்டு ஆதனம், SLFRS 9 *நிதிச் சாதனங்கள்* மற்றும் SLFRS 16 *குத்தகைகள்* என்பவற்றைப் பார்க்க). சில நியாயதிக்க எல்லைகளுக்குள் சொத்தொன்றின் சீர்மதிப்புக்கு மீள் மதிப்பிடல் அல்லது வேறு மீள் அமைத்தல் நடைமுறைக் காலத்திற்கான வரிக்குரிய இலாபம் (வரிநட்டம்) த்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். இதன் விளைவாக சொத்தின் வரி அடிப்படையானது செம்மையாக்கப்படுவதுடன் தற்காலிக வேறுபாடுகள் எதுவும் தோன்றாது. வேறு நியாயாதிக்க எல்லைகளில் சொத்தொன்றின் மீள் பெறுமதி அல்லது மீளமைத்தல் அம்மீள் மதிப்பீடு அல்லது மீளமைப்புக் காலப்பகுதிக்குரிய வரிக்குரிய இலாபந்தில் தாக்கத்தினை ஏற்படுத்தாததுடன், அதன் தொடர்ச்சியாக அச் சொத்தின் வரி அடிப்படையானது செம்மையாக்கப்படாதது மட்டுமல்லாது முன்கொண்டு செல்லப்படும். எனினும் பெறுமதியின் எதிர்கால மீள் பெறுகைகள் அந் நிறுவனத்துக்கு வரிக்குரிய பொருளாதார விளைவுகளின் பாய்ச்சலை விளைவிப்பதுடன் வரித்தேவைக்காக கழிக்கப்படும் அத்தொகையானது அப்பொருளாதார விளைவுகளின் தொகைகளிலிருந்து வேறுபடும். மீள்மதிப்பிடப்பட்ட சொத்தொன்றின் முன்கொண்டு செல்லப்படும் தொகைக்கும், அதன் வரி அடிப்படைக்குமிடையேயான வேறுபாடானது தற்காலிக வேறுபாடு என்பதுடன் அது ஒரு பிற்போடப்பட்ட வரிக்கடன்பாட்டை அல்லது சொத்தொன்றினைத் தோற்றுவிக்கின்றது. கீழ்வருமாறு இருப்பின் இது உண்மையானதாகும்:

(அ) …

பந்தி 98G சேர்க்கப்பட்டுள்ளது.

**விளைவுக்கு வரும் திகதி**

…

98G ஏப்ரல் 2016 இல் வழங்கப்பட்ட SLFRS 16 குத்தகைகள் நியமம் திருத்தப்பட்ட பந்தி 20. உரிமமொன்று இத் திருத்தங்களை SLFRS 16 நியமத்தினைப் பிரயோகிக்கும் போது பிரயோகிக்கும்.

## LKAS – 16 *ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்*

பந்தி 4 மற்றும் 27 ஆகியன நீக்கப்பட்டுள்ளன. அத்துடன் பந்திகள் 5, 10, 44 மற்றும் 68 ஆகியன திருத்தப்பட்டுள்ளதுடன், பந்தி 69 SLFRS 15 நியமத்தினால் திருத்தப்பட்ட வகையில் திருத்தப் பட்டுள்ளதுடன், பந்தி 81L சேர்க்கப்பட்டுள்ளது.

**நோக்கெல்லை**

4 (நீக்கப்பட்டுள்ளது)

5 LKAS 40 *முதலீட்டு சொத்து* என்ற நியமத்தின் பிரகாரம் முதலீட்டு சொத்து ஒன்றிற்கான கிர மாதிரியை உபயோகிக்கும் உரிமம் உரிமை கொள்ளப்பட்டுள்ள முதலீட்டு சாதனத்துக்காகவும் இந்நியமத்தின் கிரய மாதிரியை உபயோகப்படுத்தும்.

**ஏற்பிசைவு**

…

10 ஒரு உரிமம் இந்த ஏற்பிசைவு கருதுகோளிற்கு இணங்க, ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றை செலவு செய்யும் பொழுது ஏற்பட்ட கிரயத்தின் பிரகாரம் மதிப்பீடு செய்யும். இக்கிரயம் ஆரம்பந்தில் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம். உருப்படியை கொள்வதற்கு அல்லது நிர்மாணிப்பதற்கு இறுக்கப்பட்ட தொகையுடன் பின்னர் சேர்க்க பகுதி பதிலீடு செய்வதற்கு, அல்லது பராமரிப்பு செய்வதற்கு இறுக்கப்பட்ட கிரயங்களையும் உள்ளடக்கும். ஆதனம், பொறி, உபகரண உருப்படி ஒன்றின் கிரயமானது அந்த ஆதனம், பொறி உபகரண உருப்படியின் மூலக்கூறு அல்லது சேவை ஒன்றினை நிர்மாணிப்பதற்காக, ஒன்றுசேர்ப்பதற்காக, மாற்றீடு செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்களின் குத்தகை தொடர்பான கிரயங்களை உள்ளடக்கியருக்கக்கூடும்.

**கிரயத்தின் அளவீடு**

27 (நீக்கப்பட்டுள்ளது)

…

**தேய்மானம்**

44 ஒரு உரிமம் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களை ஆரம்பத்தில் ஏற்பிசைவு செய்யும்பொழுது ஒவ்வொரு முக்கிய உருப்படிக்கும் தொகையை ஒதுக்கி ஒவ்வொரு பகுதிக்கும் வெவ்வேறாக தேய்மானம் செய்யும். உதாரணமாக ஒரு ஆகாய விமானத்தின் வானூர்தி சட்டத்தையும் இயந்திரத்தையும் வெவ்வேறாக தேய்மானம் செய்வது பொருத்தமாகலாம். அதேபோல ஒரு உரிமம் ஆதனம், பொறித்தொகுதி மற்றும்

உபகரணங்கள் ஆகியனவில் செயற்பாட்டு குத்தகையின் கீழ் குத்தகை வழங்கியதாக இருப்பின், சந்தை நிலையை ஒப்பிடுகையில் உருப்படியின் கிரயத்தினுள் குத்தகையின் சாதகமான அல்லது பாதகமான விதிமுறைகள் அடங்குமானால் வெவ்வேறாக தேய்மானம் செய்வது பொருத்தமாகும்.

…

**ஏற்பிசைவு நீக்கல்**

…

68 **ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் ஒரு உருப்படி மறுதலிக்கும் பொழுது ஏற்படும் இலாபம் அல்லது நட்டம் அவ் உருப்படியை மறுதலிக்கும் பொழுது இலாபம் அல்லது நட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படும். (<u>SLFRS 16</u> விற்பனையில் அல்லது மீள குத்தகைக்குப் பெறும் நிலையில் வேறு முறையில் தேவைப்படுத்தப் பட்டாலொழிய)- இலாபங்களை வருமானமாக வகைப்படுத்தப்படமாட்டா.**

…

69 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் உருப்படி ஒன்றின் விற்பனை பல வழியில் நிகழலாம். (உதாரணம் விற்பனை மூலம், நிதிக் குத்தகையில் ஈடுபடல் அல்லது அன்பளிப்பு) ஒரு உருப்படியின் விற்பனைத் திகதியை தீர்மானிப்பதிலும் பொருள் விற்பனை மூலம் பெற்ற வருமானத்தை ஏற்பிசைவு செய்வதிலும் ஒரு உரிமம் LKAS-18 வருமானம் என்ற நியமத்தை உபயோகிக்கும். விற்பனை மூலம் கையளித்து மீள குத்தகைக்கு எடுப்பதானால் <u>SLFRS 16</u> பொருந்தும்.

…

**விளைவுக்கு வரும் திகதி**

…

<u>81L ஏப்ரல் 2016 இல் வழங்கப்பட்ட SLFRS 16 குத்தகைகள் நியமம் நீக்கப்பட்ட பந்திகள் 4 மற்றும் 27. திருத்தப்பட்ட பந்திகள் 5, 10, 44 மற்றும் 68-69. உரிமமொன்று இத் திருத்தங்களை SLFRS 16 நியமத்தினைப் பிரயோகிக்கும் போது பிரயோகிக்கும்.</u>

## LKAS 21 ***அந்நிய செலவாணி மாற்று வீதங்களில் மாற்றங்களின் தாக்கங்கள்***

பந்தி 16 திருத்தப்பட்டுள்ளதுடன், பந்தி 60K சேர்க்கப்பட்டுள்ளது.

**நாணய உருப்படிகள்**

16. நாணய உருப்படியொன்றின் அத்தியாவசியமான சிறப்பியல்பானது, நிலையான அல்லது தீர்மானிக்கப்படக்கூடிய நாணய அலகுகளின் எண்ணிக்கையினை பெறுவதற்கான உரிமை (அல்லது விநியோகிப்பதற்கான கடப்பாடு) ஆகும். உதாரணங்கள்: காசாகச் செலுத்தப்பட வேண்டிய ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஊழியர் பயன்கள், <u>குத்தகைப் பரிப்புக்கள்</u>: காசினால் தீர்க்கப்பட வேண்டிய ஏற்பாடுகள் மற்றும் பரிப்பாக ஏற்பிசைவு செய்யப்பட்ட காசுப் பங்கிலாபங்கள் ஆகியவற்றினை உள்ளடக்கும். அதேபோல், உரிமமொன்றின் சொந்த உரிமையாண்மைச் சாதனங்களின் மாறும் எண்ணிக்கையினை பெறுவதற்கான (அல்லது விநியோகிப்பதற்கான) ஒப்பந்தமொன்று அல்லது சீர்மதிப்பு பெறப்படவுள்ள (அல்லது விநியோகிக்கப்படவுள்ள) மாறுபடும் தொகையான சொத்துக்களுக்கு சமமான நிலையான அல்லது தீர்மானிக்கப்படக்கூடிய நாணயத்தின் அலகுகளின் எண்ணிக்கை நாணய

உருப்படியொன்றாகும். மாறாக, நாணயம் சாராத உருப்படியொன்றின் அத்தியாவசியமான சிறப்பியல்பு, நிலையான அல்லது தீர்மானிக்கப்படக்கூடிய நாணய அலகுகளின் எண்ணிக்கையினை பெறுவதற்கான உரிமை (அல்லது விநியோகிப்பதற்கான கடப்பாடு) இல்லாமையாகும். உதாரணங்கள்: பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக முன் செலுத்தப்பட்ட தொகைகள் நன்மதிப்பு; அருவச் சொத்துக்கள்; தொக்குகள்; ஆதனம், பொறி மற்றும் உபகரணம், <u>பயன்பாட்டு உரிமைச் சொத்துக்கள்</u> மற்றும் நாணயம் சாராத சொத்தொன்றின் விநியோகத்தினால் தீர்க்கப்படவேண்டிய ஏற்பாடுகள் ஆகியவற்றினை உள்ளடக்கும்.

### விளைவுக்கு வரும் திகதி மற்றும் நிலைமாறுகை

…

<u>60K ஏப்ரல் 2016 இல் வழங்கப்பட்ட SLFRS 16 குத்தகைகள் நியமம் திருத்தப்பட்ட பந்தி 16. உரிமமொன்று இத் திருத்தங்களை SLFRS 16 நியமத்தினைப் பிரயோகிக்கும் போது பிரயோகிக்கும்.</u>

## LKAS 23 *கடன்படுகைக் கிரயங்கள்*

பந்தி 6 திருத்தப்பட்டுள்ளதுடன், பந்தி 29C சேர்க்கப்பட்டுள்ளது.

### சொற்பொருள் விளக்கம்

…

6 கடன்படு கிரயங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கலாம்:

(அ) …

(ஈ) <u>SLFRS 16</u> குத்தகைகள் நியமத்திற்கு அமைவாக அங்கீகரிக்கப்பட்ட குத்தகைகளின் தொடர்பிலான வட்டி; அத்துடன்

(உ) …

### விளைவுக்கு வரும் திகதி

…

<u>29C ஏப்ரல் 2016 இல் வழங்கப்பட்ட SLFRS 16 குத்தகைகள் நியமம் திருத்தப்பட்ட பந்தி 6. உரிமமொன்று இத் திருத்தங்களை SLFRS 16 நியமத்தினைப் பிரயோகிக்கும் போது பிரயோகிக்கும்.</u>

## LKAS 32 *நிதிச் சாதனங்கள் : முன்னிலைப்படுத்தல்*

பந்தி 97S சேர்க்கப்பட்டுள்ளது.

**விளைவுக்கு வரும் திகதி மற்றும் நிலைமாறுகை**

…

97S ஏப்ரல் 2016 இல் வழங்கப்பட்ட SLFRS 16 குத்தகைகள் நியமம் திருத்தப்பட்ட பந்திகள் AG9 மற்றும் AG10. உரிமமொன்று இத் திருத்தங்களை SLFRS 16 நியமத்தினைப் பிரயோகிக்கும் போது பிரயோகிக்கும்.

## LKAS 37 *ஏற்பாடுகள், நிகழ்தகுபரிப்புக்கள் மற்றும் நிகழ்தகு சொத்துக்கள்*

பந்தி 5 திருத்தப்பட்டுள்ளதுடன், பந்தி 102 சேர்க்கப்பட்டுள்ளது.

**பரப்பெல்லை**

…

5 வேறொரு நியமமானது நிகழ்தகு சொத்து அல்லது நிகழ்தகு பரிப்புகள், ஏற்பாடுகள் என்பவற்றின் குறித்த வகையுடன் ஈடுபடுகின்றபோது, நிறுவனமானது இந்நியமத்திற்குப் பதிலாக அந்நியமத்தினை பிரயோகிக்கின்றது. உதாரணமாக, சில வகையான ஏற்பாடுகளானது பின்வரும் நியமங்களில் குறிப்பிடப்படுகின்றது,

(அ) …

(இ) குத்தகை (SLFRS 16 இன் குத்தகையினைப் பார்க்க) இந் SLFRS 16 இல் சொற்பொருள் வரையறுக்கப்பட்டுள்ள ஆரம்பத் திகதிக்கு முன்னரே பழுவேறியதாகும் எந்தவொரு குத்தகைக்கும் பிரயோகிக்கத்தக்கதாகும். மேலும், இந் நியமம் SLFRS 16 நியமத்தின் பந்தி6 க்கு அமைவாக் கணக்கிடப்படும் குறுங்காலக் குத்தகைகள் மற்றும் அடிப்படைச் சொத்தின் பெறுமதி குறைவாகக் காணப்படும் குத்தகைகளுக்கும் அத்துடன் பழுவேறியதாகும் குத்தகைகளுக்கும் பிரயோகிக்கத் தக்கதாகும்.

(ஈ) …

**விளைவுக்கு வரும் திகதி**

…

102 ஏப்ரல் 2016 இல் வழங்கப்பட்ட SLFRS 16 குத்தகைகள் நியமம் திருத்தப்பட்ட பந்தி 5. உரிமமொன்று இத் திருத்தங்களை SLFRS 16 நியமத்தினைப் பிரயோகிக்கும் போது பிரயோகிக்கும்.

## LKAS 38 *அருவச்சொத்துக்கள்*

பந்தி 3, 6 மற்றும் 113 ஆகியன திருத்தப்பட்டுள்ளதுடன், பந்தி 114 SLFRS 15 நியமத்தினால் திருத்தப்பட்ட வகையில் திருத்தப்பட்டுள்ளதுடன், பந்தி 130L சேர்க்கப்பட்டுள்ளது.

## நோக்கெல்லை

…

3 சிறப்பு வகையொன்றினைச் சார்ந்த அருவச் சொத்தொன்றினைப் பற்றி வேறொரு கணக்கீட்டு நியமம் கையாளுமேயாகில் தாளாண்மை யொன்று இந்த நியமத்திற்குப் பதிலாக அந்த நியமத்தினையே பிரயோகிக்கும். உதாரணமாக: அந்த நியமம் கீழ்வருவனவற்றிற்குப் பிரயோகிக்கப்படமாட்டாது.

(அ) …

(இ) SLFRS 16 *குத்தகைகள்* நியமத்திற்கு அமைவாகக் கணக்கு வைக்கப்படும் அருவச் சொத்தக்களின் குத்தகைகள்.

(ஈ) …

6 படங்கள், ஒளிப்பதிவுக் காட்சிகள், படக்காட்சிகள், கையெழுத்து ஆக்கங்கள், ஆக்கவுரிமைகள் முதலிய விடயங்களுக்கான உரிமப்பத்திர உடன்படிக்கைகளின் கீழ் குத்தகை கருனரால் வைத்திருக்கப்படும் உரிமைகள் இந்த நியமத்தின் பரப்பெல்லையினுள் வருவதுடன், SLFRS 16 நியமத்தின் நோக்கெல்லயைிலிருந்த நீக்கப்படுகின்றன.

## உபயோகத்திலிருந்து விலக்கலும் விற்று அகற்றுதலும்

…

**113 அருவச்சொத்தொன்றின் ஏற்பிசைவு விலக்கல் காரணமாக ஏற்படும் நயங்கள் அல்லது நட்டங்கள் சொத்தின் நிகரவிற்பனைப் பெறுவனவுக்கு ஏதும் இருப்பின் முன்கொண்டுசெல்கைத் தொகைக்கும் இடையிலான வேறுபாடாகக் கணித்தறியப்பட வேண்டும். சொத்து ஏற்பிசைவு விலகலின் போது (விற்பனை அல்லது குத்தகை வழங்கப்படும் போது SLFRS 16 வேறு விதமாகத் தேவைப்படுத்தினாலன்றி) அவை வருமானக்கூற்றில் வருமானமாக அல்லது செலவாக ஏற்பிசைவு செய்யப்படல் வேண்டும். இலாபம் வருவாயாக வகைப்படுத்தப்படாது.**

114 அருவச்சொத்து ஒன்று அகற்றப்பட்டால் பல்வேறு வழிகளில் ஏற்படக்கூடும். (உதாரணமாக: விற்பனை மூலம் நிதிக் குத்தகைக்கு உட்படல் அல்லது அன்பளிப்பு மூலம்) அவ்வகை சொத்தொன்றின் அகற்றப்படல் திகதியை நிர்ணயிப்பதில் தாளாண்மை LKAS 18 *வருமானம்* என்ற நியமத்தின் பிரமாணங்களை பொருட்கள் விற்பனையில் இருந்து வருமானத்தை ஏற்பிசைவு செய்வதற்கும் SLFRS 16 என்ற நியமத்தை விற்பனை செய்து பின் குத்தகை எடுப்பதில் பிரயோகிக்கும்.

## விளைவுக்கு வரும் திகதி மற்றும் நிலைமாறுகை ஏற்பாடுகள்

…

130L ஏப்ரல் 2016 இல் வழங்கப்பட்ட SLFRS 16 குத்தகைகள் நியமம் திருத்தப்பட்ட பந்திகள் 3, 6, 113 மற்றும் 114. உரிமமொன்று இத் திருத்தங்களை SLFRS 16 நியமத்தினைப் பிரயோகிக்கும் போது பிரயோகிக்கும்.

## LKAS 39 *நிதிச்சாதனங்கள் : ஏற்பிசைவும் அளவீடும்*

பந்தி 2 திருத்தப்பட்டுள்ளதுடன், SLFRS 9 *நிதிச் சாதனங்கள்* நியமத்தைப் பின்பற்றாத உரிமங்களுக்காக பந்தி 103V சேர்க்கப்பட்டுள்ளது. SLFRS 9 நியமத்தைப் பின்பற்றாத உரிமத்துக்கு LKAS 39 நிமம் திருத்தப்படவில்லை.

### நோக்கெல்லை

2 **இந்த நியமம் கீழ்வருவன தவிர்ந்த சகல உரிமங்களினாலும் சகல வகையான நிதிச் சாதனங்களுக்கும் பிரயோகிக்கப்படும் :**

**(அ) …**

**(ஆ) <u>SLFRS 16</u> குத்தகைகள் என்னும் நியமம் பிரயோகிக்கப்படும் குத்தகைகளின் கீழ் அமையும் உரிமைகளும் கடப்பாடுகளும். எனினும் :**

**(i) குத்தகைதருனரினால் ஏற்பிசைவு செய்யப்பட்ட வருமதியாகவுள்ள <u>நிதிக்குத்தகைகள் (*அதாவது,* நிதிக் குத்தகைகளிலான நிகர முதலீடு) மற்றும் தொழிற்படு குத்தகை வருமதிகள்</u> இந்த நியமத்தின் ஏற்பிசைவு விலக்கல் மற்றும் சேத இழப்பு ஏற்பாடுகளுக்கு அமைவாக கையாளப்படும். (பந்திகள் 15-37, 58, 59, 63-65 மற்றும் பின்னிணைப்பு "அ" பந்திகள் பிவ36-பிவ52 மற்றும் பிவ84-பிவ 93 இனை பார்க்கவும்)**

**(ii) குத்தகை பெறுனரினால் ஏற்பிசைவு செய்யப்பட்ட குத்தகைப் <u>பரிப்புக்கள்</u>, இந்த நியமத்தின் <u>பந்தி 39 இன்</u> ஏற்பிசைவு விலக்கலுக்கு அமைவாக இருக்கும்.**

**(iii) …**

### விளைவுக்கு வரும் திகதி மற்றும் நிலைமாறுகை

…

103V <u>ஏப்ரல் 2016 இல் வழங்கப்பட்ட SLFRS 16 குத்தகைகள் நியமம் திருத்தப்பட்ட பந்திகள் 2, மற்றும் AG33. உரிமமொன்று இத் திருத்தங்களை SLFRS 16 நியமத்தினைப் பிரயோகிக்கும் போது பிரயோகிக்கும்.</u>

## LKAS 40 *முதலீட்டு ஆதனம்*

LKAS 40 நியமத்துக்கான பரந்துபட்ட அளவிலான திருத்தங்கள் காரணமாக, உத்தேசிக்கப்பட்ட மாற்றங்களுடன் கூடிய இந் நியமத்தின் முழு உரையுமே இப் பின்னிணைப்பின் இறுதிப் பகுதியில் மீள வழங்கப்பட்டுள்ளன.

## LKAS 41 விவசாயம்

பந்தி 2 திருத்தப்பட்டுள்ளதுடன், பந்தி 64 சேர்க்கப்பட்டுள்ளது.

**நோக்கெல்லை**

…

2 இந் நியமத்தைப் பின்வருவனவற்றுக்குப் பிரயோகித்தலாகாது:

(அ) …

(உ) விவசாய நடவடிக்கை தொடர்பான காணி ஒன்றின் குத்தகை மூலம் எழும் சொத்தைப் பயன்படுத்துவதற்கான உரிமை (SLFRS 16 *குத்தகைகள்* நியமத்தைப் பார்க்கவும்)

…

**விளைவுக்கு வரும் திகதி மற்றும் நிலைமாறுகை**

…

103V ஏப்ரல் 2016 இல் வழங்கப்பட்ட SLFRS 16 குத்தகைகள் நியமம் திருத்தப்பட்ட பந்தி 2. உரிமமொன்று இத் திருத்தங்களை SLFRS 16 நியமத்தினைப் பிரயோகிக்கும் போது பிரயோகிக்கும்.

## IFRIC 1 *தற்போதுள்ள பின்வாங்கல், மீளுருவாக்கல் மற்றும் அதனையொத்த பரிப்புக்களின் மாற்றங்கள்*

குறிப்புரைப் பந்தி திருத்தப்பட்டுள்ளது.

**குறிப்புரைகள்**

- SLFRS 16 *குத்தகைகள்*
- LKAS 1 *நிதிக் கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தல்*
- …

பந்தி 2 திருத்தப்பட்டுள்ளதுடன் பந்தி 9B சேர்க்கப்பட்டுள்ளது.

**நோக்கெல்லை**

2 இந்த வியாக்கியானமானது எந்தவொரு பின்வாங்கல், மீளுருவாக்கல் அல்லது அதனையொத்த பரிப்புக்களிலான மாற்றங்களுக்கு, அதாவது பின்வரும் இரண்டுமே காணப்படத்தக்கவற்றுக்குப் பிரயோகிக்கத் தக்கதாகும்:

(அ) LKAS 16 நியமத்துக்கு இணக்கமாக ஆதனம், பொறி, உபகரண உருப்படி ஒன்றின் கிரயத்தின் பகுதியாக ஏற்பிசைவு செய்யப்பட்ட அல்லது SLFRS 16 நியமத்துக்கு இணக்கமாக, பயன்பாட்டு உரிமைச் சொத்தின் கிரயத்தின் பகுதியாக ஏற்பிசைவு செய்யப்பட்ட

(ஆ) …

**விளைவுக்கு வரும் திகதி**

…

9B <u>SLFRS 16 நியமம் ஏப்ரல் 2016 இல் வழங்கப்பட்டது. திருத்தப்பட்ட பந்தி 2. உரிமம் SLFRS 16 நியமங்களைப் பிரயோகிக்கும் போது இத் திருத்தங்களைப் பிரயோகிக்கும்.</u>

## IFRIC 12 சேவைச் சலுகையளித்தல் ஒழுங்கமைப்புக்கள்

குறிப்புரைப் பந்தி திருத்தப்பட்டுள்ளது.

**குறிப்புரைகள்**

- …
- SLFRS 15 *வாடிக்கயைாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்*
- …
- …
- ...

பந்தி 28F சேர்க்கப்பட்டுள்ளது.

**விளைவுக்கு வரும் திகதி**

…

28F <u>SLFRS 16 நியமம் ஏப்ரல் 2016 இல் வழங்கப்பட்டது. திருத்தப்பட்ட பந்தி பிவ8 மற்றும் பின்னிணைப்பு B. உரிமம் SLFRS 16 நியமங்களைப் பிரயோகிக்கும் போது இத் திருத்தங்களைப் பிரயோகிக்கும்.</u>

பின்னிணைப்பு A இல், பந்தி பிவ8 திருத்தப்பட்டுள்ளது.

**பின்னிணைப்பு A**

**பரப்பெல்லை (பந்தி 5)**

…

பிவ8 பந்தி பிவ7(அ) வில் விபரிக்கப்பட்டவாறு, தொழிற்படுத்துனர் தனியாகப் பிரிக்கக்கூடிய உட்கட்டமைப்புக்களை அல்லது பந்தி பிவ7(ஆ) வில் விபரிக்கப்பட்ட வசதிகளை ஏனைய ஒழுங்குமுறைக்குட்படாத சேவைகளை வழங்குவதற்காகப் பயன்படுத்துவதற்கான உரிமையைக் கொண்டிருக்கக் கூடும். இவ்விரண்டில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும், கருத்தின் அடிப்படையில் அங்கு கொடையாளரிடமிருந்து தொழிற்படுத்துனருக்கு ஒரு குத்தகை காணப்படக்கூடும். அவ்வாறெனின், அது <u>SLFRS 16</u> நியமத்துக்கு அமைவாகக் கணக்கிடப்படும்.

## SIC 29 *சேவைச் சலுகையளித்தல் ஒழுங்கமைப்புக்கள்*

***வெளிப்படுத்தல்கள்***

| குறிப்புரைப் பந்தி திருத்தப்பட்டுள்ளது. |
|---|

**குறிப்புரைகள்**

- <u>SLFRS 16 *குத்தகைகள்*</u>
- …

| பந்தி 5 திருத்தப்பட்டுள்ளது. |
|---|

**வழங்கல்**

…

5 சில சேவை சலுகையளிப்பு ஒழுங்கமைப்புக்கள் தொடர்புபட்ட அம்சங்கள் மற்றும் வெளிப்படுத்தல்கள் ஏற்கனவேயுள்ள இலங்கைக் கணக்கீட்டு நியமங்களினால் கையாளப்பட்டுள்ளன (உதாரணமாக, LKAS 16 ஆனது ஆதனம், பொறி, உபகரணங்களின் கையகப்படுத்தலுக்குப் பிரயோகிக்கத் தக்கதாக உள்ளதுடன், சொத்துக்களின் குத்தகைக்கு <u>SLFRS 16</u> பிரயோகிக்கத் தக்கதாகவுள்ளதுடன், LKAS 38 ஆனது அருவச் சொத்தக்களின் கையகப்படுத்தலுக்குப் பிரயோகிக்கத் தக்கதாக உள்ளது). எனினும், ஓர் சேவை சலுகையளிப்பு ஒழுங்கமைப்பானது LKAS 37 நியமம் பிரயோகிக்கப்படத்தக்கவாறு பழுவேற்றப்பட்டதாக இல்லாத போது இலங்கைக் கணக்கீட்டு நியமங்களால் கையாளப்படாத நிறைவேற்றத்தகு ஒப்பந்தங்களுடன் தொடர்புபட்டதாக இருக்கலாம். ஆகவே, இந்த வியாக்கிரயமானது சேவை சலுகையளிப்பு ஒழுங்கமைப்புக்கள் தொடர்பான மேலதிக வெளிப்படுத்தல்களைக் கையாள்கிறது.

| விளைவுக்கு வரும் திகதிப் பந்தி திருத்தப்பட்டுள்ளது. |
|---|

**விளைவுக்கு வரும் திகதி**

…

உரிமம் பந்திகள் 6(உ) மற்றும் 6அ இலுள்ள இத் திருத்தங்களை 01, சனவரி 2012 அன்று அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த அறிக்கையிடல் காலங்களுக்குப் பிரயோகிக்கும். உரிமம் IFRIC 12 இனை ஓர் முன்னயை காலத்தக்குப் பிரயோகிக்குமாயின், அந்த முன்னயை காலத்துக்கு இத் திருத்தமும் பிரயோகிக்கப்படும்.

<u>SLFRS 16 நியமம் ஏப்ரல், 2016 இல் வழங்கப்பட்டது. திருத்தப்பட்ட பந்தி 5. உரிமம் SLFRS 16 நியமங்களைப் பிரயோகிக்கும் போது இத் திருத்தங்களைப் பிரயோகிக்கும்.</u>

| குறிப்புரைகள் பந்தி திருத்தப்பட்டுள்ளது. |
|---|

**குறிப்புரைகள்**

- <u>…</u>
- SLFRS 15 *வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்*
- <u>SLFRS 16 *குத்தகைகள்*</u>
- …
- …

பந்தி 6, SLFRS 15 நியமத்தினால் திருத்தப்பட்டவாறு திருத்தப்பட்டுள்ளது.

வழங்கல்

…

6 வழக்கமான வணிகச் செயற்பாடுகளில் விற்பதற்கென உரிமத்தினால் வைத்திருக்கப்படும் அருவச் சொத்துக்களுக்கு (LKAS 2 மற்றும் SLFRS 15 நியமங்களைப் பார்வையிடுக) அல்லது SLFRS 16 நியமத்துக்கு அமைவாகக் கணக்கு வைக்கப்படும் அருவச் சொத்துக்களின் குத்தகை ஆகியவற்றுக்கு LKAS 38 நியமம் பிரயோகிக்கப்படத் தக்கதல்ல. அதன்படியாக, இந்த வியாக்கியானமானது, மற்றொரு உரிமத்தக்கு விற்பனை செய்வதற்கான இணையத்தளம் ஒன்றின் (அல்லது இணையத்தள மென்பொருள்) விருத்தி அல்லது தொழிற்படுத்தலுக்கான செலவினங்கள் மீது அல்லது SLFRS 16 நியமத்தின் படி கணக்கு வைக்கப்படும் செலவினங்களுக்குப் பிரயோகிக்கப்படாது. இணையத்தளம் ஒன்று தொழிற்படு குத்தகையின் கீழ் குத்தகைக்கு வழங்கப்படும் போது, குத்தகை பெறுனர் இந்த வியாக்கியானத்தைப் பிரயோகிப்பார்.

விளைவுக்கு வரும் திகதிப் பந்தி திருத்தப்பட்டுள்ளது.

**விளைவுக்கு வரும் திகதி**

…

SLFRS 15 *வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்* ஜூன், 2014 இல் வழங்கப்பட்டது. குறிப்புரைகள் பந்தி மற்றும் பந்தி 6 ஆகியன திருத்தப்பட்டன. உரிமம் SLFRS 15 நியமங்களைப் பிரயோகிக்கும் போது இத் திருத்தங்களைப் பிரயோகிக்கும்.

SLFRS 16 நியமம் ஏப்ரல் 2016 இல் வழங்கப்பட்டது. திருத்தப்பட்ட பந்தி 6. உரிமம் SLFRS 16 நியமங்களைப் பிரயோகிக்கும் போது இத் திருத்தங்களைப் பிரயோகிக்கும்.

## இலங்கை கணக்கீட்டு நியமம் 40
## முதலீட்டு ஆதனம்

**நோக்கம்**

1 இந்த நியமத்தின் நோக்கம் முதலீட்டு ஆதனத்திற்கான கணக்கீட்டு கையாள்கை மற்றும் அது தொடர்பான வெளிக்காட்டற் தேவைப்பாடுகள் ஆகிவற்றினை வரையறுத்தலாகும்.

**நோக்கெல்லை**

**2 இந்த நியமம் முதலீட்டு ஆதனங்களின் ஏற்பிசைவு, அளவீடு மற்றும் வெளிக்காட்டல்களுக்குப் பிரயோகிக்கப்படும்.**

3 (நீக்கப்பட்டுள்ளது)

4 இந்த நியமம் கீழ்வருவனவற்றிற்குப் பிரயோகிக்கப்பட மாட்டாது:

(அ) விவசாய நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட உயிரியற் சொத்துக்கள் (LKAS 41 விவசாயம் என்பதை பார்க்க)

(ஆ) கனியவள உரிமைகள் மற்றும் எண்ணெய் இயற்கை வாயு மற்றும் அவை போன்ற மீள்பிறப்பாக்கப்படாத வளங்கள் போன்ற கனிப்பொருட்களின் இருப்பு.

**சொற்பொருள் விளக்கம்**

5 **கீழ்வரும் பதங்கள் இந்த நியமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்களின் அடிப்படையில் உபயோகிக்கப்பட்டுள்ளன:**

***கொண்டு செல்கைத்தொகை*** **என்பது சொத்தொன்று நிதி நிலமைக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகையாகும்.**

***கிரயம்*** **என்பது சொத்தொன்றின் கொள்வனவின் போதோ அல்லது நிர்மாணத்தின் போதோ செலுத்தப்படும் பணம் அல்லது பணத்திற்கு சமமான தொகையோ அல்லது கொடுக்கப்படும் ஏனைய பதிலிறுக்கியின் சீர்மதிப்போ அல்லது ஏற்புடையவிடத்து ஏனைய SLFRS உதாரணம் SLFRS 2** ***பங்கு அடிப்படையிலான கொடுப்பனவு*** **குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் அடிப்படையில் அந்தச் சொத்தினை ஆரம்பந்தில் ஏற்பிசைவு செய்யும் போது அதனுடன் நேரடியாக தொடர்புபடுத்தப்படும் தொகையாகும்.**

***சீர்மதிப்பு*** **எனப்படுவது அறிவும் விரும்பும் கொண்ட சாராரிடையே மேற்கொள்ளபபடும் உறவுமுறையற்ற ஊடுசெயலொன்றின் போது சொத்தொன்று பரிமாற்றப்படும் தொகையாகும் (SLFRS 13** ***சீர்மதிப்பு அளவீட்டை*** **பார்க்கவும்).**

*முதலீட்டு ஆதனம்* ஆவது வாடகை அல்லது மூலதன மதிப்புயர்வு அல்லது இவை இரண்டினையும் உழைக்கும் நோக்கில் கொண்டிருக்கப்படும் (உரிமையாளரினாலோ அல்லது நிதிக் பெறுனரினல் பயன்பாட்டு உரிமைச் சொத்தாகவோ) ஆதனம் (காணி அல்லது கட்டிடம் அல்லது கட்டடமொன்றின் ஒரு பகுதி அல்லது இவை இரண்டும. இது கீழ்வருவனவற்றினை) உள்ளடக்காது:

(அ) பொருட்கள் அல்லது சேவைகளின் உற்பத்தியில் அல்லது வழக்குதலில் அல்லது நிருவாகத் தேவைகளுக்காக உபயோகிப்பதற்காக வைத்திருக்கப்படும் ஆதனங்கள் அல்லது,

(ஆ) வியாபாரத்தின் வழமையான நடவடிக்கையின் நிமித்தம் விற்பனைக்காக வைத்திருக்கப்படும் ஆதனங்கள்.

*உரிமையாளர் உறைகொள் ஆதனம்* என்பது பொருட்கள் அல்லது சேவைகளை வழங்குதலில் உபயோகிப்பதற்காக அல்லது நிருவாக தேவைகளுக்காக (உரிமையாளரினால் அல்லது நிதிக்குத்தகையொன்றின பயன்பாட்டு உரிமைச் சொத்தாக) வைத்திருக்கப்படும் ஆதனமாகும்.

**ஆதனத்தை முதலீட்டு ஆதனமாக அல்லது உரிமையாளர் உறைகொள் ஆதனமாக வகைப்படுத்தல்**

6 (நீக்கப்பட்டுள்ளது)

7. முதலீட்டு ஆதனத்தினை வைத்திருப்பது வாடகையினை உழைப்பதற்கோ அல்லது மூலதன மதிப்புயர்வுக்காகவோ அல்லது இவை இரண்டிற்காகவுமோ ஆகும். எனவே முதலீட்டு

ஆதனமொன்று உரிமமொன்று கொண்டுள்ள ஏனைய சொத்துக்களிலும் பார்க்க அதிக அளவில் சுயாதீனமான காசுப் பகுப்பாய்வுகளைப் பிறப்பாக்கும். இது முதலீட்டு ஆதனத்தினை உரிமையாளர் உறைகொள் ஆதனத்திலிருந்து வேறுபடுத்துகின்றது. பொருட்கள் அல்லது சேவைகளின் (அல்லது நிருவாக தேவைகளுக்காக உபயோகிப்பதற்கான) உற்பத்தி அல்லது வழங்கற் செயன்முறைகளில் உபயோகிக்கப்படும் சொத்துக்களிலிருந்து மாத்திரமல்லாது ஏனைய சொத்துக்களிலிருந்தும் கூட காசுப்பாய்வுகளைப் பிறப்பாக்கும். உரிமையாளர் உறைகொள் ஆதனத்திற்கு LKAS 16 ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்னும் நியமம் பிரயோகிக்கப்படுவதுடன், SLFRS 16 குத்தகை பெறுனரால் பயன்பாட்டு உரிமைச் சொத்தாக வைத்திருக்கப்படும் உரிமையாளர் உறைகொள் ஆதனத்திற்குப் பிரயோகிக்கப்படும்.

8 கீழ்வருன முதலீட்டு ஆதனங்களுக்கான உதாரணங்களாகும்:

(அ) வியாபாரத்தின் வழமையான நடவடிக்கையாக குறுங்கால விற்பனையாக வைத்திருப்பதிலும் பார்க்க நீண்டகால மூலதன மதிப்புயர்வுக்காக வைத்திருக்கப்படும் காணி.

(ஆ) தற்போது தீர்மானிக்கப்பட்டிராத எதிர்காலப் பயன்பாட்டிற்காக வைத்திருக்கப்படும் காணி. (உரிமமொன்று காணியொன்றினை எதிர்காலத்தில் உரிமையாளர் உறைகொள் ஆதனமாகவோ அல்லது வியாபாரத்தின் வழமையான நடவடிக்கையாக குறுங்காலத்தில் விற்பனை செய்வதற்காகவோ வைத்திருக்கின்றதனை தீர்மானித்திராத பட்சத்தில் அந்தக் காணி மூலதன மதிப்புயர்வுக்காக வைத்திருப்படுவதாகக் கொள்ளப்படும்)

(இ) உரிமமொன்றில் உரித்துக் கொள்ளப்பட்ட கட்டிடம் (அல்லது கட்டிடம் தொடர்பாக உரிமமொன்றினால் வைத்திருக்கப்படும் பயன்பாட்டு உரிமைச் சொத்து) மற்றும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தொழிற்பாட்டுக் குத்தகைகளின் கீழ் குத்தகைக்கு விடப்பட்டுள்ள கட்டிடமொன்று.

(ஈ) தற்போது வெறுமையாகவுள்ள ஆனால் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தொழிற்பாட்டுக்குத் குத்தகையின் கீழ குத்தகைக்கு விடப்பட்டுள்ள கட்டடமொன்று.

(உ) முதலீட்டு ஆதனமாக எதிர்காலததில் உபயோகப்படுத்த நிர்மாணிக்கப்பட்ட அல்லது அபிவிருத்தி செய்யப்பட்ட ஆதனம்

9 முதலீட்டு ஆதனமாக அமையாததும் அதன் காரணமாக இந்த நியமத்தின் நோக்கெல்லைக்கு அப்பாற்பட்ட உருப்படிக்களுக்கான உதாரணங்கள் கீழ்வருமாறு:

(அ) வழமையான வியாபார நடவடிக்கையின் பகுதியாக விற்பனை செய்வதற்காகவோ அல்லது அவ்வாறான விற்பனைக்கான நிருமானம் அல்லது அபிவிருத்திக்காகவோ (LKAS 2 தொக்குகள் என்னும் நியமத்தினைப் பார்க்கவும்) கருதப்பட்டுள்ள ஆதனம், உதாரணமாக, கிட்டிய எதிர்காலத்தில் விற்பனை செய்வதற்காகவோ அல்லது அபிவிருத்தி செய்து விற்பனை செய்வதற்காகவோ மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம்.

(ஆ) (நீக்கப்பட்டுள்ளது)

(இ) (ஏனைய விடயங்களுடன்) எதிர்காலத்தில் உரிமையாளர் உறைகொள் ஆதனமாக பயன்படுத்துவதற்காக அல்லது எதிர்காலத்தில் அபிவிருத்தி செய்வதற்காக அல்லது ஊழியர்களால் உறைவிடமாகப் பாவிக்கப்படும் (ஊழியர்கள் சந்தை வாடகை விகித அடிப்படையில் வாடகையினை செலுத்துகின்றபோதோ அல்லது செலுத்தாதபோதோ) மற்றும் விற்பனைக்காக காத்திருக்கும் உரிமையாளர் உறைகொள்ளும் ஆதனங்கள் உள்ளடங்கலாக உரிமையாளர் உறைகொள் ஆதனங்கள், (LKAS 16 மற்றும் SLFRS 16 நியமங்களைப் பார்க்கவும்)

(ஈ) (நீக்கப்பட்டுள்ளது)

(உ) நிதிக்குத்தகையின் கீழ் வேறொரு உரிமத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள ஆதனம்.

10 சில ஆதனங்கள் ஒரு பகுதியினை வாடகையினை உழைப்பதற்காகவோ அல்லது மூலதன மதிப்புயர்வினை நோக்காகக் கொண்டோ மறு பகுதியினை பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்வதிலோ அல்லது நிருவாகத் தேவைகளிலோ உபயோகிப்பதற்காகவும் கொண்டிக்கக் கூடும். இந்தப் பகுதிகள் வெவ்வேறாக விற்கப்படக்கூடியதாயின் (அல்லது நிதிக்குத்தகையொன்றின் கீழ் வெவ்வேறாக குத்தகைக்கு வழங்கப்படுகிறதுகூடியதாயின்) உரிமமொன்று இந்தப் பகுதிகளை வெவ்வேறாகக் கணக்கிற் கொள்ளும். இந்தப் பகுதிகள் வெவ்வேறாக விற்கப்பட முடியாதனவையாக இருக்கும் பட்சத்தில் அதன் கணக்கிற்கொள்ள முடியாத சிறு பகுதி மாத்திரம் பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்வதில் அல்லது நிருவாகத் தேவைகளுக்கு உபயோகிப்பதற்காக கொள்ளப்பட்டிருந்தால் மாத்திரம் அது முதலீட்டு ஆதனமாகக் கொள்ளப்படும்.

11 சில சமயங்களில் உரிமமொன்று அது கொண்டுள்ள ஆதனங்களில் குடியிருப்பாளர்களுக்கு துணைச் சேவைகளை வழங்குகின்றது. முழு ஏற்பாடுகளுடனும் ஒப்பிடுகையில் அந்தச் சேவைகள் கணிசத்தன்மை அற்றததாக இருப்பின் உரிமம் அந்த ஆதனத்தினை முதலீட்டு ஆதனமாகக் கொள்ளும். உதாரணமாக, அலுவலகக் கட்டிடமொன்றின் உரிமையாளர் அந்தக் கட்டடத்தில் வதியும் குத்தகை பெறுனர்களுக்கு பாதுகாப்பு மற்றும் பராமரிப்புச் சேவைகளை வழங்குதல்.

12 ஏனைய சந்தரப்பங்களில் வழங்கப்படும் சேவைகள் கணிசமானவையாகும். உதாரணமாக உரிமமொன்று உணவகமொன்றினை சொந்தமாகக் கொண்டு முகாமை செய்யுமேயாகில் விருந்தினர்களுக்கு வழங்கப்படும் சேவைகள் முழு ஏற்பாட்டினதும் கணிசமான பகுதியாகும். எனவே உரிமையாளர் முகாமை செய்யும் உணவகமொன்று முதலீட்டு ஆதனமொன்றாக கொள்ளப்படுவதிலும் பார்க்க உரிமையாளர் உறைகொள் ஆதனமாக கொள்ளப்படும்.

13 ஆதனமொன்று முதலீட்டு ஆதனமொனறாகத் தகைமை பெறாமைக்குத் துணைச் சேவைகள் அந்தளவிற்கு கணிசமானவையா எனத் தீர்மானிப்பது கடினமானதாக இருக்கக்கூடும். உதாரணமாக, உணவகமொன்றின் உரிமையாளர் சில பொறுப்புக்களை முகாமை ஒப்பந்தமொன்றின் கீழ் மூன்றாம் பகுதியினருக்கு மாற்றுவதாகும். அவ்வாறான ஒப்பந்தங்களின் நிபந்தனைகள் பரந்தளவில் வேறுபடும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் உரிமையாளரின் நிலையின் ஒரு அந்தலை அடக்கதில் ஒரு இசைவான முதலீட்டாளரின் நிலையாக இருக்கக்கூடும். அதன் மறு அந்தலை, உரிமையாளர் நாளாந்த செயற்பாடுகளை இலகுவாக வெளியார் நிறுவனங்களிலிருந்து பெற்றுக் கொள்ளும் அதேவேளை உணவு விடுதியின் தொழிற்பாடுகளினால் பிறப்பாக்கப்படும் காசுப் பகுப்பாய்வுகளில் ஏற்படும் கணிசமான வேறுபாடுகளைத் தன்னகத்தே கொண்டு இருப்பதாகும்.

14. ஆதனமொன்று முதலீட்டு ஆதனமாக தகைமை பெறுகினறதாக எனத் தீர்மானித்தலில் நீதியான தீர்மானம் தேவைப்படுகின்றது. உரிமமொன்று முதலீட்டு ஆதனத்திற்கான சொற்பொருள் விளக்கம் மற்றும் பந்திகள் 7-13 இல் கூறப்பட்டுள்ள தொடர்புடைய வழிகாட்டல்கள் ஆகியவற்றிற்கு அமைவாக கொள்கை மாறாத அடிப்படையில் நீதியான தீரமானங்களை மேற்கொள்ளக்கூடியதாக தேர்வு நிபந்தனைகளை விருத்தி செய்யும். வகைப்படுத்தல் கடினமான போது உரிமமொன்று இந்த தேர்வு நிபந்தனைகளை வெளிக்காட்ட வேண்டுமென பந்தி 77(இ) தேவைப்படுத்துகின்றது.

14A முதலீட்டு ஆதனம் ஒன்றின் கையகப்படுத்தலானது, ஒரு சொத்தின் அல்லது சொத்துத் தொகுதி ஒன்றின் கையகப்படுத்தலா அல்லது SLFRS 3 *வணிக சேர்க்கைகளின்* பரப்பெல்லைக்குள்ளான ஒரு வணிக சேர்க்கையா என்பதை தீர்மானிக்க ஓர் சுயதீர்ப்பு தேவைப்படும். இது ஒரு வணிக சேர்க்கையா என்பதை தீர்மானிக்க SLFRS 3 க்குக் குறிப்புரை செய்யப்பட வேண்டும். இந் நியமத்தின் பந்திகள் 7-14 களிலான விவாதம் சொத்து உரிமையாளர் உறைகொள் சொத்தா அல்லது முதலீட்டுச் சொத்தா இல்லையா என்பது தொடர்பானதேயன்றி, SLFRS 3 இல் வரையறுக்கப்பட்டுள்ளபடி சொத்தின் கையகப்படுத்தல் ஒரு வணிக இணைப்பா இல்லையா என்பதை தீர்மானிக்க முடியாது.

SLFRS 3 இல் பொருள் வரையறுக்கப்பட்டுள்ளபடி ஒரு குறிப்பிட்ட ஊடுசெயல் வணிக இணைப்பின் பொருள் வரையறையை பூர்த்தி செய்கிறதா என்பதை தீர்மானித்தல் இந்த நியமத்தில் வரையறுக்கப்பட்டுள்ளபடி முதலீட்டுச் சொத்தையும் உள்ளடக்கியதா என்பது இரு நியமங்களினதும் தனியான பிரயோகங்களைத் தேவைப்படுத்துகிறது.

15. சில வேளைகளில் உரிமமொன்று அதன் முதனிலைக் கம்பனிக்கோ அல்லது ஏனைய கீழ்நிலைக் கம்பனிக்கோ குத்தகைக்கு விடப்பட்ட அல்லது அவற்றினால் வதியும் ஆதனத்தினை உரித்தாகக் கொண்டிருக்கும். குழுமத்தின் கண்ணோட்டத்தில் நோக்குகையில் இந்த ஆதனம் உரிமையாளர் உறைகொள் ஆதனமாகக் கருதப்படுவதால் இது ஒன்றித்த நிதிக் கூற்றுக்களில் முதலீட்டு ஆதனமொன்றாகக் தகைமை பெறாது. எனினும் உரித்துக் கொண்ட உரிமத்தின் கண்ணோட்டத்தில் நோக்குகையில், பந்தி 5 இல் கூறப்பட்டுள்ள சொற்பொருள் விளக்கத்திற்கு அமைவானதாகில் இந்த ஆதனம் முதலீட்டு ஆதனமொன்றாகக் கொள்ளப்படும். எனவே குத்தகை தருனர் இவ்வாறான ஆதனத்தினை அதன் தனியான நிதிக்கூற்றுக்களில் முதலீட்டு ஆதனமொன்றாக கொள்வர்.

## ஏற்பிசைவு

**16 <u>உரிமை கொள்ளப்பட்ட</u> முதலீட்டு ஆதனமொன்று கீழ்வரும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் சொத்தொன்றாக ஏற்பிசைவு செய்யப்படும்:**

**(அ) முதலீட்டு ஆதனத்துடன் தொடர்புபட்ட எதிர்காலப் பொருளியற் பயன்கள் உரிமத்திற்கு பாய்வதற்கான சாத்தியக்கூறு இருத்தல் அத்துடன்**

**(ஆ) முதலீட்டு ஆதனத்தின் கிரயம் நம்பகரமாக அளவிடப்படக்கூயதாக இருத்தல்.**

17 இந்த ஏற்பிசைவுக் கோட்பாட்டின் கீழ் உரிமமொன்று அதன் சகல முதலீட்டு ஆதனங்களின் கிரயத்தினை அவை இறுக்கப்படும் போதே ஆய்வு மதிப்பீடு செய்யும். இந்தக் கிரயம். முதலீட்டு ஆதனத்தினை ஆரம்பந்தில் கொள்வனவு செய்யும் போது இறுக்கப்பட்ட கிரயங்களையும் அதன் பின் அந்த ஆதனத்திற்கு சேர்க்கப்பட்ட அல்லது அதன் பகுதியினை பிரதியீடு செய்ய அல்லது அதற்குப் பராமரிப்பு சேவை செய்த கிரயங்களை உள்ளடக்கும்.

18 பந்தி 16 இல் கூறப்பட்டுள்ள ஏற்பிசைவுத் தத்துவத்தின் கீழ் உரிமமொன்று முதலீட்டு ஆதனத்தின் முன் கொண்டுசெல்கைத் தொகையில் அந்த ஆதனத்தின் நாளாந்த சேவை வழங்கற் கிரயங்களை ஏற்பிசைவு செய்யாது, இந்தக் கிரயங்கள் இலாபம் அல்லது நட்டத்தில் இறுக்கப்பட்ட செலவுகளாக ஏற்பிசைவு செய்யப்படும். நாளாந்த சேவை வழங்கற் கிரயங்கள் அடிப்படையில் கூலி மற்றும் நுகர்வுப் பொருட் கிரயங்களை கொண்டிருப்பதுடன் சில சந்தர்ப்பங்களில் சிறிய உதிரிப்பாகக் கிரயங்களையும் உள்ளடக்கக்கூடும். இந்தச் செலவினங்களின் நோக்கம் அனேகமாக அந்த ஆதனத்தின் ‘‘திருத்த மற்றும் பராமரிப்புச்’’ செலவாக விபரிக்கப்படும்.

19 முதலீட்டு ஆதனங்களின் பகுதிகள் பிரதியிடல்கள் மூலமாக கொள்வனவு செய்யப்பட்டிக்கக்கூடும். உதாரணாக, உட்சுற்று மதில்கள் ஆரம்பந்தில் இருந்த சுற்று மதில்களைப் பிரதியீடு செய்யப்பட்டவையாக அமையக்கூடும். ஏற்பிசைவுத் தத்துவத்தின் கீழ், உரிமமொன்று முதலீட்டு ஆதனமொன்றின் முன் கொண்டு செல்கைத் தொகையில் இருப்பிலுள்ள முதலீட்டு ஆதனத்தின் பிரதியீடு செய்யப்படும் கிரயத்தினை அந்தக் கிரயம் இறுக்கப்படும் நேரத்தில் ஏற்பிசைவு தேர்வு நிபந்தனைகள் திருப்தி செய்யும் பட்சத்தில் ஏற்பிசைவு செய்யும் பிரதியீடு செய்யப்பட்ட பகுதிகளின் முன் கொண்டு செல்கைத் தொகையானது இந்த நியமத்தின் எதிரிசைவு ஏற்பாடுகளின் படி எதிரிசைவு செய்யப்படும்.

<u>19A குத்தகை பெறுனரால் பயன்பாட்டு உரிமைச் சொத்தாக வைத்திருக்கப்படும் முதலீட்டு ஆதனம் ஒன்று SLFRS 16 நியமத்துக்கு இணக்கமாக ஏற்பிசைவு செய்யப்படும்.</u>

**ஏற்பிசைவின் போதான அளவீடு**

**20 முதலீட்டு ஆதனமொன்று ஆரம்பந்தில் கிரயத்தில் ஏற்பிசைவு செய்யப்படும். ஆரம்ப அளவீட்டில் ஊடுசெயற் கிரயங்கள் உள்ளடக்கப்படும்.**

21 கொள்வனவு செய்யப்பட்ட முதலீட்டு ஆதனமொன்றின் கிரயம் அதன் கொள்வனவு விலை மற்றும் அதனுடன் நேரடியாக தொடர்புபட்ட செலவினங்களை உள்ளடக்கும். நேரடியாக தொடர்புபட்ட செலவினங்கள், உதாரணமாக, சட்டச் சேவைகளுக்கான தொழில்சார் கட்டணங்கள், ஆதன கைமாறல் வரிகள் மற்றும் ஏனைய ஊடுசெயற் கிரயங்களை உள்ளடக்கும்.

22 (நீக்கப்பட்டுள்ளது)

23 கீழ்வரும் கிரயங்களினால் முதலீட்டு ஆதனமொன்றின் கிரயம் அதிகரிக்கப்படமாட்டாது:

(அ) ஆரம்பித்தற் கிரயங்கள் (முகாமை எதிர்பார்க்கும் வகையில் தொழிற்பட அவசியமான நிலைக்கு ஆதனத்தினைக் கொண்டு வருவதற்கு இந்தக் கிரயங்கள் அவசியமானவையாக இருந்தாலேயன்றி)

(ஆ) முதலீட்டு ஆதனம் திட்டமிடப்பட்ட உறைகொள் மட்டத்தினை அடைவதற்கு முன்பதாக அடையப்பெற்ற தொழிற்பாட்டு நட்டங்கள்.

(இ) ஆதனத்தினை நிர்மாணிப்பதில் அல்லது அபிவிருத்தி செய்வதில் அடையப் பெற்ற மூலப்பொருள், கூலி மற்றும் ஏனைய வளங்களின் விரயமான அசாதாரணத் தொகைகள்.

24 முதலீட்டு ஆதனமொன்றிற்கான கொடுப்பனவு பின்போடப்படுமேயாகில் அதன் கிரயமானது சமமான காசு விலையாகும். இந்தத் தொகைக்கும் மொத்தக் கொடுப்பனவுகளுக்கும் இடையேயான வித்தியாசம் வட்டிச் செலவாக கடன்காலமீறாக ஏற்பிசைவு செய்யப்படும்.

25 (நீக்கப்பட்டுள்ளது)

26 (நீக்கப்பட்டுள்ளது)

27. நிதியல்லா சொத்து அல்லது சொத்துக்கள் அல்லது பணம் சார்ந்த மற்றும் பணம் சாராத சொத்து அல்லது சொத்துக்களின் சேர்க்கையினை பரிமாற்றாகக் கொண்டு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட முதலீட்டு ஆதனங்கள் கொள்வனவு செய்யப்படலாம். கீழே தரப்பட்டுள்ள கலந்தாய்வு ஒரு பணம் சாரா சொத்து வேறொரு பணம் சாராச் சொத்திற்காக பரிமாற்றப்படுவதனைப் பற்றிய போதிலும் இது முன்னைய வாக்கியத்தில் (அ) பரிமாற்ற ஊடுசெயல் வர்த்தக அடக்கத்தினை கொண்டிராததாகவோ அல்லது (ஆ) பெறப்பட்ட சொத்தின் அல்லது வழங்கப்பட்ட சொத்தின் சீர்மதிப்பு நம்பகரமாக அளவிடப்பட முடியாததாகவோ இருந்தாலேயன்றி சீர்மதிப்பில் அளவிடப்படும். கொள்வனவு செய்யப்படும் சொத்தானது உரிமம் கொடுக்கப்பட்ட சொத்தினை உடனடியாக எதிரிசைவு செய்ய முடியாததாக இருந்த போதிலும் இந்த முறையில் அளவீடு செய்யப்படும். கொள்வனவு செய்யப்பட்ட சொத்து சீர்மதிப்பில் அளவிடப்படாத பொழுது அதன் கிரயம் கைவிடப்பட்ட சொத்தின் முன் கொண்டு செல்கைத் தொகையில் அளவிடப்படும்.

28. பரிமாற்ற ஊடுசெயலொன்று வர்த்தக அடக்கத்தினைக் கொண்டுள்ளதா என உரிமமொன்று தீர்மானிப்பது, இந்த ஊடுசெயலின் விளைவாக அதன் எதிர்கால காசுப்பகுப்பாய்வுகள் மாற்றமடையுமென எதிர்பார்க்கப்படும் அளவினை கருத்திற் கொண்டதாகும். பரிமாற்று ஊடுசெயலொன்று வர்த்தக அடக்கத்தினை கொண்டிருப்பது கீழ்வரும் போதாகும்.

(அ) பெறப்பட்ட சொத்தின் காசுப்பாய்வுகளின் வடிவமைப்பு (இடர், காலவீடு, மற்றும் தொகை) மாற்றப்பட்ட சொத்தின காசுப்பாய்வுகளின் உருவமைப்பிலிருந்து வேறுபடுமேயாகில் அல்லது.

(ஆ) ஊடுசெயலினால் உரிமத்தின் தொழிற்பாட்டுப் பகுதியின் உரிமம் சார்ந்த பெறுமதியில் ஏற்படும் தாக்கமானது பரிமாற்றத்தின விளைவாக மாற்றமடையுமேயாகில், அத்துடன்

(இ) பரிமாற்றப்பட்ட சொத்துக்களின் சீர்மதிப்பு தொடர்பாக (அ) வில் அல்லது (ஆ) வில் ஏற்படும் வேறுபாடானது கணிசமானதாக இருப்பின்,

பரிமாற்று ஊடுசெயல் ஒன்று வர்த்தக அடக்கத்தினை கொண்டுள்ளதா எனத் தீர்மானிப்பதில் ஊடுசெயலினால் பாதிப்புக்குள்ளாகும் உரிமத்தின் தொழிற்பாட்டுப் பகுதியின் உரிமம் சார்ந்த பெறுமதியானது வரிக்குப் பின்னரான காசுப் பகுப்பாய்வுகளைப் பிரதிபலிக்கும். உரிமமொன்று விரிவான கணிப்பீடுகளை மேற்கொள்ளாமலேயே இந்தப் பகுப்பாய்வின் பெறுபேறுகள் தெளிவானவையாக இருக்கக்கூடும்.

29. சொத்தொன்றிற்கான ஒப்பிடத்தகு சந்தை ஊடுசெயல்கள் இல்லாதவிடத்து (அ) அந்தச் சொத்திற்கான நியாயபூர்வமான சீர்மதிப்பு மதிப்பீடுகளின் வீச்சத்தின் வேறுபாடு கணிசமானதாக இல்லாதவிடத்து அல்லது (ஆ) அந்த வீச்சத்திற்கு இடையேயான வேறுபட்ட மதிப்படுகளின் நிகழ்தகவுகள் நியாயபூர்வமாக மதிப்பிடக்கூடியதாக இருந்து அவை சீர்மதிப்பினை மதிப்பீடு செய்வதில் உபயோகிக்கப்படக் கூடியதாக இருப்பின், அந்தச் சொத்தின் சீர்மதிப்பு நம்பகரமாக அளவிடப்படக் கூடியதாக இருக்கும். உரிமமானது பெறப்பட்ட சொத்தின் அல்லது கொடுக்கப்பட்ட சொத்தின் சீர்மதிப்பினை நம்பகரமாக தீர்மானிக்கக் கூடியதாக இருப்பின், பெறப்பட்ட சொத்தின் சீர்மதிப்பு அதிக தெளிவான சான்றாக இருந்தாலன்றி கொடுக்கப்பட்ட சொத்தின் சீர்மதிப்பு கிரயத்தினை அளவிடுவதில் உபயோகிக்கப்படும்.

29A குத்தகை பெறுனரால் பயன்பாட்டு உரிமைச் சொத்தாக வைத்திருக்கப்படும் முதலீட்டு ஆதனம் ஒன்று SLFRS 16 நியமத்துக்கு இணக்கமாக ஆரம்பத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்.

**ஏற்பிசைவின் பின்னரான அளவீடு**

**கணக்கீட்டுக் கொள்கை**

**30. உரிமமொன்று பந்திகள் 32 (அ) இல் விதிவிலக்கு நீங்கலாக பந்திகள் 33-55 இல் விளக்கப்பட்டுள்ள சீர்மதிப்பு மாதிரியமைப்பினை அல்லது பந்தி 56 இல் விளக்கப்பட்டுள்ள கிரய மாதிரியமைப்பினை அதன் கணக்கீட்டுக் கொள்கையாகக் கொள்வதுடன் அந்தக் கொள்கையினை அதன் முதலீட்டு ஆதனம் எல்லாவற்றிற்கும் பிரயோகிக்கும்.**

31. கணக்கீட்டுக் கொள்கையில் சுய விருப்பிலான, மாற்றம், உரிமத்தின் நிதி நிலைமை நிதியியல் முன்னேற்றம் அல்லது காசுப்பாய்வு என்பவற்றில் ஊடுசெயல்கள், ஏனைய நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் என்பவை பற்றி நம்பகமானதும் மிகவும் ஏற்புடையதுமான தகவலினை வழங்கும் நிதிக்கூற்றுக்களில் மாற்றங்களை விளைவிக்கும் பட்சத்தில் மாத்திரம் மேற்கொள்ளப்படுமென LKAS 8 கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள் என்னும் நியமம் கூறுகின்றது. சீர்மதிப்பு மாதிரி அமைப்பிலிருந்து கிரய மாதிரி அமைப்பிற்கான மாற்றம் அதிக அளவில் ஏற்புடைய முன்னிலைப்படுத்தலினை விளைவிப்பது மிகவும் சாத்தியமற்றதாகும்.

32. சகல உரிமங்களும் அளவீட்டுத் தேவைகளுக்காக (உரிமம் சீர்மதிப்பு மாதிரியினை உபயோகிக்குமேயாகில்) அல்லது வெளிக்காட்டற் தேவைகளுக்காக (இது கிரய மாதிரியினை உபயோகிக்குமேயாகில். முதலீட்டு ஆதனத்தின் சீர்மதிப்பினை தீர்மானிக்க வேண்டுமென இந்த நியமம் கேட்டுக் கொள்கின்றது. உரிமமொன்று முதலீட்டு ஆதனத்தின் சீர்மதிப்பானது ஒரு சுதந்திரமான அங்கீகரிக்கப்பட்ட பொருத்தமான திறந்தொழில் தகமையும் மதிப்பிடப்படும் ஆதனத்தின் வகையிலும் அமைவிடத்திலும் சமீபகால அனுபவத்தை கொண்ட ஒருவரின் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்பட வேண்டுமென ஊக்கப்படுத்தப்பட்டாலும் அவ்வாறு கோரப்படவில்லை.

**32அ உரிமமொன்று:**

**(அ) சீர்மதிப்புடன் நேரடியாக தொடர்புபட்ட வகையில் வருமானத்தினைக் கொடுக்கும், பரிப்புக்களைக் கொண்ட சகல முதலீட்டு ஆதனங்களுக்கும் அல்லது முதலீட்டு ஆதனம் உள்ளடங்கலாக குறிப்பிட்ட சொத்துக்களிலிருந்து வருவாயினைக் கொடுக்கும் முதலீட்டு அத்துடன், ஆதனங்களுக்கும் சீர்மதிப்பு மாதிரியினையோ அல்லது கிரய மாதிரியினையோ தேர்வு செய்யலாம்.**

**(ஆ) மேலே (அ) வில் மேற்கொள்ளப்படும் தேர்வுகளை கவனத்திற் கொள்ளாது ஏனைய சகல முதலீட்டு ஆதனங்களுக்கும் சீர்மதிப்பு மாதிரியினையோ அல்லது கிரய மாதிரியினையோ தேர்வு செய்யலாம்.**

32ஆ சில காப்பறுதி நிறுவனங்களும் ஏனைய உரிமங்களும் சில அலகுகளை இணைத்த ஒப்பந்தங்களினூடாக முதலீட்டாளர்களும் ஏனைய அலகுகளினை உரிமமும் வைத்திருக்கக் கூடியதாக அக ஆதன நிதியமொன்றினை தொழிற்படுத்துகின்றன. உரிமமொன்று நிதியத்தினால் கொண்டுள்ள ஆதனத்தின் ஒரு பகுதியினை கிரயத்திலும் மறு பகுதியினை சீர்மதிப்பிலும் அளவிடுவதனை பந்தி 32 (அ) அனுமதிக்கவில்லை.

32இ உரிமமொன்று பந்தி 32 (அ) விபரிக்கப்பட்டுள்ள இரு வகைகளுக்கும் வேறுபட்ட மாதிரியமைப்புக்களைத் தேர்வு செய்யுமேயாகில், வேறுபட்ட மாதிரியமைப்புக்களை உபயோகித்து அளவிடப்பட்ட சொத்துக்களின் குழுமங்களுக்கு இடையிலான முதலீட்டு ஆதனங்களின் விற்பனைகள் சீர்மதிப்பில் ஏற்பிசைவு செய்யப்படுவதுடன் சீர்மதிப்பிலான திரண்ட மாற்றம் இலாபத்தில் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும். அதன்படி, முதலீட்டு ஆதனமொன்று சீர்மதிப்பு மாதிரி உபயோகிக்கப்படும் குழுமமொன்றிலிருந்து கிரய மாதிரி உபயோகிக்கப்படும் குழுமமொன்றிற்கு விற்கப்படுமேயாகில், விற்பனைத் திகதியில் அந்த ஆதனத்தின் சீர்மதிப்பு அதன் கருதப்படும் கிரயமாக மாறும்.

**சீர்மதிப்பு மாதிரியமைப்பு**

**33 ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர், சீர்மதிப்பு மாதிரியினை தேர்வு செய்யும் உரிமமொன்று பந்தி 53 இல் விபரிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பம் தவிர, அதன் சகல முதலீட்டு ஆதனங்களையும் சீர்மதிப்பில் அளவிடும்.**

**34** (நீக்கப்பட்டுள்ளது)

**35 முதலீட்டு ஆதனத்தின் சீரமதிப்பிலிருந்தான மாற்றமொன்றினால் ஏற்படும் இலாபம் அல்லது நட்டம் அது ஏற்படும் காலத்திற்கான இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்.**

36-39 (நீக்கப்பட்டுள்ளது)

40 முதலீட்டு ஆதனத்தின் சீர்மதிப்பானது, ஏனைய விடயங்களுடன், நடப்புக் குத்தகைகளிலிருந்தான வாடகை வருமானத்தினையும் நடப்பு நிலவரங்களின் கீழ் எதிர்காலக் குத்தகைகளிலிருந்து பெறக்கூடிய வாடகை வருமானம் பற்றி அறிவும் விருப்பும் கொண்ட சாரார் மேற்கொள்ளும் நியாயபூர்வமானதும் சான்று பகிரக் கூடியதுமான எடுகோள்களையும் பிரதிபலிக்கும்.

<u>40அ குத்தகை பெறுனரால் பயன்பாட்டு உரிமைச் சொத்தாக வைத்திருக்கப்படும் முதலீட்டு ஆதனம் ஒன்றினை அளவிடுவதற்காக குத்தகை பெறுனர் சீர்மதிப்பு முறையைப் பிரயோகிப்பின், அது பயன்பாட்ட உரிமைச் சொத்தினை சீர்மதிப்பில் அளவிடுமே தவிர, அடிப்படைச் சொத்தினையல்ல.</u>

41 ஆதனமொன்றின் மீதான நாட்டம் அதன் சீர்மதிப்பிற்கு மறுமதிப்புச் செய்யப்பட வேண்டுமென பந்தி 33 தேவைப்படுத்துகின்றது. சந்தை விலைகளில் கைமாறப்படும் குத்தகை ஒன்றில் கொள்வனவின் போது குத்தகை ஆதனம் மீதான நாட்டத்தின் சீர்மதிப்பானது

எதிர்பார்க்கப்படும் எல்லா குத்தகைக் கொடுப்பனவுகளையும் கழிக்கும் போது (ஏற்பிசைவு செய்யப்படும் பரிப்புக்கள் தொடர்பானவை உள்ளடங்கலாக) பூச்சியமாக இருக்கும். இந்த முதலீட்டு ஆதனம் ஒன்றின் கிரயத்தினது ஆரம்ப ஏற்பிசைவுக்கான அடிப்படையை SLFRS 16 நியமம் வழங்குகிறது. குத்தகை பெறுனரால் பயன்பாட்டு உரிமைச் சொத்தாக வைத்திருக்கப்படும் முதலீட்டு ஆதனமானது அவசியமெனில், உரிமம் சீர்மதிப்பு முறையைப் பின்பற்றத் தெரிவு செய்தால் சீர்மதிப்புக்கு மீள அளவிடப்படும் என பந்தி 33 தேவைப்படுத்துகிறது. குத்தகைக் கொடுப்பனவுகள் சந்தை விகிதங்களில் காணப்படும் போது, கையகப்படுத்தலின் போது குத்தகை பெறுனரால் பயன்பாட்டு உரிமைச் சொத்தாக வைத்திருக்கப்படும் முதலீட்டு ஆதனத்தின் சீர்மதிப்பானது, அனைத்த எதிர்பார்த்த குத்தகைக் கொடுப்பனவுகளினதும் நிகர பெறுமதி (ஏற்பிசைவு செய்யப்பட்ட குத்தகைப் பரிப்புக்கள் உள்ளடங்கலாக) பூச்சியமாக இருக்க வேண்டும். ஆகவே, SLFRS 16க்கு அமைவாக பயன்பாட்டு உரிமைச் சொத்தினைக் கிரயத்திலிருந்து சீர்மதிப்புக்கு மீள அளவிடுதல் (பந்தி 50 இலுள்ள தேவைப்பாடுகளைக் கருத்தில் எடுத்து) பந்தி 33க்கு அமைவாக அளவிடுதலானது, சீர்மதிப்பானது வேறுபட்ட காலப்பகுதிக்கு அளவிடப் பட்டிருந்தால் தவிர, எந்தவொரு ஆரம்ப ஆதாயம் அல்லது இழப்புக்கு வழிவகுத்தலாகாது. ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர் சீர்மதிப்பைப் பின்பற்றும் தெரிவு மேற்கொள்ளப்பட்டிருந்தால் இவ்வாறு ஏற்படலாம்.

42-47 (நீக்கப்பட்டுள்ளது)

48. விதிவிலககான சநதர்ப்பங்களில், உரிமமொன்று முதன்முதலாக முதலீட்டு ஆதனம் ஒன்றினைக் கொள்வனவு செய்யும் போது (உபயோக மாற்றத்தின் பின்னர் இருப்பிலுள்ள ஆதனமொன்று முதன் முதலாக முதலீட்டு ஆதனமாக மாற்றமடைகையில்) நியாயபூர்வமாக சீர்மதிப்பு மதிப்பீடுகளின் வீச்சததில் மாறுபடும் தன்மை மிகவும் பெரியதாகவும் வேறுபட்ட பெறுபேறுகளின் நிகழ்தகவுகளை மதிப்பிடுதல் சிரமமானதாகவும் இருக்கும் போது சீர்மதிப்பிற்கான தனியொரு மதிப்பீட்டினை பயன்படுத்த முடியாமை தெளிவான சான்றாக இருக்கும். இது ஆதனத்தின் சீர்மதிப்பினை தொடர்ச்சியான அடிப்படையில் நம்பகரமாக தீர்மானிக்க முடியாது இருப்பதனை குறிக்கக் கூடும். (பந்தி 53 இனைப் பார்க்கவும்)

49. (நீக்கப்பட்டுள்ளது)

50 சீர்மதிப்பு மாதிரி அமைப்பின் கீழ் முதலீட்டு ஆதனமொன்றின் முன்கொணர்தொகையை தீர்மானிப்பதில், உரிமமொன்று வேறான சொத்துக்கள் அல்லது பரிப்புக்களாக ஏற்பிசைவு செய்யப்பட்ட சொத்துக்கள் அல்லது பரிப்புக்களை மீண்டும் இன்னொரு தடவை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படக் கூடாது. உதாரணமாக:

(அ) மின் உயர்த்திகள் அல்லது குளிரூட்டிகள் போன்ற உபகரணங்கள் அனேகமாக கட்டடத்தின் ஒன்றித்த பகுதிகளாகக் கொண்டு வேறாக ஆதனம், பொறி மற்றும் உபகரணமாக ஏற்பிசைவு செய்யப்படுவதிலும் பார்க்க பொதுவாக முதலீட்டு ஆதனத்தின் சீர்மதிப்பில் உள்ளடக்கப்படும்.

(ஆ) அலுவலகமொன்று தளபாடங்களுடன் கூடிய அடிப்படையில் குத்தகைக்கு விடப்படின், வாடகை வருமானமானது தளபாடங்களுடன் கூடிய அலுவலகத்துடன் தொடர்புபட்டுள்ளமை காரணமாக அலுவலகத்தின் சீர்மதிப்பானது பொதுவாக தளபாடங்களின் சீர்மதிப்பினையும் உள்ளடக்கும். முதலீட்டு ஆதனத்தின் சீர்மதிப்பில் தளபாடமும் உள்ளடக்கப்பட்டுள்ள போது உரிமமொன்று தளபாடத்தினை வேறான சொத்தொன்றாக ஏற்பிசைவு செய்யாது.

(இ) உரிமமொன்று முன் செலுத்தப்பட்ட அல்லது அட்டுறுவான தொழிற்பாட்டுக் குத்தகை வருமானத்தினை வேறான பரிப்பொன்றாக அல்லது சொத்தொன்றாக ஏற்பிசைவு செய்வதனால் முதலீட்டு ஆதனத்தின் சீர்மதிப்பு அவற்றினை உளளடக்காது.

(ஈ) குத்தகை பெறுனரால் பயன்பாட்டு உரிமைச் சொத்தாக கீழ் வைத்திருக்கப்படும் முதலீட்டு ஆதனமொன்றின் சீர்மதிப்பு எதிர்பார்க்கப்படும் காசுப்பாய்வுகளைப் பிரதிபலிக்கின்றது. (செலுத்தப்பட வேண்டி வருமென எதிர்பார்க்கப்படும் மாறும் குத்தகைக் கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக). அதன்படி, ஆதனமொன்றிற்காக பெறப்பட்ட மதிப்பீடு செலுத்தப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படும் சகல

கொடுப்பனவுகளையும் கழித்த பின்னர் வரும் பெறுமதியாக இருப்பின், சீர்மதிப்பு மாதிரி அமைப்பினை உபயோகித்து முதலீட்டு ஆதனத்தின் கொண்டு செல்லும் தொகையைக் கணித்தறிதலில் ஏற்பிசைவு செய்யப்பட்ட எந்தவொரு குத்தகைப் பரிப்பினையும் மீளக் கூட்டுதல் அவசியமானதாகும்.

51. (நீக்கப்பட்டுள்ளது)

52. சில சந்தர்ப்பங்களில் உரிமமொன்று முதலீட்டு ஆதனமொன்று தொடர்பாக அதன் கொடுப்பனவுகளின் இன்றைய பெறுமதி (ஏற்பிசைவு செய்யப்பட்ட பரிப்புக்கள் தொடர்பான கொடுப்பனவுகள் தவிர்ந்தவை) அவற்றுடன் தொடர்புபட்ட காசுப் பெறுவனவுகளின் இன்றைய பெறுமதியினை விட அதிகரித்தாக இருக்குமென எதிர்பார்க்கும். அவ்வாறான போது பரிப்பொன்று ஏற்பிசைவு செய்யப்பட வேண்டுமெனவும் அவ்வாறாயின் எவ்வாறு அளவிடப்பட வேண்டுமெனவும் தீரமானிக்க உரிமம் LKAS 37 ஏற்பாடுகள், உறுமுரிமைப் பரிப்புக்கள் மற்றும் உறுமுரிமைச் சொத்துக்கள் என்னும் நியமத்தினைப் பிரயோகிக்கும்.

**சீர்மதிப்பினை நம்பகரமாக தீர்மானிக்க முடியாமை**

**53. உரிமமொன்று தொடர்ச்சியான அடிப்படையில் முதலீட்டு ஆதனமொன்றின் சீர்மதிப்பினை நம்பகரமாக தீர்மானிக்க முடியுமென்ற மறுக்க முடியாத எடுகோள் ஒன்று உள்ளது. எனினும், விதிவிலக்காக சந்தர்ப்பங்களில், உரிமமொன்று முதன்முறையாக முதலீட்டு ஆதனமொன்றினைக் கொள்வனவு செய்யும் போது (அல்லது இருப்பிலுள்ள ஆதனமொன்று உபயோக மாற்றமொன்றின் பின்னர் முதன்முதலாக முதலீட்டு ஆதனமாக மாறுகின்ற போது) அந்த முதலீட்டு ஆதனத்தின் சீர்மதிப்பு தொடர்ச்சியான அடிப்படையில் நம்பகரமாக தீர்மானிக்கப்பட முடியாமைக்கான தெளிவான சான்றுகள் உள்ளன. இந்நிலை ஏற்படுவது, ஒப்பிடத்தகு சந்தை ஊடுசெயல்கள் அடிக்கடி நடைபெறாத போதும் சீர்மதிப்பிற்கான நம்பகரமான மாற்று மதிப்பீடுகள் (உதாரணமாக, கழிவீட்டுக் காசுப்பாய்வு எதிர்வு கூறல்களின் அடிப்படையில் அமைந்தவை) கிடைக்கப்பெறாத போது மட்டுமேயாகும். உரிமமொன்று நிர்மாணத்தின் கீழ் உள்ள முதலீட்டு ஆதனமொன்றின் சீர்மதிப்பு நம்பகரமாக தீர்மானிக்கப்பட இயலாதது ஆனால் அச் சீர்மதிப்பீடு நிர்மாணம் பூர்த்திடையும் போது நம்பகரமாக தீர்மானிக்கப்படக் கூடியதென தீர்மானிக்குமெனின் அது சீர்மதிப்பீடு நம்பகரமாக தீர்மானிக்க இயலுமாகும் வரை அல்லது நிர்மாணம் முழுமையடையும் வரை (எது முதலில்) நிர்மாணத்தின் கீழ் உள்ள அம் முதலீட்டு ஆதனத்தினை கிரயத்தில் அளவீடு செய்யும். உரிமமொன்று முதலீட்டு ஆதனமொன்றின் சீர்மதிப்பு (நிர்மாணத்தின் கீழ் அல்லாத மூலதன ஆதனம் தொடர்ச்சியான அடிப்படையில் நம்பகரமாக தீர்மானிக்கப்பட முடியாது எனின் உரிமம் LKAS 16 இன் கிரய மாதிரியினை <u>உரிமை கொள்ளப்பட்டுள்ள முதலீட்டு ஆதனத்துக்குப் பிரயோகித்து அல்லது குத்தகை பெறுனரால் பயன்பாட்டு உரிமைச் சொத்தாக வைத்திருக்கப்படும் முதலீட்டு ஆதனத்திற்கு SLFRS 16 இனைப் பிரயோகித்து</u> அம்முதலீட்டு ஆதனத்தை அளவிடும்). முதலீட்டு ஆதனத்தின ஒடிவுப் பெறுமதி பூச்சியமென அனுமானிக்கப்படும். உரிமம் LKAS 16 <u>அல்லது SLFRS 16</u> இனை முதலீட்டு ஆதன விற்பனை வரை உபயோகிக்கும்.**

53அ. உரிமமொன்று முன்பு கிரயத்தில் அளவீடு செய்யப்பட்ட நிர்மாணத்தின் கீழ் உள்ள முதலீட்டு ஆதனமொன்றின் சீர்மதிப்பு நம்பகமாக அளவிட இயலக் கூடியதாகுமெனின் அது அவ் ஆதனத்தினை சீர்மதிப்பில் அளவிடும். அவ் ஆதனத்தின் நிர்மாணம் முடிவுறும் போது சீர்மதிப்பானது நம்பகமாக அளவிடப்பட இயலுமென அனுமானிக்கப்படுகிறது. விடயம் இது அல்ல எனின் பந்தி 53 இன் பிரகாரம் சொத்தானது LKAS 16 இன் உபயோகித்து <u>உரிமை கொள்ளப்பட்டுள்ள முதலீட்டு ஆதனத்துக்குப் பிரயோகித்து அல்லது குத்தகை பெறுனரால் பயன்பாட்டு உரிமைச் சொத்தாக வைத்திருக்கப்படும் முதலீட்டு ஆதனத்திற்கு SLFRS 16 இனைப் பிரயோகித்து</u> ஆதனமானது கணிப்பீடு செய்யப்படும்.

53ஆ. நிர்மாணத்தின் கீழ் உள்ள முதலீட்டு ஆதனமொன்றின் சீர்மதிப்பு நம்பகரமாக அளவிடக் கூடியது என்பது மறுக்க முடியாததாகக்கூடும் என்ற அனுமானமானது ஆரம்ப ஏற்பிசைவின் போது மட்டுமே ஏற்படும். நிர்மாணத்தின் கீழ் உள்ள மூலதன ஆதன உருப்படி ஒன்றினை அதன் சீர்மதிப்பினை அளவிடும் உரிமமொன்று முழுமை பெற்ற மூலதன ஆதனத்தின் சீர்மதிப்பு நம்பகமாக தீர்மானிக்கப்பட இயலாதது என முடிவு செய்ய இயலாது போகலாம்.

54. முன்னைய பந்தியில் கூறப்பட்டுள்ள காரணங்களுக்காக LKAS 16 என்னும் நியமத்திற்கு அமைவாக கிரய மாதிரியமைப்பினை உபயோகித்து முதலீட்டு ஆதனமொன்றினை அளவிடுவதற்காக உரிமமொன்று நிர்ப்பந்திக்கப்படும் விதிவிலக்கான சந்தர்ப்பங்களின் போது அது நிர்மாணத்தின் கீழ் உள்ள முதலீட்டு ஆதனம் உட்பட அதன் ஏனைய சகல முதலீட்டு ஆதனங்களையும் சீர்மதிப்பில் அளவிடும். இவ்வாறான சந்தர்ப்பங்களில், ஒரு முதலீட்டு ஆதனத்திற்கு கிரய மாதிரியமைப்பினை உரிமமொன்று உபயோகிக்கக்கூடியதாக இருக்கின்ற போதிலும் எஞ்சிய ஒவ்வொரு ஆதனத்திற்கும் உரிமம் தொடர்ந்தும் சீர்மதிப்பு மாதிரியமைப்பினை உபயோகிக்கும்.

**55. உரிமமொன்று முதலீட்டு ஆதனமொன்றினை முன்னர் சீர்மதிப்பில் அளவிட்டிருப்பின் சந்தை ஊடுசெயல்கள் அடிக்கடி நடைபெறாமலோ அல்லது சந்தை விலைகள் அவ்வளவாக உடன் கிடைக்கப்பெறாமலோ இருந்தபோதிலும் அந்த ஆதனம் விற்கப்படும் வரையில் (அல்லது ஆதனம் உரிமையாளர் உறைகொள் ஆதனமாக மாறும் வரையில் அல்லது வியாபாரத்தின் சாதாரண நடவடிக்கையின் பகுதியாக பின்னர் விற்பனை செய்வதற்காக உரிமம் அந்த ஆதனத்தினை அபிவிருத்தி செய்ய ஆரம்பிக்கும் வரையில்) அது தொடர்ந்தும் அந்த ஆதனத்தினை சீர்மதிப்பிலேயே அளவிடும்.**

**கிரய மாதிரியமைப்பு**

56. SLFRS 5 என்னும் நியமததிறகு அமைவாக அளவடு செய்யப்படும்.

ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர் கிரய மாதிரியமைப்பினை தேர்வு செய்யும் உரிமமொன்று, முதலீட்டு ஆதனத்தைப் பின்வருமாறு அளவீடு செய்யும்:

(அ) விற்பனைக்காக வைத்திருக்கப்படுபவையாக வகைப்படுத்தப்படுத்தப்பட்ட, வதற்கான தேர்வு நிபந்தனையினை திருப்தி செய்யும் முதலீட்டு ஆதனங்கள் தவிர்ந்த (அல்லது விற்பனைக்காக வைத்திருக்கப்படுபவையாக வகைப்படுத்தப்பட்ட விற்பனைக் குழுமத்தில் உள்ளடக்கப்பட்ட) ஆதனங்களை SLFRS 5 *விற்பனைக்காக வைத்திருக்கப்படும் நடைமுறையல்லா சொத்துக்கள்* நியமத்துக்கு அமைவாக

(ஆ) SLFRS 5 நியமத்துக்கு அமைவாக விற்பனைக்காக வைத்திருக்கப்படுபவையாக அடையாளம் காணப்படாத மற்றும் குத்தகை பெறுனரால் பயன்பாட்டு உரிமை சொத்தாக வைத்திருக்கப்படுபவற்றுக்கு SLFRS 16 நியமத்துக்கு அமைவாக

(இ) ஏனைய சகல சந்தர்ப்பங்களிலும் LKAS 16 நியமத்திற்கு அமைவாக.

**மாற்றல்கள்**

**57 முதலீட்டு ஆதனங்களுக்கோ அல்லது முதலீட்டு ஆதனங்களிலிருந்தோ மேற்கொள்ளப்படும் மாற்றல்கள், கீழ்வருவனவற்றில் ஒன்றினால் சான்று பகரப்படும் உபயோக மாற்றங்களின் போது மாத்திரமே மேற்கொள்ளப்படும்:**

**(அ) முதலீட்டு ஆதனமாக இருந்து உரிமையாளர் உறைகொள் ஆதனமாக மாற்றுவதற்காக உரிமையாளர் உறைகொள் ஆரம்பம்**

**(ஆ) முதலீட்டு ஆதனமாக இருந்து தொக்குகளாக மாற்றுவதற்காக விற்பனை நோக்கிலான அபிவிருத்தியின் ஆரம்பம்**

**(இ) உரிமையாளர் உறைகொள் ஆதனத்திலிருந்து முதலீட்டு முடிவு அல்லது முதலீட்டு ஆதனமாக மாற்றுவதற்காக உரிமையாளர் உறைகொள்ளலின்**

**(ஈ) தொக்குகளிலிருந்து முதலீட்டு ஆதனமாக மாற்றுவதற்காக இன்னொரு சாராருக்கான தொழிற்பாட்டுக் குத்தகையின ஆரம்பம்**

(உ) (நீக்கப்பட்டுள்ளது)

58 விற்பனை நோக்கில் அபிவிருத்தி ஆரம்பிக்கப்படுவது போன்று சான்றாக காட்டப்படும் உபயோக மாற்றத்தின் போது மாத்திரமே உரிமமொன்று ஆதனமொன்றினை முதலீட்டு ஆதனத்திலிருந்து தொக்குகளாக மாற்ற வேண்டுமென பந்தி 57(ஈ) கேட்டுக்கொள்கின்றது. உரிமமொன்று அபிவிருத்தி செய்யாமலேயே முதலீட்டு ஆதனமொன்றினை விற்பனை செய்யத் தீர்மானிக்கும் போது அதனைத் தொக்காகக் கொள்ளாது அது எதிரிசைவு செய்யப்படும் வரையில் (நிதிநிலைமைக் கூற்றில் இருந்து நீக்கப்படும் வரையில்) அந்த ஆதனத்தினை தொடர்ந்தும் முதலீட்டு ஆதனமாகவே கொள்ளும் அதேபோல, உரிமமொன்று இருப்பிலுள்ள முதலீட்டு ஆதனமொன்றினை எதிர்காலத்திலும் தொடர்ந்தும் முதலீட்டு ஆதனமாக பயன்படுத்துவதற்காக மீள அபிவிருத்தி செய்ய ஆரம்பிக்குமேயாகில், அந்த ஆதனம் தொடர்ந்து முதலீட்டு ஆதனமாகவே இருப்பதுடன் அது மீள அபிவிருத்திக் காலத்தின் போது உரிமையாளர் உறைகொள் ஆதனமாக மீள வகைப்படுத்தப்படமாட்டாது.

59 உரிமொன்று, முதலீட்டு ஆதனமொன்றிற்கு சீர்மதிப்பு மாதிரியமைப்பினை உபயோகிக்கும் போது ஏற்படும் ஏற்பிசைவு மற்றும் அளவீட்டு விடயங்கள் தொடர்பாக பந்திகள் 60–65 இனைப் பிரயோகிக்கும். உரிமம் கிரய மாதிரியமைப்பினை, உபயோகிக்கும் போது முதலீட்டு ஆதனம், உரிமையாளர் உறைகொள் ஆதனம் மற்றும் தொக்குகளுக்கு இடையிலான மாற்றல்கள், மாற்றப்படும் ஆதனத்தின் முன் கொண்டு செல்கைத் தொகையினில் மாற்றத்தினை ஏற்படுத்தாமலிருப்பதுடன் அவை அளவீட்டு மற்றும் வெளிக்காட்டற் தேவைகளுக்காக ஆதனத்தின் கிரயத்தில் மாற்றத்தினை ஏற்படுத்தவும் மாட்டாது.

**60 சீர்மதிப்பில் முன் கொண்டு செல்லப்படும் முதலீட்டு ஆதனத்தினை உரிமையாளர் உறைகொள் ஆதனமாகவோ அல்லது தொக்காவோ மாற்றும் போது, LKAS 16 அல்லது LKAS 2 என்னும் நியமங்களுக்கு அமைவாக பின்னைய கணக்கீட்டுத் தேவைக்கான ஆதனத்தின் கருதப்படும் கிரயமானது உபயோக மாற்றம் ஏற்படும் திகதியில் அதன் சீர்மதிப்பாகும்.**

61 **உரிமையாளர் உறைகொள் ஆதனமொன்று சீர்மதிப்பில் முன் கொண்டு செல்லப்படும் முதலீட்டு ஆதனமொன்றாக மாறும் போது உரிமமொன்று, உபயோக மாற்றம் ஏற்படும் திகதி வரையில் <u>உரிமை கொள்ளப்பட்டுள்ள முதலீட்டு ஆதனத்துக்கு LKAS 16 இனைப் பிரயோகிக்கும் அல்லது குத்தகை பெறுனரால் பயன்பாட்டு உரிமைச் சொத்தாக வைத்திருக்கப்படும் முதலீட்டு ஆதனத்திற்கு SLFRS 16 இனைப் பிரயோகிக்கும்.</u> உரிமம் அந்தத் திகதியில் LKAS 16 என்னும் நியமத்திற்கு அமைவாக ஆதனத்தின் முன் கொண்டு செல்கைத் தொகைக்கும் அவ்வாறே அமைந்த அதன் சீர்மதிப்பிற்கும் இடையிலான எந்தவொரு வித்தியாசத்தினையும் LKAS 16 அல்லது <u>SLFRS 16</u> நியமங்களுக்கு அமைவாக ஓர் மீள்மதிப்பீடாகக் கொள்ளும்.**

62. உரிமையாளர் உறைகொள் ஆதனமொன்று சீர்மதிப்பில் முன் கொண்டு செல்லப்படும் முதலீட்டு ஆதனமொன்றாக மாறும் திகதி வரையில் அந்த ஆதனத்தினை (<u>அல்லது பயன்பாட்டு உரிமைச் சொத்தினை)</u> உரிமம் தேய்மானம் செய்வதுடன், ஏற்பட்டுள்ள எந்தவொரு சேத இழப்பு நட்டத்தினையும் ஏற்பிசைவு செய்யும். உரிமம் அந்தத் திகதியில் LKAS 16 என்னும் நியமத்திற்கு அமைவாக ஆதனத்தின் முன் கொண்டு செல்கைத் தொகைக்கும் அதே முறையில் அறியப்பட்ட அதன் சீமதிப்புக்கும் இடையேயான எந்தவொரு வித்தியாசத்தினையும் LKAS 16 <u>அல்லது SLFRS 16</u> நியமத்திற்கு அமைவாக ஒரு மீள்மதிப்படாகக் கொள்ளும். அதாவது:

(அ) ஆதனத்தின் முன் கொண்டு செல்கைத் தொகையில் ஏற்படும் எந்தவொரு வீழ்ச்சியும் இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும். எனினும், அந்த ஆதனத்திற்கான மீள் மதிப்பீட்டு மிகையினில் உள்ளடக்கப்பட்டுள்ள தொகையின் அளவு வரையில் வீழ்ச்சியானது வேறுபரந்த வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்படுவதுடன் உரிமத்தினுள்ளே மீள் மதிப்பீட்டு மிகையினை குறைக்கும்.

(ஆ) முன் கொண்டு செல்கைத் தொகையில் விளையும் எந்தவொரு அதிகரிப்பும் கீழ்வருமாறு கணக்கிற் கையாளப்படும்:

(i) அந்த ஆதனத்திற்கான சேத இழப்பு நட்டமொன்றினை அந்த அதிகரிப்பு எதிர்ப்பதிவு செய்யும் அளவிற்கு, இந்த அதிகரிப்பு இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும். இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும் தொகையானது. சேத இழப்பு நட்டம் ஏற்பிசைவு செய்யப்படாது இருக்குமேயாகில், முன் கொண்டு செல்கைத் தொகையினை தீர்மானித்திருக்கப்படக்கூடிய முன் கொண்டு செல்கைத் தொகைக்கு (தேய்மானம் கழித்த பின்னர்) மீண்டும் கொண்டுவருவதற்கு தேவையான தொகையினைவிட அதிகரித்ததாக இராது.

(ii) அதிகரிப்பின் ஏதாவது எஞ்சிய பகுதி வேறு பரந்த வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்படுவதுடன் மீள்மதிப்பட்டு மிகையினை உரிமத்தின் உள்ளே அதிகரிக்கும். முதலீட்டு ஆதனத்தினை பின்னர் விற்பனை செய்யும் போது உரிமையாண்மையில் உள்ளடக்கப்பட்டுள்ள மீள மதிப்பீட்டு மிகையானது நிறுத்திவைக்கப்பட்ட வருமானத்திற்கு மாற்றப்படக்கூடும். மீள் மதிப்பீட்டு மிகையிலிருந்து கைக்கொள் வருமானத்திற்கான மாற்றல், இலாபம் அல்லது நட்டததிற்கு ஊடாக மேற்கொள்ளப்படமாட்டாது.

**63. தொக்கிலிருந்து சீர்மதிப்பில் முன்கொணரப்படும் முதலீட்டு ஆதனத்திற்கான மாற்றமொன்றின் போது, அந்தத் திகதியில் அந்த ஆதனத்தின் சீர்மதிப்பிற்கும் அதன் முன்னைய முன் கொண்டு செல்கைத் தொகைக்கும் இடையிலான எந்தவொரு வித்தியாசமும் இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்.**

64. தொக்கிலிருந்து சீர்மதிப்பில் முன்கொணரப்படவுள்ள முதலீட்டு ஆதனத்திற்கான மாற்றல்களின் கணக்கீடு, தொக்குகளின் விற்பனை தொடர்பான கணக்கட்டுடன் இசைவான கையாளுகை அடிபபடையில் அமையும்.

**65. சீர்மதிப்பில் முன்கொணரப்படவுள்ள சுயமாக நிர்மாணிக்கப்படும் ஆதனமொன்றின் நிர்மாணம் அல்லது அபிவிருத்தியினை உரிமமொன்று பூர்த்தி செய்யும் போது, அந்த திகதியில் அந்த ஆதனத்தின் சீர்மதிப்பிற்கும் அதன் முன்னைய முன் கொண்டு செல்கைத் தொகைக்கும் இடையிலான எந்தவொரு வித்தியாசமும் இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்.**

### விற்றொழித்தல்கள்

**66. முதலீட்டு ஆதனமொன்று விற்கப்படும் பொழுதோ அல்லது முதலீட்டு ஆதனம் பாவனையிலிருந்து நிரந்தரமாக மீளப் பெறப்படுவதுடன் அதன் விற்பனையிலிருந்து எதிர்காலப் பொருளியற் பயன்கள் கிடைக்கப்படாது என எதிர்பார்க்கப்படும் பொழுதோ அந்த எதிரிசைவு செய்யப்படும். (அதாவது நிதி நிலமைக் கூற்றிலிருந்து நீக்கப்படும்)**

67. முதலீட்டு ஆதனமொன்றின் விற்றொழித்தல் ஆனது விற்பனையின் மூலமோ அல்லது நிதிக் குத்தகை ஒப்பந்தமொன்றினை ஏற்படுத்திக் கொள்வதன் மூலமோ அடையப்பெறலாம். முதலீட்டு ஆதனமொன்றின் விற்கப்படும் திகதியினை தீர்மானித்தலில் பொருளின் விற்பனையிலிருந்தான வருமானத்தினை ஏற்பிசைவு செய்வதற்கான LKAS 18 என்னும் நியமத்தில் உள்ள தேர்வு நிபந்தனைகளைப் பிரயோகிப்பதுடன் LKAS 18 என்னும் நியமத்தின் பின்னிணைப்பிலுள்ள தொடர்புடைய வழிகாட்டியினையும் கவனத்திற் கொள்ளும். நிதிக் குத்தகை மற்றும் விற்பனை செய்து குத்தகைக்கு மீளப்பெறல் ஆகியவற்றில் பிரவேசிப்பதன் மூலம் ஏற்படுத்தப்படும் விற்பனைக்கு SLFRS 16 பிரயோகிக்கப்படும்.

68. பந்தி 16 இல் கூறப்பட்டுள்ள ஏற்பிசைவுத் தத்துவத்திற்கு அமைவாக, உரிமம் ஒன்று முதலீட்டு ஆதனமொன்றிற்கான பிரதியீட்டுப் பாகமொன்றின் கிரயத்தினை சொத்தின் முன் கொணர்வுத் தொகையில் ஏற்பிசைவு செய்யுமேயாகில், அது பிரதியீட்டப் பாகத்தின்

முன்கொணரற் தொகையினை எதிரிசைவு செய்யும். கிரமய மாதிரியமைப்பினை உபயோகித்து கணக்கிட செய்யப்படும் முதலீட்டு ஆதனம் ஒன்றினைப் பொறுத்த மட்டில் பிரதியீடு செய்யப்படும் பாகமொன்று வேறாக தேய்மானம் செய்யப்படும் பாகமொன்றாக அமையாது இருக்கக்கூடும். உரிமமொன்றினால் பிரதியீட்டுப் பாகத்தின் முன் கொணர்வுத் தொகையினை தீர்மானித்தல் நடைமுறைச் சாத்திய மாற்றதாக இருப்பின் அது பிரதியீட்டுப் பாகத்தின் முன்கொணர்வுத் தொகையினை தீர்மானித்தல் நடைமுறைச் சாத்தியமற்றதாக இருப்பின் அது பிரதியீட்டுப் பாகத்தின் கிரயத்தினை கொள்வனவு செய்யப்பட்ட போது அல்லது நிர்மாணிக்கப்பட்ட போது அந்த பிரதியீட்டுப் பாகத்தின் கிரயத்தின் காட்டியாக உபயோகிக்கக்கூடும். சீர்மதிப்பு மாதிரியமைப்பின் கீழ் முதலீட்டு ஆதனத்தின் சீர்மதிப்பானது பிரதியீடு செய்யப்பட வேண்டியுள்ள பாகம் அதன் பெறுமதியினை இழந்துள்ளமையினை ஏற்கனவே பிரதிபலிக்கக்கூடும். வேறு விடயங்களில் பிரதியீட்டுப் பாகத்திற்கு எவ்வளவு சீர் பெறுமதி குறைக்கப்பட வேண்டுமென்பதனை தீர்மானித்தல் சிரமமானதாக இருக்கக்கூடும். பிரதியீட்டுப் பாகத்திற்காக சீர்மதிப்பினை குறைப்பது நடைமுறைச் சாத்திய மற்றதாக இருப்பின் ஒரு மாற்று வழியானது சொத்தின் முன்கொணரற் தொகையில் பிரதியீட்டுப் பாகத்தின் கிரயத்தினை உட்படுத்தி அதன் பின்னர் பிரதியீடாக அமையாத சேர்ப்பனவுகளுக்காக தேவைப்படும் வகையில் சீர்மதிப்பினை மீள்மதிப்பீடு செய்வதாகும்.

**69. முதலீட்டு ஆதனத்தின் விலக்கல் அல்லது விற்றொழிப்பினால் எழும் இலாபம் அல்லது நட்டங்கள், நிகர விற்றொழிப்பு வருமானத்திற்கும் சொத்தின் முன்கொணரற் தொகைக்கும் இடையிலான வித்தியாசமாகக் கொள்ளப்படுவதுடன் விலக்கல் அல்லது விற்றொழிப்பு நடைபெறும் காலத்தின் இலாபம் அல்லது நட்டத்தில் (விற்பனை செய்து குத்தகைக்கு மீளப்பெறுவது தொடர்பில் SLFRS 16) என்னும் நியமத்தில் வேறுவிதமாக கேட்கப்பட்டிருந்தாலேயன்றி) ஏற்பிசைவு செய்யப்படும்.**

70. முதலீட்டு ஆதனமொன்றின் விற்றொழிப்பிலிருந்து பெறப்பட வேண்டிய பதிலிறுக்கியானது ஆரம்பத்தில் சீர்மதிப்பில் ஏற்பிசைவு செய்யப்படும். குறிப்பாக, முதலீட்டு ஆதனமொன்றிற்கான கொடுப்பனவு பின்போடப்படுமேயாயில் பெறப்படும் பதிலிறுக்கியானது ஆரம்பத்தில் சமமான காசு விலையில் ஏற்பிசைவு செய்யப்படும். பதிலிறுக்கியின் பெயரளவுப் பெறுமதிக்கும் சமானமான காசு விலைக்கும் இடையிலான வித்தியாசம் LKAS 18 க்கு வட்டி வருமானமாக ஏற்பிசைவு செய்யப்படும்.

71. முதலீட்டு ஆதனத்தினை விற்றொழித்த பின்னர் எஞ்சியிருக்கும் பரிப்புக்கள் எவற்றிற்கும் உரிமமொன்று LKAS 37 இனையோ அல்லது வேறு பொருத்தமான இலங்கைக் கணக்கட்டு நியமத்தினையோ பிரயோகிக்கும்.

**72. சேத இழப்புக்குள்ளான, இழக்கப்பட்ட அல்லது கைவிடப்பட்ட முதலீட்டு ஆதனத்திற்காக மூன்றாம் நபர்களிடமிருந்து பெறப்படும் நட்ட ஈடு அந்த நட்ட ஈடு பெறப்படக் கூடியதாக வரும் போது இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்.**

73. முதலீட்டு ஆதனத்தின் சேத இழப்புக்கள் அல்லது நட்டங்கள் மூன்றாம் பகுதியினரிடமிருந்து கிடைக்கப் பெறவேண்டிய நட்டஈட்டுடன் தொடர்புபட்ட கோரல்கள் அல்லது கொடுப்பனவுகள் மற்றும் பிரதியீட்டுச் சொத்துக்களின் எந்தவொரு பின்னைய கொள்வனவு அல்லது நிர்மாணம் ஆகியன பிரதான பொருளியல் நிகழ்வுகளாக அமைவதுடன் அவை கீழ்வருமாறு வேறாகக் கணக்கிற் கொள்ளப்படும்:

(அ) முதலீட்டு ஆதனத்தின் சேத இழப்புக்கள் LKAS 36 என்னும் நியமத்திற்கு அமைவாக ஏற்பிசைவு செய்யப்படும்.

(ஆ) முதலீட்டு ஆதனமொன்றின் விலக்குதல் அல்லது விற்றொழிப்பானது இந்த நியமத்தின் பந்திகள் 66–71க்கு அமைவாக ஏற்பிசைவு செய்யப்படும்.

(இ) சேத இழப்பிற்கு உள்ளான, இழந்த அல்லது கைவிடப்பட்ட முதலீட்டு ஆதனத்திற்காக மூன்றாம் பகுதியினரிடமிருந்து பெறப்படும் நட்ட ஈடு அது பெறப்பட

வேண்டியதாக மாறும் பொழுது இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும் மற்றும்

(ஈ) பிரதியீடுகளாக பழைய நிலைக்கு கொண்டுவரப்படும் அல்லது கொள்வனவு செய்யப்படும் அல்லது நிர்மாணிக்கப்படும் சொத்துக்களின் கிரயமானது இந்த நியமத்தின் பந்திகள் 20–29 க்கு அமைவாக தீர்மானிக்கப்படும்.

## வெளிக்காட்டல்கள்

### சீர்மதிப்பு மாதிரியமைப்பும் கிரய மாதிரியமைப்பும்

74. கீழே தரப்பட்டுள்ள வெளிக்காட்டல்கள் SLFRS 16 இல் கேட்கப்பட்டுள்ள வெளிக்காட்டல்களுக்கு மேலதிகமாக பிரயோகிக்கப்படும். SLFRS 16 க்கு அமைவாக முதலீட்டு ஆதனமொன்றின் உரிமையாளர் அது ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்ட குத்தகை பற்றி குத்தகை தருனரின் வெளிக்காட்டல்களை வழங்கும். நிதிக்குத்தகை அல்லது உரிமைச் சொத்தாக வைத்திருக்கும் குத்தகை பெறுனர் உரிமமொன்று ஒப்பந்தம் செய்து கொண்ட நிதிக்குத்தகை தொடர்பில் குத்தகை பெறுனரின் தேவைப்படுத்தப்படும் வெளிக்காட்டல்களையும் தொழிற்பாட்டுக் குத்தகை தொடர்பில் குத்தகை தருனரின் வெளிக்காட்டல்களையும் வழங்கும்.

**75. உரிமமொன்று கீழ்வருவனவற்றினை வெளிக்காட்டும்:**

**(அ) அது சீர்மதிப்பு மாதிரியமைப்பினையா அல்லது கிரய மாதிரியமைப்பினையா பிரயோகிக்கின்றது என்பது பற்றி.**

**(ஆ)** (நீக்கப்பட்டுள்ளது)

**(இ) வகைப்படுத்தல் சிரமமான போது (பந்தி 14 இனைப் பார்க்கவும்) முதலீட்டு ஆதனத்தினை உரிமையாளர் உறைகொள் ஆதனம் மற்றும் வியாபாரத்தின் ஒரு சாதாரண செயன்முறையாக விற்பனைக்காக வைத்திருக்கும் ஆதனம் ஆகியவற்றிலிருந்து வேறுபடுத்துவதற்காக அது உபயோகிக்கும் தேர்வு நிபந்தனை.**

**(ஈ)** (நீக்கப்பட்டுள்ளது)

**(உ) மதிப்பீட்டிற்கு உள்ளாகும் முதலீட்டு ஆதனத்தின் அமைவிடம் மற்றும் வகை பற்றிய அண்மைகால அனுபவத்தினைக் கொண்டுள்ளவரும் அங்கீகரிக்கப்பட்டதும் தொடர்புடையதுமான தொழில்சார் தகமையினைக் கொண்டுள்ளவருமான சுயாதீன மதிப்பீட்டாளரொருவரின் மதிப்பீட்டின் அடிப்படையினை முதலீட்டு ஆதனத்தின் சீர்மதிப்பில் (நிதிக்கூற்றுக்களில் அளவிடப்பட்ட அல்லது வெளிக்காட்டப்பட்டவாறு) எந்த அளவிற்கு உபயோகிக்கப்பட்டது என்பது பற்றி**

**(ஊ) கீழ்வருவனவற்றிற்காக இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகைகள்:**

**(i) முதலீட்டு ஆதனத்திலிருந்தான வாடகை வருமானம்**

**(ii) அந்தக் காலத்தின் போது வாடகை வருமானத்தினை பிறப்பாக்கும் முதலீட்டு ஆதனத்திலிருந்து எழும் நேரடி தொழிற்பாட்டுச் செலவுகள். (திருத்த மற்றும் பராமரிப்புச் செலவுகள் உள்ளடங்கலாக)**

**(iii) அந்தக் காலத்தின் போது வாடகை வருமானத்தினை பிறப்பிக்காத முதலீட்டு ஆதனத்திலிருந்து எழும் நேரடி தொழிற்பாட்டுச் செலவுகள். (திருத்த மற்றும் பராமரிப்புச் செலவுகள் உள்ளடங்களலாக)**

(iv) இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்ட கிரய மாதிரியமைப்பு உபயோகிக்கப்படும் சொத்துக்களின் குழாத்திலிருந்து சீர்மதிப்பு மாதிரியமைப்பு உபயோகிக்கப்படும் சொத்துக்களின் குழாத்திற்கு மேற்கொள்ளப்படும் முதலீட்டு ஆதனத்தின் விற்பனையினால் எழும் சீர்மதிப்பின் திரள் மாற்றம் (பந்தி 32(இ)யினைப் பார்க்கவும்)

(எ) முதலீட்டு ஆதனத்தின் அல்லது விற்றொழித்தலிலிருந்து எழும் வருமானத்தினையும் பெறுவனவுகளையும் அனுப்புதலின் தேறுந்தன்மை தொடர்பான கட்டுப்பாடுகளின் உளதாம்தன்மையும் கடப்பாடுகள்.

(ஏ) முதலீட்டு ஆதனத்தினை கொள்வனவு செய்தல், நிர்மாணித்தல் அல்லது அபிவிருத்தி செய்தல் தொடர்பான அல்லது திருத்துதல், பராமரித்தல் அல்லது மேன்மைப்படுத்தல் தொடர்பான ஒப்பந்த ரீதியிலான கடப்பாடுகள்.

சீர்மதிப்பு மாதிரியமைப்பு

76 பந்திகள் 33 – 55 களில் கூறப்பட்டுள்ள சீர்மதிப்பு மாதிரியமைப்பினை பிரயோகிக்கும் உரிமமொன்று பந்தி 75 இல் கேட்கப்பட்டுள்ள வெளிக்காட்டல்களுக்கு மேலதிகமாக கீழ்வருவனவற்றினைக் காட்டி காலத்தின் ஆரம்பத்திலும் இறுதியிலும் முதலீட்டு ஆதனத்தின் முன்கொணரற் தொகைகளுக்கு இடையிலான கணக்கிணக்கத்தினை வெளிக்காட்டும்:

(அ) கொள்வனவுகளிலிருந்து விளையும் சேர்ப்பனவுகள் மற்றும் சொத்தொன்றின் முன்கொணரற் தொகையில் ஏற்பிசைவு செய்யப்பட்ட பின்னைய செலவினங்களிலிருந்து விளையும் வெவ்வேறாக வெளிக்காட்டும் வகையில் அமைந்த சேர்ப்பனவுகள்

(ஆ) வணிக இணைப்புக்கள் மூலம் மேற்கொள்ளப்படும் சுவகாரங்களிலிருந்து ஏற்படும் சேர்ப்பனவுகள்

(இ) SLFRS 5 க்கு அமைவாக விற்பனைக்காக வைத்திருக்கப்பட்டவையாக வகைப்படுத்தப்பட்ட சொததுக்களும் விற்பனைக்காக வைத்திருக்கப்படுவதாக வகைப்படுத்தப்பட்டு விற்பனைக் குழுமத்தில் உள்ளடக்கப்பட்ட சொத்துக்களும் ஏனைய விற்பனைகளும்

(ஈ) சீர்மதிப்பு செம்மையாக்கங்களிலிருந்தான நிகர இலாபங்கள் அல்லது நட்டங்கள்

(உ) நிதிக் கூற்றுக்களை வேறுபட்ட முன்னிலைப்படுத்தல் நாணய அலகிற்கு மாற்றுவதனாலும் அந்நிய தொழிற்பாடொன்றினை அறிக்கையிடும் உரிமத்தின் முன்னிலைப்படுத்தல் நாணய அலகிற்கு மாற்றுவதனாலும் ஏற்படும் நிகர நாணய மாற்று வேறுபாடுகள்

(ஊ) தொக்குகள் மற்றும் உரிமையாளர் உறைகொள் ஆதனத்திற்கும் அவற்றிலிருந்தும் மேற்கொள்ளப்படும் மாற்றல்கள்.

(எ) ஏனைய மாற்றங்கள்.

77 முதலீட்டு ஆதனத்திற்காக பெறப்பட்ட மதிப்பீடொன்று நிதிக்கூற்றுக்களின் தேவைப்பாடுகளுக்காக கணிசமான அளவில் செம்மையாக்கப்படும் பொழுது, உதாரணமாக, பந்தி 50 இல் விபரிக்கப்பட்டவாறு வெவ்வேறாக ஏற்பிசைவு செய்யப்பட்ட சொத்துக்களின் அல்லது பரிப்புக்களின் இரு தடவைக் கணக்கீட்டினைத் தவிர்க்கும் பொருட்டு, உரிமமானது பெறப்பட்ட மதிப்பீட்டிற்கும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள செம்மையாக்கப்பட்ட மதிப்பீட்டிற்கும் இடையிலான கணக்கிணக்கத்தினை வெளிக்காட்டுவதுடன் திருப்பிக் கூட்டப்பட்ட ஏற்பிசைவு செய்யப்பட்ட குத்தகைக் கடப்பாடுகள் பரிப்புக்கள் ஏதுமிருப்பின் அவற்றின் மொத்தத் தொகையுடன் வேறு ஏதாவது கணிசமான செம்மையாக்கங்கள் இருப்பின் அவற்றினை வேறாகக் காட்டுதல் வேண்டும்.

**78** **பந்தி 53 இல் கூறப்பட்டுள்ள விதிவிலக்கான சந்தர்ப்பங்களில், உரிமமொன்று LKAS 16 இல் கூறப்பட்டுள்ள கிரய மாதிரியமைப்பினை உபயோகித்து அல்லது SLFRs 16 க்கு இணக்கமாக முதலீட்டு ஆதனத்தினை அளவிடும் போது, பந்தி 76 இனால் கேட்கப்பட்டுள்ள கணக்கிணக்கமானது அந்த முதலீட்டு ஆதனம் தொடர்புபட்ட தொகைகளை ஏனைய முதலீட்டு ஆதனங்களுடன் தொடர்புபட்ட தொகைகளிலிருந்து வேறாக வெளிக்காட்டுதல் வேண்டும். அத்துடன் உரிமமானது கீழ்வருவனவற்றினையும் வெளிக்காட்டும்:**

**(அ)** **முதலீட்டு ஆதனத்தின் விபரம்**

**(ஆ)** **சீர்மதிப்பினை ஏன் நம்பகரமாக தீர்மானிக்க முடியாது இருக்கின்றது என்பதற்கான விளக்கம்**

**(இ)** **சாத்தியமான இடத்து, சீர்மதிப்பு அனேகமாக அமையக்கூடிய சாத்தியத்தினைக் கொண்ட மதிப்பீடுகளின் வீச்சம்**

**(ஈ)** **சீர்மதிப்பில் முன் கொணரப்படாத முதலீட்டு ஆதனத்தின் விற்பனையின் போது:**

**(i)** **உரிமமானது சீர்மதிப்பில் முன் கொணரப்படாத முதலீட்டு ஆதனத்தினை விற்பனை செய்துள்ளது என்ற உண்மை**

**(ii)** **விற்பனை நேரத்தின் போது அந்த முதலீட்டு ஆதனத்தின் முன் கொண்டு செல்கைத் தொகை மற்றும்**

**(iii)** **ஏற்பிசைவு செய்யப்பட்ட இலாப அல்லது நட்ட தொகை**

கிரய மாதிரியமைப்பு

**79** **பந்தி 75 இல் கேட்கப்பட்டுள்ள வெளிக்காட்டல்களுக்கு மேலதிகமாக பந்தி 56 இன் படி கிரய மாதிரியமைப்பினைப் பிரயோகிக்கும் உரிமமொன்று கீழ்வருவனவற்றினை வெளிக்காட்டும்:**

**(அ)** **உபயோகிக்கப்பட்டுள்ள தேய்மான முறைகள்**

**(ஆ)** **பயன்தரு ஆயட்காலங்கள் அல்லது உபயோகிக்கப்பட்ட தேய்மான விகிதங்கள்**

**(இ)** **மொத்த முன்கொணரந் தொகையும் காலத்தின் ஆரம்பந்திலும் இறுதியிலும் திரள் தேய்மானமும் (திரள் சேத இழப்பு நட்டங்களுடன் கூடிய)**

**(ஈ)** **கீழ்வருவனவற்றினைக் காட்டும் வண்ணம் காலத்தின் ஆரம்பத்திலும் இறுதியிலும் முதலீட்டு ஆதனத்தின் முன்கொண்டு செல்கைத் தொகைகளின் கணக்கிணக்கம்:**

**(i)** **கொள்வனவினால் ஏற்படும் சேர்ப்பனவுகள் மற்றும் சொத்தொன்றாக ஏற்பிசைவு செய்யப்பட்ட பின்னைய செலவுகளினால் ஏற்படும் சேர்ப்பனவுகள் ஆகியவறறினை வெவ்வேறாக வெளிக்காட்டும் வகையில் சேரப்பனவுகள்**

**(ii)** **வணிக இணைப்புக்கள் மூலம் கொள்வனவுகளிலிருந்து எழும் சேர்ப்பனவுகள்**

**(iii)** **SLFRS 5 ற்கு அமைவாக விற்பனைக்காக வைத்திருக்கப்படுபவையாக வகைப்படுத்தப்பட்ட அல்லது விற்பனைக்காக வைத்திருக்கப்படுபவையாக வகைப்படுத்தப்பட்ட விற்பனைகளும் விற்பனைக் குழுமத்தில் உள்ளடக்கப்பட்ட சொத்துக்களும்**

**(iv)** **தேய்மானம்**

(v) LKAS 36 இற்கு அமைவாக அந்தக் காலத்தின் போது ஏற்பிசைவு செய்யப்பட்ட சேத இழப்பு நட்டத் தொகையும் எதிர்ப்பதிவு செய்யப்பட்ட சேத இழப்பு நட்டத் தொகையும்

(vi) நிதிக் கூற்றுக்களை வேறுபட்ட முன்னிலைப்படுத்தல் நாணய அலகிற்கு மாற்றுவதனாலும் அந்நிய தொழிற்பாடொன்றினை அறிக்கையிடு உரிமத்தின் முன்னிலைப்படுத்தல் நாணய அலகிற்கு மாற்றுவதனாலும் எழும் நாணய மாற்று வேறுபாடுகள்

(vii) தொக்குகள் மறறும் உரிமையாளர் உறைகொள் ஆதனம் ஆகியவற்றிற்கும் அவற்றிலிருந்துமான மாற்றல்கள் மற்றும்

(viii) ஏனைய மாற்றங்கள் மற்றும்

(உ) முதலீட்டு ஆதனத்தின் சீர்மதிப்பு பந்தி 53 இல் விபரிக்கப்பட்டுள்ள விதிவிலக்கான சந்தர்ப்பங்களில், உரிமமொன்று முதலீட்டு ஆதனத்தின் சீர்மதிப்பினை நம்பகரமாக அளவிட முடியாததாக உள்ள போது அது கீழ்வருவனவற்றினை வெளிக்காட்டும்:

(i) முதலீட்டு ஆதனம் பற்றிய விபரம்

(ii) சீர்மதிப்பினை ஏன் நம்பகரமாக தீர்மானிக்க முடியாது இருக்கின்றது என்பதற்கான விளக்கம் மற்றும்

(iii) சாத்தியமான இடத்து, சீர்மதிப்பு அனேகமாக அமையக்கூடிய சாத்தியத்தினைக் கொண்ட மதிப்படுகளின் வீச்சம்

## நிலைமாறுகை ஏற்பாடுகள்

சீர்மதிப்பு மாதிரியமைப்பு

80 முன்னர் LKAS 40 இனை பிரயோகித்து பின்னர் முதற் தடவையாக தொழிற்பாட்டுக் குத்தகையின் கீழ் தகைமை பெற்ற சில அல்லது எல்லா ஆதனங்கள் மேலான நாட்டங்களையும் முதலீட்டு ஆதனமாக வகைப்படுத்தி கணக்கிற் கொள்ளத் தீர்மானிக்கும் உரிமமொன்று அந்தத் தீர்மானத்தின் தாக்கத்தினை அந்த தீர்மானம் முதலில் மேற்கொள்ளப்படும் காலத்திற்கான நிறுத்தி வைத்த வருமான ஆரம்ப மீதியில் செம்மையாக்கமொன்றாக ஏற்பிசைவு செய்யும். அத்துடன்:

(அ) உரிமமானது முன்னைய காலங்களில் அந்த ஆதன நாட்டங்களின் சீர்மதிப்பினை பகிரங்கமாக (நிதிக்கூற்றுகளிலோ அல்லது வேறு விதமாகவோ) முன்னர் வெளிக்காட்டியிருப்பின் (பந்தி 5 மற்றும் பந்திகள் 36 – 52 இலுள்ள வழிகாட்டிகளில் கூறப்பட்டுள்ள சீர்மதிப்பிற்கான பொருள் வரையறையினை திருப்தி செய்யும் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட) உரிமமானது கீழ்வருவனவற்றினை மேற்கொள்ளத் தேவைப்படுத்தப்பட்டிராத போதிலும் அவற்றினை மேற்கொள்ளல் ஊக்குவிக்கப்படுகின்றது:

(i) அவ்வாறான சீர்மதிப்பு பகிரங்கமாக வெளிக்காட்டப்பட்ட முன்னிலை ப்படுத்தப்பட்ட மிக முந்திய காலத்திற்கான கைக்கொள் இலாப ஆரம்ப மீதியினை செம்மை செய்வதற்கு அத்துடன்

(ii) அந்தக் காலங்களுக்கான ஒப்பீட்டுத் தகவல்களை திருத்திக் கூறுவதற்கு

(ஆ) உரிமமானது மேலே (அ) வில் விபரிக்கப்பட்டுள்ள தகவல்களை முன்னர் பகிரங்கமாக வெளிக்காட்டியிராத இடத்து அது ஒப்பீட்டுத் தகவல்களைத் திருத்திக் கூறாது அந்த உண்மையினை வெளிக்காட்டும்.

81 இந் நியமம் LKAS 8 இல் கேட்கப்பட்டுள்ள கணக்கியற் கையாளுகையிலிருந்து வேறுபட்ட கணக்கியற் கையாளுகையினைத் தேவைப்படுத்துகின்றது. LKAS 8 ஒப்பீட்டுத் தகவல்களைத் திரும்பக்கூறுதல் நடைமுறைச் சாத்தியமற்றதாக இருந்தாலன்றி அத் தகவல்களை திரும்பக் கூற வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றது.

82 உரிமமொன்று முதன் முதலாக இந்த நியமத்தினை பிரயோகிக்கும் போது, கைக்கொள் வருமானத்தின் ஆரம்பமீதிக்கான செம்மையாக்கம் முதலீட்டு ஆதனத்திற்காக மீள் மதிப்பீட்டு மிகையில் வைத்திருக்கப்படும் எந்தவொரு தொகையினதும் மீள்வகைப்படுத்தலினை உள்ளடக்கும்.

**கிரய மாதிரியமைப்பு**

83 உரிமமொன்று முதன் முதலாக இந்த நியமத்தினைப் பிரயோகித்து கிரய மாதிரி அமைப்பினை உபயோகிக்க தேர்வு செய்யும் போது கணக்கீட்டுக் கொள்கைகளில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு மாற்றத்திற்கும் LKAS 8 பிரயோகிக்கப்படும். கணக்கீட்டுக் கொள்கை மாற்றத்தின் தாக்கம் முதலீட்டு ஆதனத்திற்காக மீள்மதிப்பீட்டு மிகையில் வைததிருககபபடும் எந்தவொரு தொகையினதும் மீள் வகுப்பாக்கத்தினை உள்ளடக்கும்.

**84 சொத்துககளின் பரிமாற்ற ஊடுசெயலொன்றின் போது சுவீகரிக்கப்படும் முதலீட்டு ஆதனமொன்றின் ஆரம்ப அளவீடு பற்றி பந்திகள் 27 – 29 இன் தேவைப்பாடுகள் அந்தத் திகதியிலிருந்து எதிர்கால ஊடுசெயல்களுக்கு மாத்திரம் பிரயோகிக்கப்படும்.**

**வணிக இணைப்புக்கள்**

**84அ செத்தெம்பர் 2014 இல் வழங்கப்பட்ட *SLFRS நியமங்களுக்கான மேம்பாடுகள்* திருத்திய பந்தி 14அ மற்றும் பந்தி 6க்கு மன்பான ஓர் தலையங்கம். உரிமம் ஒன்று இத் திருத்தங்களை எதிர்கால விளைவுள்ள வகையில் அத் திருத்தங்களைப் பிரயோகிக்கும் முதலாவது காலப்பகுதியின் ஆரம்பத்தில் இருந்து முதலீட்டு ஆதனங்களின் கையகப்படுத்தல்களுக்குப் பிரயோகிக்கும். இதன் விளைவாக, முன்னயை காலங்களில் இடம்பெற்ற முதலீட்டு ஆதனங்களின் கையகப்படுத்தல்கள் சீராக்கப்பட வேண்டியதில்லை. எனினும், முன்னைய ஊடுசெயல்களுக்கு இதனைப் பிரயோகிப்பதற்கான தகவல்கள் உரிமத்துக்குக் கிடைக்கத் தக்கதாக இருந்தால் மாத்திரம் உரிமம் இத் திருத்தங்களை முதலாவது பிரயோகத் திகதியின் ஆரம்பத்திற்கு முன்னர் இடம்பெற்ற தனித்தனியான முதலீட்டு சொத்துக்களின் கையகப்படுத்தல்களுக்குப் பிரயோகிக்கத் தெரிவு செய்யலாம்.**

**SLFRS 16**

84ஆ SLFRS 16 நியமத்தினை மற்றும் அது தொடர்பபட்ட இந் நியமத்தின் திருத்தங்களைப் பிரயோகிக்கும் உரிமம் ஒன்று, முதன்முறையாக பின்னிணைப்பு C இலுள்ள நிலைமாறுகை ஏற்பாடுகளை அதன் பயன்பாட்டு உரிமைச் சொத்தாக வைத்திருக்கப்படும் முதலீட்டு ஆதனங்களுக்குப் பிரயோகிக்கும்.

**அமுலுக்கு வரும் திகதி**

85 உரிமமொன்று இந்த நியமத்தினை 2012, சனவரி 1 ஆம் திகதியன்றோ அல்லது அத் திகதிக்குப் பின்னரோ ஆரம்பமாகும் வருடாந்தக் காலங்களுக்கு பிரயோகிக்கும். முன்னைய பிரயோகம் ஊக்குவிக்கப்படுகின்றது. உரிமமொன்று இந்த நியமத்தினை 2012, சனவரி 1 ஆம் திகதிக்கு வேண்டும். முன்னர் ஆரம்பிக்கும் காலமொன்றிற்கு பிரயோகிக்குமேயாகில் அநத உண்மை வெளிக்காட்டப்படல் வேண்டும்

85அ (நீக்கப்பட்டுள்ளது)

85ஆ (நீக்கப்பட்டுள்ளது)

85இ ஏப்பிரல், 2013 இல் வழங்கப்பட்ட SLFRS 13 நியமத்தின்படி, பந்தி 5 இலுள்ள சீர்மதிப்புக்கான சொற்பொருள் விளக்கம் திருத்தப்பட்டுள்ளதுடன், திருத்தப்பட்ட பந்திகள் 26, 29, 32, 40, 48, 53, 53B, 78–80 மற்றும் 85B அத்துடன் நீக்கப்பட்ட பந்திகள் 36–39, 42–47, 49, 51 மற்றும் 75(d). உரிமமொன்று இத் திருத்தங்களை SLFRS 13 நியமத்தினைப் பிரயோகிக்கும் போது பிரயோகிக்கும்.

85ஈ செத்தெம்பர், 2014 இல் வழங்கப்பட்ட *SLFRS நியமங்களுக்கான மேம்பாடுகள்* பந்தி 6 மற்றும் 84க்கு முன்பாகவுள்ள தலைப்புக்கள் சேர்க்கப்பட்டுள்ளதுடன் பந்திகள் 14அ மற்றும் 84 அ ஆகியன சேர்க்கப்பட்டுள்ளன. உரிமம் இத் திருத்தங்களை 01 சனவரி 2014 அன்று அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த காலப்பகுதிகளுக்குப் பிரயோகிக்கும். முன்னைய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. உரிமம் ஒன்று இத் திருத்தங்களை அவ்வாறு முன்னயை காலப் பகுதிகளுக்குப் பிரயோகித்தால் அந்த விடயம் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

85உ ஜுன், 2014 இல் வழங்கப்பட்ட SLFRS 15 *வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்* நியமத்தின்படி, பந்தி 3(ஆ), 9, 67 மற்றும் 70 ஆகியன திருத்தப்பட்டுள்ளன. உரிமமொன்று இத் திருத்தங்களை SLFRS 15 நியமத்தினைப் பிரயோகிக்கும் போது பிரயோகிக்கும்.

85ஊ ஏப்ரல், 2016 இல் வழங்கப்பட்ட SLFRS 16 நியமம். LKAS 40 நிமயத்தின் நோக்கெல்லை முதலீட்டு ஆதனத்தின் சொற்பொருள் விளக்கம் உரிமை கொள்ளப்பட்ட முதலீட்டு ஆதனம் மற்றும் பயன்பாட்டு உரிமைச் சொத்தாக குத்தகை பெறுனரால் வைத்திருக்கப்படும் முதலீட்டு ஆதனங்கள் ஆகிய இரண்டையும் உள்ளடக்கும் வகையில் திருத்தப்பட்டது. SLFRS 16 திருத்தப்பட்ட பந்திகள் 5, 7, 8, 9, 16,20, 30, 41, 50, 53, 53A, 54, 56, 60, 61, 62, 67, 69, 74, 75, 77 மற்றும் 78, சேர்க்கப்பட்ட பந்திகள் 19அ, 29அ, 40அ மற்றும் 84ஆ மற்றும் அவற்றுடன் தொடர்புபட்ட தலைப்புக்கள், நீக்கப்பட்ட பந்திகள் 3, 6, 25, 26 மற்றும் 34. உரிமமொன்று இத் திருத்தங்களை SLFRS 16 நியமத்தினைப் பிரயோகிக்கும் போது பிரயோகிக்கும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.